விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 337 ஐப்பசி 12ஆம் நாள் திங்கட்கிழமை 29 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## இன்று விடுமுறையல்ல

கொழும்பு, ஒக். 29
இன்று அரச விடுமுறையென வெளியான தகவல் வதந்தியென தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று அரச விடுமுறை என்று வெளியான செய்தியில் எவ்வித >> 22

## அரசமைப்புக்கு அமைவாகவே ரணிலை பதவி நீக்கினேன்

### நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் மைத்திரி தெரிவிப்பு

- பிணைமுறி மோசடியாலேயே நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது
- என் மீதான கொலை முயற்சி தொடர்பான விசாரணையில் அக்கறையில்லை
- ரணில் முரட்டுத்தனமாக, தன்னிச்சையாகச் செயற்பட்டார்
- பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு மாற்றுத் தீர்வு மகிந்தவே

>> 25

## தொடரும் அரசியல் நெருக்கடி: துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் சாவு

### தென்னிலங்கையில் பதற்றம்

கொழும்பு, ஒக். 29
அடுத்தடுத்த அரசியல் பரபரப்பு நடந்து வரும் நிலையில், அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் உயிரிழந்தார். தெமட்டகொடையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன >> 22



### பெற்றோலிய திணைக்கள ஊழியர்கள் புறக்கணிப்பு

>> 22

# எந்த நேரத்திலும் தேர்தல் நடக்கலாம்

## தயாராகுமாறு மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 29
எந்த நேரத்திலும் தேர்தல் நடக்கலாம். அதற்குத் தயாராக இருங்கள். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். 25 மாவட்டங்களினதும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும், தேர்தல்கள் ஆணைக் >> 22

## கேபிளால் மின் தாக்கி 55 வயது பெண் சாவு

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணத்தில் மின்சாரம் தாக்கிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். தொலைக் காட்சி கேபிளை இணைக்க முயன்றபோது மின் தாக்கியது என்று கூறப்படுகின்றது. >> 25

## சிற்றுண்டிகளின் விலைகளை குறைக்க நேற்றுத் தீர்மானம்

சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் அறிவிப்பு >> 21

## உடனடியாகத் தேர்தல் நடத்துவோம்

மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு >> 23

## இலங்கை விவகாரங்களை உன்னிப்பாக நோக்குகிறோம்

இந்தியா நேற்று அறிவிப்பு >> 22

## நானே இப்படியொரு தீர்மானம் எடுத்திருப்பேனா தெரியாது

மைத்திரி குறித்து மகிந்த >> 22

## மைத்திரியைக் கொல்ல முயன்றது ரணில்தான்

நாமல் குமார பகீர் தகவல் >> 21

## அலரிமாளிகைக்கான மின்சாரம் துண்டிப்பு

வெளியேற மாட்டோம் என்கின்றனர் ஐ.தே.கவினர் >> 23

## கூட்டமைப்பை வளைத்துப்போடுவதில் இரு தரப்பும் மும்முரம்

நாமல், மகிந்த, சம்பந்தனை நேற்று நேரில் சென்று சந்திப்பு >> 25

## நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு சபாநாயகருக்கு சம்பந்தன் கடிதம்

>> 25

## பாதுகாப்புச் செயலராக பதவியேற்காராம் கோத்தா

>> 23

## மகிந்தவின் மீள்வருகையானது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

தமிழ் அரசுவின் தலைவர் மாவை. எம்.பி. தெரிவிப்பு >> 25

## மகிந்தவுக்காக கிளிநொச்சியில் நேற்றுப் பொங்கல்



>> 23

## எம்.பிக்களுக்கு ரூ. 60 கோடி பேரம்

>> 23



## பல்டி அடித்தார் சேனநாயக்க


ஐ.தே.கவுடன் சங்கமம் >> 22

## பெரும்பான்மையை நிரூபிக்கும் வரை ரணிலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்

தனது கருத்துக்களை கேட்காமல் நாடாளுமன்றத்தை முடக்கியமைக்கும் கரு ஜயசூரிய கண்டனம் >> 25

## மகிந்தவைச் சந்தித்த ஐ.தே.கவினர்

சம்பிரதாய சந்திப்பு என்று அவர்கள் விளக்கம் >> 22



## மாறியது தோரணை

கொழும்பு, ஒக். 29

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை சென்றிருந்தார். அப்போது அவர் குட்டைக் காற்சட்டை அணிந்திருந்தார்.

அதைச் சட்டத்தரணி பிரேம்நாத் தொலவத்த தனது முகநூலில் பதிவிட்டிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுடன் இன்றும் (நேற்று) காலை உடற்பயிற்சியை அடுத்து பொலிஸ் நிதி மோசடி விசாரணைப்பிரிவுக்கு வருகை தந்தோம், என்று அவர் முகநூலில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு, நாமல் ராஜபக்ச பல தடவைகள் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார். அப்போது, இது அரசியல் ரீதியாக தம்மை பழிவாங்குவதற்கு அமைக்கப்பட்டது என்று கூறியிருந்தார். தற்போது, மகிந்த ஆட்சி மலர்ந்துள்ள நிலையில், நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு 'விசிட்' மேற்கொண்டுள்ளார். (5)

## அலரிமாளிகையிலிருந்து
# தேர்தல் முடிவோடு நான் வெளியேறினேன் ஆனால் இன்று நிலமை அப்படியில்லை
### மகாநாயக்கர்களிடம் கூறினார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஒக். 29

2015 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் முடிவு வெளியானதும் அலரிமாளிகையிலிருந்து நான் வெளியேறினேன். ஆனால்இன்று அவ்வாறான நிலமை காணப்படவில்லை. நாடாளுமன்றத்தில் எங்களுக்கு 120 உறுப்பினர்களின் ஆதரவு காணப்படுகின்றது. நான் அரசமைப்புக்கு அமைவாகவே பதவியேற்றுள்ளேன். இவ்வாறு தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர், கண்டி தலதா மாளிக்கைக்கு மகிந்த ராஜபக்ச நேற்றுச் சென்றார். அங்கு வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹெகலிய ரம்புக்வெல, ரொஹான் ரத்வத்த, திலும் அமுனுகம, மகிந்தானந்த அழுத்கமகே ஆகியோரும் சென்றிருந்தனர்.



அதனையடுத்து மல்வத்து பீட பீடாதிபதி வணக்கத்துக்குரிய திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல, அஸ்கிரிய பீட பீடாதிபதி வரக்காகொட ஸ்ரீ ஞனரத்ன தேரர் ஆகியோரைச் சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு கலந்துரையாடினார்.

இதன்போது, கடந்த காலத்தில் தங்களைச் சூழ உள்ளவர்களால் சில மனக்கசப்பான விடயங்கள் நடைபெற்றமையால் தாங்கள் ஆட்சி அதிகரத்தினை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலமை ஏற்பட்டது. நீங்கள், பதவியில் இருந்தாலும் இல்லாது விட்டாலும் இந்த நாட்டுக்காக ஆற்றிய அளப்பெரிய அர்ப்பணிப்பை நாம் என்றும் மதிக்கின்றேம். கடந்த காலத் தவறுகளினால் ஏற்பட்ட அனுபவங்களைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்திட்டங்களை முன்னெடுங்கள்.

மைத்திரிபால சிறிசேன மிகமுக்கியமானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளார். அவருடன் இணைந்து நாட்டினை தங்களும் நம்பிக்கையான பயணத்தை முன்னெடுக்க வேண்டும். நாட்டில் அமைதியானதும் உறுதிப்பாடானதுமான அரசியல் நிலமைகளையும் விரைவில் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மகாநாயக்க தேரர்கள் கேட்டுக்கொண்டனர். -

அவர்களிடம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனவே என்னை அழைத்து பதவியை பெற்றுக்கொள்ளுமாறு கோரினார். நாம் ஒரு கட்சியில் பணியாற்றியவர்கள் என்ற அடிப்படையில் அதனைப் பெற்றுக்கொண்டேன் - என்றார். (5,31)

## அலரிமாளிகையில் ரணில் இருப்பது சட்டவிரோதமானது
### அரச வளமுறைகேடு தொடர்பில் அவர் கைதாவார் மகிந்த அணி

கொழும்பு, ஒக். 29

பதவி நீக்கப்பட்ட ரணில் அலரிமாளிகையிலிருந்து வெளியேறாவிட்டால், அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்படுவார். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

மகிந்தவுக்கு ஆதரவாக 120இற்கும் அதிகமாக உறுப்பினர்கள் தமது ஆதரவை தெரிவித்துள்ளர்கள். பெரும்பான்மையை நிருபிப்பது குறித்து விடயங்கள் முடிவுக்கு வந்து விட்டன. நவம்பர் மாதம் 9ஆம் திகதி ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கினால் புதிய அரசின் கொள்கைகளுக்கு அமைவான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படப்போவதில்லை. புதிய அரசு உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதும் கடினமாக இருக்கும். புதிய அமைச்சரவை நியமனத்தின் பின்னர் புதிய வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும். நவம்பர் மாதம் 16ஆம் திகதி வரையில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சபாநாயகரை நாம் மதிக்கின்றோம். சபாநாயகருக்கு உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பிலேயே உரிமைகள் உள்ளன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருக்கு பெரும்பான்மை தொடர்பாக பேசுவதற்கு உரிமை இல்லை.

ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையிலிருந்து வெளியேறாது விட்டால் அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியவர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காவார். அரச சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிரான சட்டம் அவருடைய தலைமையில்தான் நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தமையும் அவருக்கு நினைவிருக்கும் என்றார்.

(5,71)

## அரசியல் கைதிகளை சந்திக்கிறார் நாமல்?

கொழும்பு, ஒக். 29

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையிலான குழுவினர் கொழும்பில் உள்ள மகசின் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று சிறப்பு சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.



சிறைச்சாலைகளில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கெனவே சந்திப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச அண்மையில் பொறுப்பேற்றுள்ள நிலையில் பல்வேறு அரசியல் மாற்றங்கள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனையடுத்து நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விவகாரம் குறித்து காத்திரமான நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்காக இந்தச் சந்திப்பு மேற்கொளளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(5)

## தொலைத் தொடர்பு முடக்கப்படுகின்றதா?

கொழும்பு, ஒக். 29

நாட்டின் தொலைத் தொடர்புகளை முடக்கும் முனைப்புக்களில் மகிந்த அரசு ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.



இலங்கை தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகத்தினால் 3ஜீ மற்றும் 4ஜீ இணைப்புக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். மக்கள் கிளர்ச்சியை தடுக்கும் நோக்கில் இவ்வாறான முனைப்புக்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புக்கு முரணான வகையில் நீக்கப்பட்டுள்ளமையை எதிர்த்து மக்களினால் செய்யப்படக்கூடிய கிளர்ச்சியை தடுக்க இணைய சேவையை முடக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படு வதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கீச்சகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (5)

## சுகாதார அமைச்சு பணியகத்துக்கு சீல்
### மைத்திரியின் அதிகாரிகள் அதிரடி

கொழும்பு, ஒக். 29

பொலிஸ் அதிகாரிகளுடன் சென்ற அரச தலைவர் செயலக அதிகாரிகள் குழுவொன்று, சுகாதார அமைச்சின் பணியகத்தை நேற்றுமுன்தினம் முத்திரையிட்டு மூடியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இருந்து சில ஆவணங்களை அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் அகற்ற முயற்சிப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அரசியல்வாதி ஒருவரின் எடுபிடிகளோ சுகாதார அமைச்சின் ஆவணங்களை அகற்ற முயன்றதாக, அரச தலைவர் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரச மருத்துவத் துறை நியமனங்கள் மற்றும் மருந்துகள் கொள்வனவு தொடர்பான, சில ஆவணங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலரால் அகற்றப்பட்டிருக்கக் கூடும் என்றும் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அதேவேளை, அரச தலைவரின் தற்போதைய நகர்வுகளை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கடுமையாக விமர்சித்து வரும் நிலையில், அவரைக் குறிவைத்தே இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சந்தேகங்கள் எழுந்துள்ளன. (5)

## அரச ஊடகங்களுக்கு புதிய தலைவர்கள்

கொழும்பு, ஒக். 29

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவராக சரத் கோன்கஹ நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை சுயாதீன தொலைக்காட்சி மற்றும் இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவராக பேராசிரியர் சோமரத்ன திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பதில் தலைவராக வசந்த பிரியா ராமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். (5)

# கொலைச் சதியில் பொன்சேகாவுக்கு தொடர்பு உள்ளது

## மைத்திரி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 29

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தன்னை கொலை செய்ய முன்னெடுக்கப்பட்ட சதி முயற்சி காரணமாகவே மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து ஆட்சியமைக்கத் திட்டமிட்டதாகத் தெரிவித்துள்ளார். இந்தக் கொலைச் சதி முயற்சி குறித்த விசாரணைகளில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு தொடர்பு உள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரச தலைவர் செயலகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி விட்டு, மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தமைக்கான காரணங்களை, இந்தக் கூட்டத்தில், அரச தலைவர் மைத்திரி தெளிவுபடுத்தியுள்ளார்.

கூட்டு அரசை அமைத்து ஒரு ஆண்டுக்குள்ளாகவே, ரணில் விக்கிரமசிங்கவுடன், பொருந்தாத திருமணத்துக்குள் நுழைந்து விட்டதாக நன்றாக உணர்ந்து கொண்டேன்.

அவர்களுடன் எமக்கு கலாசார வேறுபாடுகள், மாத்திரமன்றி, பிணைமுறி விவகாரம், பொருளாதாரத்தைக் கொண்டு வருவதில் தோல்வியுற்றமை, உள்ளிட்ட வேறு காரணங்களும் கூட, இந்த பொருந்தாத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, புதிய அரசை அமைத்ததற்குக் காரணமாகும் என்று தெரிவித்துள்ளார்.

என்னைக் கொல்வதற்கான சதி முயற்சிகள் குறித்த விசாரணைகளின் போது முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத்பொன்சேகாவுக்கு தொடர்புள்ளமை குறித்த விவரங்கள் வெளியாகியிருந்தன. அரசியல் தலையீடுகள் காரணமாக அதனை மறைத்து விட்டனர்.

விசாரணைகளின் போது வேறு சில முக்கிய நபர்களுக்கும் தொடர்பிருப்பதும் தெரிய வந்தது என்று தெரிவித்துள்ள மைத்திரிபால விசாரணைகள் இடம்பெறுவதால் நான் மேலதிக விவரங்களை வெளியிட விரும்பவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். முழுமையான விவரங்கள் தெரியவரும்போது மக்கள் அதிர்ச்சியடைவார்கள் - என்றார். (5)

# நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதே எமது நோக்கம்

## கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஒக். 29

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், முடிந்தளவு விரைவாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதே தமது இலக்கு என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை எம்மிடம் உண்டு. அதனை நிரூபிக்கத் தயாராக உள்ளோம். எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும். பெரும்பான்மை விடயத்தில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. முடிந்தால் ரணில் தனது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டட்டும்.

எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதே எமது இலக்கு. அதற்கான தயார்படுத்தல்களை முன்னெடுப்போம்.

அடுத்த ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மூன்று மாத காலத்துக்கான கணக்கு வாக்கெடுப்பொன்றை (வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப்படுவது வரையில் நிதிச் செயற்பாடுகளை முன்னெடுக்க முன்வைக்கும் அறிக்கை) முன்வைக்கவுள்ளோம் என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ரணிலின் பதவி நீக்கம் அரசமைப்புக்கு அமைவானது என்று தெரிவித்துள்ளார். அரசமைப்பின் சிங்கள மொழி மூலத்தில் இந்த விடயம் தெளிவாகக் காணப்படுகின்றது. ஆங்கில மொழியில் இதில் மயக்கம் உள்ளது. அரசமைப்பில் தெளிவுபடுத்தல் தேவைப்படும்போது சிங்களமே மேலோங்கும். எனவே மகிந்தவின் நியமனம் அரசமைப்புக்கு உட்பட்டே நடந்துள்ளது - என்றார். (5)

# ரணில் விக்கிரமசிங்கவே தலைமை அமைச்சர்

## கூறுகிறார் ருவான் விஜயவர்தன

கொழும்பு, ஒக். 29

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இலங்கையின் சட்டரீதியான தலைமை அமைச்சர். அவருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளது.

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமக்கு மிகவும் தேவையாக உள்ளது நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதாகும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டின் சட்டத்தை ஓரமாக வைத்து விட்டு அரசமைப்புக்கு முரணாக மகிந்தவை தலைமை அமைச்சராக்கியுள்ளார்.

இது சட்டத்துக்கும், அரசமைப்புக்கும் எதிரானது. எமக்கு கட்சியை விட நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் வெளியே வரவேண்டும் என்றார். (5)

# மகிந்தவின் மீள் வருகை மனித உரிமை தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

## மனித உரிமை கண்காணிப்பகம்

கொழும்பு, ஒக். 29

இலங்கையின் புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச பதவியேற்றுள்ளமை கடந்த காலத்தில் அவரது ஆட்சியின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலக் குற்றங்களுக்கு நீதி வழங்கப்படாத நிலையில் ராஜபக்ச மீண்டும் அதிகாரத்துக்கு வந்துள்ளமை இலங்கையின் மனித உரிமை நிலவரத்தின் எதிர்காலம் குறித்து அச்சமேற்படுத்தும் கரிசனைகளை ஏற்படுத்தியுள்ளது.

ராஜபக்ச அரசின் காலத்தில் போர்க் குற்றங்களை புரிந்தவர்களுக்கு நீதி வழங்குவதற்குத் தற்போதைய அரசு தவறியுள்ளமை காரணமாக கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மீண்டும் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சூழல் மீண்டும் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக அழுத்தங்கள் இன்றி செயற்பட்டு வந்த ஊடக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புகள் மீண்டும் அச்சம் நிலவும் காலத்தினை எதிர்கொள்ளவேண்டிய நிலை குறித்து அச்சமடைந்துள்ளன.

ராஜபக்ச தலைமை அமைச்சரான பின்னர் அவரது ஆதரவாளர்கள் அரச ஊடகங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளார்கள். ராஜபக்சவின் நியமனத்தை ரணில் விக்கிரமசிங்க எதிர்த்துள்ளதை அரச ஊடகங்கள் தெரிவிக்கவில்லை - என்றார். (5)

# அரசியல் குழப்பங்களில் சீனா தலையிடாதாம்

கொழும்பு, ஒக். 29

இலங்கையின் உள்நாட்டு அரசியல் குழப்பங்களில் சீனா தலையீடு செய்யாது என்று, கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்துடன் நெருக்கமான தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

றொய்ட்டர்ஸ் செய்திச் சேவை இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர், மகிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து பின்னர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, உள்நாட்டு அரசியல் குழப்பங்களில் சீனா தலையீடு செய்யாது என்று, கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்துடன் நெருக்கமான தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

# மக்கள் ஆணையை தவறாகப் பயன்படுத்தியுள்ளார் மைத்திரி

## சட்டநிபுணர் ஜயம்பதி சாடல்

கொழும்பு, ஒக். 29

ரணில் விக்ரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கியமை அரசமைப்புக்கு முரணானது. நல்லாட்சி அரசுக்கு மக்கள் வழங்கிய ஆணையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தவறாகப் பயன்படுத்திவிட்டார். இவ்வாறு சட்டநிபுணரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அரசமைப்புக்கு முரணாக தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் நீக்கப்படவில்லை என்று கூறுபவர்கள் முழுமையாக அரசமைப்பை ஆராயவில்லை. அரசமைப்பை அரசியல் தேவைக்காக மாற்றியமைத்து விட்டார்கள். 19ஆவது திருத்தச் சட்டத்தில் அரசமைப்பின் 42ஆம் அத்தியாயத்தில் இந்த விடயங்கள் பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொள்பவரை அரச தலைவர் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும். 42(4) இதனைக் குறிப்பிடுகின்றது. 46(2) தலைமை அமைச்சர் ஒருவரின் பதவி நீக்கம் தொடர்பில் குறிப்பிடுகின்றது. நாடாளுமன்றத்தின் அமைச்சரவை செயற்படும் வரையில் தலைமை அமைச்சர் ஒருவர் பதவி வகிக்க முடியும். பதவிக் காலத்தில் அவரே தன்விருப்பின் அடிப்படையில் விலகலாம். அல்லது நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தினைக் கொண்டு வந்து அதனை நிறைவேற்றும் பட்சத்தில் பதவி விலக முடியும் என்றே 19 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சராக நியமித்தவரே பதவி நீக்கம் செய்யலாம் என்று குறிப்பிடவில்லை. 18ஆம் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு வாதிடுபவர்கள் சுயநினைவு அற்றவர்கள் என்றே குறிப்பிட வேண்டும். இந்த நிலையில் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கும் அதிகாரமோ, இடைப்பட்ட காலத்தில் அமைச்சரவையினை கலைக்கும் அதிகாரமோ அரச தலைவருக்கு கிடையாது. தற்போது இடம்பெற்ற விடயங்கள் இடம்பெறக் கூடாது என்பதற்காகவே நாடாளுமன்றம் அதிக அதிகாரமுடையதாக மாற்றியமைக்கப்பட்டது என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பிய போது, அதற்குப் பதிலளிக்காமல் அவர் எழுந்து சென்று விட்டார். (5,61)

## மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர்

# கால்வாய்களைத் துப்புரவாக்குவதற்கு உள்ளூராட்சிச் சபைகளில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஒக். 29**

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழைக் காலம் வருவதற்கு முன்னர் பிரதேசத்தில் உள்ள கழிவு நீர் ஓடுகின்ற பாதைகளைத் துப்பரவு செய்வதற்கு அநேகமான உள்ளூராட்சிச் சபைகள் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கழிவுநீர் ஓடுகின்ற பாதைகளில் அடைப்பும், தடங்கலும் இருந்து வெள்ள நீர் தேங்கி நிற்கின்ற அசம்பாவிதங்கள் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளன. இதனால் டெங்குத் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பும், டெங்குத் தொற்றுக்களும் கடந்த மழைக்காலங்களில் அதிகம் இருந்தன என்று பதிவுகள் உள்ளன. ஆகவே, இந்த மழைக்காலத்தில் மக்களுக்கு ஏற்படக்கூடிய சுகாதார நெருக்கடிகளைத் தவிர்க்கும் பொருட்டு மழைக் காலத்துக்கு முன்னர் கழிவுநீர் ஓடுகின்ற பாதைகளைத் துப்பரவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை, வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, யாழ்ப்பாணம் மாநகர சபை, சாவகச்சேரிப் பிரதேச சபை போன்ற பலசபைகள் கழிவுநீர் ஓடுகின்ற பாதகளைச் சீராக்குவது தொடர்பில் பல தீர்மானங்களை மேற்கொண்டுள்ளன. அவற்றுக்கான பணிகளையும் ஆரம்பித்துள்ளன. ஏனைய சபைகளும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளு வதற்குத் தயார் நிலையில் உள்ளன என்று தெரிய வருகிறது. (ம-7)

## கலை விழா

தேன்மராட்சி ஒக். 30

அல்லாரை தெற்கு அபிராமி பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 15ஆவது ஆண்டு நிறைவையொட்டிய கலை விழாவும் சிறுவர் மதிப்பளிப்பும் நாளைமறுதினம் பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாலர் பகல் பராமரிப்பு நிலைய பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் எ.பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பனை தென்னை வள. அபிவிருத்திச் சங்க கல்வி அலுவலர் தி.விஜயதீபன், கிராம அலுவலர் மோ:பிரகாஸ் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ற.கல்பனா, முன்பள்ளிகளின் கச்சாய் குடும்பத் தலைவி செ.ஆனந்தி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9,159)


## கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசில் நாள்

கொடிகாமம், ஒக். 30

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வுகள் பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளருமான கு.நந்தகுமார் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், பாடசாலையின் பழைய மாணவனும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய ஆசிரியருமான க.அருளானந்தகுமார், பாடசாலையின் பழைய மாணவனும் முல்லைத்தீவு - அம்பாள்புரம் தமிழ் வித்தியால்ய ஆசிரியருமான ம.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதிப்புறு விருந்தினர்களாக பழைய மாணவனும் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற அபிவிருத்தி உத்தியோகத்தருமான சு.ஸ்ரீகரன், பழைய மாணவனும் கரவெட்டிப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தருமான சு.சுமன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-9,159)



சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கடந்த வாரம் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. (ம-9)

## கந்தபுராண விரிவுரை

யாழ்ப்பாணம், ஒக். 29

வாரந்தோறும் செவ்வாய்க் கிழமைகளில் கந்தபுராண விரிவுரை மாலை 6.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை சின்மயா மிசன் ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகிறது. அந்த வரிசையில் நாளைமறுதினம் 'சிவயாத்திரை இரகசியம்' என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறவுள்ளது. (ம-8)

## வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 29

நல்லூர் தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்கள் 15 பேருக்கு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரெத்தினத்தின் நிதி ஒதுக்கீட்டில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தில் நிலைய தலைவர் ஐங்கரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்தே இந்தத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. யாழ். மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் நல்லூர் பிரதேச சபையின் உப தவிசாளர் ஜெயகரன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-17)

## ஆடைகள் காட்சிப்படுத்தலும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

தென்மராட்சி, ஒக். 29

சாவகச்சேரி விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தால் தென்மராட்சி கிழக்குப் பிரதேசப் பெண்களுக்கு நடத்தப்பட்ட இலவச தையல் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி பயிற்சிகளை நிறைவு செய்த இரண்டாம் மூன்றாம் அணிகளைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்ட ஆடை வகைகள் காட்சிப்படுத்தலும் பயிற்சிகளை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கச்சாய் அ.த.க. பாடசாலையில் நேற்று இடம்பெற்றது.



அமையத்தின் தலைவர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை அதிபர் கா.குணசிங்கம், கிராம அலுவலர் க.ஜனகன் அபிவிருத்தி அலுவலர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-9,159)



## பாதுகாப்பான உணவுகள் தொடர்பான கருத்தரங்கு


சாவகச்சேரி, ஒக். 30

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் சமையல் வேலைகளில் ஈடுபடுவோருக்கான 'பாதுகாப்பாக உணவுகளைக் கையாளுதல்' தொடர்பான கருத்தரங்கு வலயக் கல்வி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கருத்தரங்கில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.அருட்குமரன், வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸ், விஞ்ஞானபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நிருபராணி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (ம-9)

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாரணர் குழுவினால் சாரணர்களின் தலைமைத்துவப் பண்பினை விருத்தி செய்யும் நோக்கமாக மூன்று நாள்கள் கொண்ட வதிவிடப் பயிற்சி முகாம் கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. பல்வேறு துறைசார்ந்த வளவாளர்கள் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சிகளை சாரணர்களுக்கு வழங்கினர். (ம)*





கிறீன் பில்ட் சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை முகாமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ம)

# மாவை களமிறங்காவிட்டால் முதல்வர் வேட்பாளராகுவேன்

## சி.வி.கே.சிவஞானம் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 28**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா முதல்வர் வேட்பாளராகக் களமிறங் காத இடத்து நான் களமிறங்குவேன். இதுவே எனது நிலைப்பாடு என வடக்கு மாகாண முன்னாள் அவைத்தலைவர் சி.வி.கே.சிவ ஞானம் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண பேரவை செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந் திப்பிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண சபை தேர்தல் மிக விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு சார் பாக முதலமைச்சர் வேட்பளராக மாவை சேனாதிராசாவே களமிறங்க வேண்டும் என்பது எனதும் பலரதும் கோரிக்கை.



மாவை களமிறங்காத சந்தர்ப் பத்தில் நன் முதல்வர் வேட்பா ளராகக் களமிறங்குவேன் என்பதே எனது முடிவு. ஏனெ னில் இப்போது நாம் ஒரு தீர் மானத்துக்கு வந்துள்ளோம். கூட்டமைப்பின் முதலமைச் சர் வேட்பாளராக தமிழ் அர சுக் கட்சியைச் சேர்ந்த ஒரு வரே களமிறங்க வேண்டும். அவ்வாறு களமிறங்குபவர் கட்சியின் நீண்டகால உறுப் பினராக இருக்க வேண்டும். கட்சிக்கு வெளியில் இருந்து வருபவர்களால் என்ன நடக்கும் என்பதை இப்போது அனைவரும் உணர்ந்து இருப் பார்கள் - என்றார். (ம-8)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 28
வட இலங்கை சங்கீத சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம்மருதனார் மடத்தில் உள்ள சபை யின் மண்டபத்தில் எதிர் வரும் நான்காம் திகதி காலை10மணிக்குநடை பெறவுள்ளது.
சபையின் தலைவர் சு.சுந்தரசிவம்தலைமை யில் இந்தப் பொதுக்கூட் டம் நடைபெறவுள்ளது. அனைத்து உறுப்பினர் களையும் வருகை தரு மாறுஏற்பாடாளர்கள்அறி வித்துள்ளனர். (ம-9)

## உவர்நீராக மாறிய கிணறை நன்னீராகமாற்றநடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 29
உவர்நீராக மாறிய கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய நன்னீர் கிணற்றை நீர்வள சபையின் உதவியுடன் மீண்டும்நன்னீர் கிணறாக மாற்ற உரிய நடவடிக்கைமேற் கொள்ளப்பட்டு வருவதாக மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
உவர்நீராக மாறிய இந்தக் கிணற்றை நிர்வாக சபை அதிகா ரிகள்நேரில்வருகைதந்துபார்வையிட்டுசிலஆலோசனை களை வழங்கினார்கள். குறிப்பாக இந்தக் கிணற்றுக்கு அருகில் மாதர் அபிவிருத்தி சங்கத்தால் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றின் ஆழம் அளவுக்கதிகமாக இருப்ப தால்த்தான் இந்தக் கிணறு உவர் நீராக மாறியதற்கு கார ணம்என்றும்சுட்டிக்காட்டியுள்ளனர். இதன்படிஅடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன - என்றார். (ம-17)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 28
ஆறாம்வகுப்புமாணவர் களுக்காக வீ.குகநாதன் மற்றும் எஸ். வீ. பால முரளி ஆகியோர் இணைந்து உருவாக் கிய கணிதபாட புதிய பாடத்திட்டத்துக்கு அமை வான ஆங்கில மொழி மூல நூல் வெளியீடு கொக்குவில்பொதுநூலக மண்டபத்தில் இன்று இடம்பெறவுள்ளது.
பிரதேசசபைத்தவிசாளர் நா.தியாகமூர்த்தி தலை மையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப் பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தர சிவம், சிறப்பு விருந்தின ராக நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ். சுதர்சன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். நூலின் முதற்பிரதியை ஹற்றன் நஷனல் வங்கி யின் சுன்னாகம் கிளை முகாமையார் எஸ். சுரேஷ்குமார் பெற்றுக் கொள்வார். நூலின்மதிப் பீட்டுரையினை ஓய்வு நிலை கணித பாட உத விக்கல்விப்பணிப்பாளரும் ஆறுதல்நிறுவனஆலோ சகருமான சி.சுகுமாரன் நிகழ்த்தவுள்ளார். (ம-9)

## உலக உளநல நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணக் கல்வி வலயத் தின்உலகஉளநலதினம்கோப் பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அண்மையில்நடைபெற்றது. பிரதிக் கல்விப் ப்ணிப்பாளர் த.பால்ராஜ் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. முதன்மை விருந்தினராக மருத்துவக் கலாநிதி இ.சிவசங் கர்கலந்துகொண்டார். (ம)



## வாசிப்பு மாதத்தை முன்னிட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி, ஒக். 29
சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் மற்றும் மீசாலை பொதுநூலகங்களில்தேசியவாசிப்புமாதத்தையொட்டிதரம் 1தொடக்கம்தரம்13 வரையிலான மாணவர்களுக்கு இடை யில் எதிர்வரும் ஏழாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி பல் வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
தரம்1, 2ஆகிய வகுப்புமாணவர்களுக்கான ஆரம்பப்பிரிவு போட்டிகளுக்குதலாஐந்துமாணவர்கள்வீதமும்தரம் 3, 4, 5ஆகியவகுப்புமாணவர்களைக்கொண்டகீழ்ப்பிரிவு, தரம் 6, 7, 8 ஆகிய வகுப்பு மாணவர்களைக் கொண்ட மத்திய பிரிவு, தரம்9, 10, 11ஆகியவகுப்புமாணவர்களைக்கொண்ட மேற்பிரிவு தரம் 12, 13 ஆகிய வகுப்பு மாணவர்களைக் கொண்டஅதிமேற்பிரிவுஆகியவற்றில்தலா3மாணவர்கள் வீதமும் போட்டிகளில் பங்குபற்றலாம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. போட்டிகளில்பங்குபற்றவுள்ளமாணவர்களின் விபரங்கள் நாளைமறுதினத்துக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.
எதிர்வரும் ஏழாந் திகதி பிற்பகல் 2 மணிக்கு அனைத்துப் பிரிவினருக்குமான சித்திரப் போட்டிகளும் , எட்டாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளும், ஒன்பதாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு தரம் 4 வகுப்பு மாணவர்களுக்கு நுண்ணறிவும் பொது அறிவும் போட்டியும், பத்தாம் திகதி காலை 9.30 மணிக்கு தரம் 2 மாணவர்களுக்கு வாசிப்புப் போட்டியும் நண்பகல் 11.30 ம்ணிக்கு தரம் 5 வகுப்பு மாண வர்களுக்குபேச்சுப்போட்டியும் இடம்பெறும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ம-9,159)



மறவன்புலவு இணைந்தகரங்கள் அமைப்பால் வாணிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இணைந்த கரங்கள் அமைப்பின் செயற்பாட்டாளர் திருமதி கருணாகரன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது. (ம-159)

## மதிப்பளிப்பு நிகழ்வு

கொடிகாமம், ஒக். 27
கெற்பேலி அ.த.க.பாடசா லையில் அதிபராகக் கட மையாற்றி சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசா லைக்குஇடமாற்றம்பெற் றுச் சென்ற பொ.நடேச லிங்கம்நாளைமறுதினம் மதிப்பளிக்கப்படவுள்ளார்.
வித்தியாலய முதல்வர் க.ஞானராசா தலைமை யில்நடைபெறவுள்ளஇந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்ம ராட்சிகல்வி வலய ஆரம் பக்கல்வி பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், சிறப்பு விருந்தினராக சாவகச் சேரி பிரதேச சபை உபத விசாளர் செ.மயூரன், மதிப்புறு விருந்தினராக கெற்பேலி கிராம அபிவி ருத்தி சங்கத் தலைவர் இ.சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள னர். (ம-159)



கண்டியில் அண்மையில் சாரணர் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. அரச தலைவர் விருதைப்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட சாரணர்களையும், சாரண ஆணையாளர்களையும் படத்தில் காணலாம். (ம)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஒக். 29
இலங்கைமின்சாரசபை யின் 49ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு எதிர்வரும் வியாழக் கிழமை நடைபெறவுள் ளது.
யாழ்ப்பாணத்தில்உள்ள பிரதிப் பொதுமுகாமை யாளர் அலுவலகத்தில் காலை 9 மணி தொடக் கம் நண்பகல் 2 மணி வரை இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம)

# பல்கலை மாணவர்களுக்கு மடிக்கணினியும் உதவிகளும்

முல்லைத்தீவு, ஒக். 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து தெரிவாகி பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்க ஒரு தொகுதி மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.



முல்லைத்தீவு மாவட்டத்தில் தொண்டாற்றிவரும் வற்றாநதி என்ற தொண்டு அமைப்பினர் தமது அலுவலகத்தில் வைத்து இவற்றை நேற்று வழங்கினர்.
அதன் தலைவர் விமல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதற்கட்டமாக 20 பல்கலைக்கழக மாணவர்களுக்குமடிக்கணிகளும், 20பல்கலை மாணவர்களுக்கு பண உதவியும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உபதவிசாளர் ரி.இரவீந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உதவிகளை வழங்கினார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் பல்கலைக் கல்வியைத் தொடர்ந்துவரும் மாணவர்களுக்குத் தொடர்ந்தும் மடிக்கணினிகள் மற்றும் உத்விகள் வழங்கிவைக்கப்பட்டன என்று வற்றாநதி அமைப்பின் தலைவர் விமல் தெரிவித்துள்ளார். (4,ரி3)



## முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு போசாக்குத் தொடர்பான செயலமர்வு

சாவகச்சேரி, ஒக். 29
தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிகளின் ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்குச் சிறுவர் போசாக்குத் தொடர்பான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
பிரதேச செயலக மண்டபத்தில், தென்மராட்சிப் பிரதேச செயலக திட்டமிடல் அலகினரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில் போசாக்குத் தொடர்பான கருத்துரைகளை சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள பொது சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரனும் மருத்துவர் கே.ஐங்கரனும் நிகழ்த்தினர். பிரதேச செயலகத்தினர் ஏற்கனவே பிரதேச செயலக வெளிக்கள அலுவலர்கள், பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோருக்கு போசாக்குத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வுகள் நடத்தியுள்ளனர். (4,9)

## கிழக்கில் தமிழ் இலக்கிய விழா சிறப்பாக இடம்பெற்று நிறைவு பெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 29
கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் முன்னெடுத்த தமிழ் இலக்கிய விழாவின் நிறைவு நாள் நிகழ்வுகள் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றன.
கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வளர்மதி ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவின் காலை அமர்வு ஊடகவியலாளர் சி.குருநாதன் அரங்கு எனப் பெயரிடப்பட்டிருந்தது.
இதில் வரவேற்புரையை கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எம். நியாஸ் வழங்கினார். அரங்கத் திறப்புரையை திருகோணமலை முத்தமிழ் மன்றத்தின் தலைவர் கலாநிதி இரா.சிறிஞானேஸ்வரன் ஆற்றினார்.
சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தினர் வழங்கிய வழக்காடு மன்றம் இடம்பெற்றது.
'குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்கள்' என்ற பொருளில் இடம்பெற்ற வழக்காடு மன்றத்தில் வாதிகளாக சட்டத்தரணி ஜே.ரஞ்சித்குமார், விவசாய அமைச்சு உத்தியோகத்தர் ந.ஐங்கரன் ஆகியோரும்



பிரதி வாதிகளாக பல்கலைக்கழக மூத்த உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா, சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராசா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.
நீதிவழங்குநராக தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் பங்கேற்றார்.
நிகழ்வில் விருந்தினராக கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர். (4)

## யாழ்.சிறைச்சாலையில் உயிர்மாய்க்க முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாண சிறைச்சாலையில் கைதி ஒருவர் தவறான முடிவெடுக்க முயற்சித்து யாழ்ப்பாண போதான மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கோப்பாயில் கடந்த மாதம் உந்துருளி திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவரே, அங்கு மலசல கூடத்துக்குள் தூக்கிட்டு உயிர் மாய்க்க அவர் முற்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்த ஏனைய கைதிகள் அதனைக் கண்டு தடுத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்க அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதான மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
மேலதிக விசாரணை இடம்பெறுகிறது என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (4.8.106)

## 29 தங்கக் கட்டிகளை கடத்தினாரென கட்டுநாயக்கவில் இந்தியப் பெண்கைது

கொழும்பு, ஒக். 29
சட்டவிரோதமாக 29 தங்கக் கட்டிகளைச் சீனாவுக்குக் கொண்டுசெல்ல முயற்சித்த இந்தியர் ஒருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலைய சுங்கப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
44 வயதுடைய குறித்த இந்தியப் பெண் தமது பயணப் பொதியில் மறைத்து வைத்து குறித்த தங்கத்தைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்து 160 கிராம் நிறையுடைய 20 தங்கப் பாளங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
அவற்றின் பெறுமதி 8 லட்சத்து 80 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (4)



## கிழக்கு மாகாண ஆளுநரும் ஐ.ஓ.சியின் தலைவரும் பேச்சு

கொழும்பு, ஒக். 29
கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹிதபோகொல்லாகமவும் இந்திய ஐ.ஓ.சி நிறுவனத்தின் தலைவர் ரன்ஞன் குமார் மகாபாத்ராவும் சந்தித்துப் பேசியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சிநேகபூர்வ சந்திப்பு கிழக்கு மாகாண ஆளுநரின் திருகோணமலையில் உள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கலந்துரையாடலின் பின் மதிய போசனமும் ஆளுநரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இறுதியில் ஆளுநருக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கப்பட்டது.
இதில் லங்கா ஐ.ஓ.சியின் திருகோணமலை முகாமைத்துவப் பணிப்பாளர் சியாம் பொக்ரா, ஆளுநரின் செயலாளர் அசங்க அபேவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டனர். (4)



## பேருந்து விபத்து: 27 பேர் காயம்

கொழும்பு, ஒக். 29
பொலன்னறுவை - மட்டக்களப்பு வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 27 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பொலன்னறுவை - மட்டக்களப்பு வீதியின் வெலிகந்த பிரதேசத்தில் விபத்து ஏற்பட்டுள்ளது.
வெலிகந்தவிலிருந்து பொலன்னறுவை நோக்கி பயணித்து கொண்டிருந்த பாரவூர்தியும், கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்து கொண்டிருந்த பேருந்துமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.
காயமடைந்தவர்கள் வெலிகந்த மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.
வெலிகந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4)

# தனியாரின் சகல கல்வி நிலையங்களையும் வவுனியாவில் ஞாயிறுகளில் மூடிவிடுங்கள்!

*அதற்குக் காரணத்தையும் விளக்குகிறார் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் சுஜன்*

**வவுனியா, ஒக். 29**

**வவுனியாவிலுள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்குமாறு வவுனியா வர்த்தகர் சங்கத்தலைவர் எஸ். சுஜன் கோரியுள்ளார். தாம் ஓய்விலிருந்தாலும் பிள்ளைகள் ஓய்வில் இல்லாத நிலையால் பயனில்லை என்று அவர் கூறுகிறார்.**



வவுனியா வர்த்தகர்க நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோரின் பிள்ளைகள் பலர் இந்தவருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றியிருந்தனர். அவர்களில் சித்தியடைந்தவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு வவுனியா நகரசபை பழைய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே சுஜன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவிலுள்ள தனியார் வகுப்புகளுக்கு ஞாயிறு தினங்களில் விடுமுறை வழங்குமாறு நிகழ்வில் கலந்துகொண்டுள்ள மேலதிக மாவட்டச் செயலர் வவுனியா தெற்கு கல்வி வலயப்பணிப்பாளர், நகரசபை தவிசாளர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். ஞாயிறு தினங்களில் நாங்கள் வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்று தெரிவித்து வர்த்தக நிலையங்கயை மூடினால் கூட வர்த்தகப்பிரமுகர்கள், ஊழியர்கள் தமது பிள்ளை களுடன் இருந்து நேரத்தைச் செலவிடுவதற்கு பிள்ளைகள் வீடுகளில் இருக்க முடியவில்லை.

பிள்ளைகளைத் தனியார் வகுப்புகளுக்கு அழைத்துச் செல்கின்ற ஒரு நிலையும் காணப்படுகின்றது. இது குறித்து நகரசபைத் தவிசாளரிடம் முன்னரும் கோரிக்கை விடுத்திருந்தேன். அதற்குச் சாதகமான பதில்கள் தருவதாகக் கூறியிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர், மேலதி மாவட்டச் செயலரிடமும் வர்த்தகர் சங்கம் சார்பாக வேண்டுகோளை நாங்கள் எழுத்து மூலமாக அறியத்தருகின்றோம். இதற்கு அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கைஎடுத்தால்பெற்றோர்களுக்கு அன்றைய நாள் விடுமுறை நாளாக அது அமையும். அரச பணியாளர்கள் என்றாலும் ஞாயிறுகளில் அவர்கள் வீடுகளிலிருக்க முடிவதில்லை. தமது பிள்ளைகளை ஏற்றிஇறக்கவேண்யடி நிலை ஏற்படுகின்றது. பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடமுடியவில்லை.

வர்த்தக சங்கம் சார்பாக விடுக்கப்படும் இந்தக் கோரிக்கையை ஏற்று நல்லதொரு முடிவைப் பெற்றுத்தருமாறு கோருகின்றோம் என்று தனது உரையில் கோரியுள்ளார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக அரசதலைவர் சட்டத்தரணியும் வர்த்தக சங்கத்தின் சட்ட ஆலோசகருமான மு.சிற்றம்பலம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன், மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், பொலிஸ் அத்தியட்சகர் எம்.தென்னகோன், வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன், நகரசபைச்செயலாளர் இ.தயாபரன், மருத்துவர் செ.லவன், தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் சிவரஞ்சனி, சட்டதரணி க.தயாபரன் மற்றும் வர்த்தகர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். மாணவர்கள் மாலை அணிவித்து அழைத்துவரப்பட்டனர். விருந்தி னர்களின் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைகளை வெளிக்காட்டிய 72 மாணவர்கள் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர். (4,110)

# தேசிய தமிழ்மொழித் தின போட்டிகளின் பரிசளிப்பு

கண்டி, ஒக். 29

கல்வி அமைச்சின் தேசிய தமிழ்மொழிப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு மாத்தளை இந்து தேசிய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

நிகழ்வில் கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஊர்வலங்கள், தேசிய ரீதியில் நடத்தபட்ட தமிழ்மொழி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு, அவர்களின் கலை கலாசார நிகழ்வுகள், அதிதிகள் மதிப்பளிப்பு, இந்திய கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மத்திய மாகாண ஆளுநர் கலந்துகொண்டார். சிறப்பு அதிதியாக இந்திய கொன்சியூலர், மாத்தளை மாவட்ட செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மாத்தளை வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.





# தர்க்கம் தகராறாகியதால் இளைஞர் குத்திக் கொலை

*கொழும்பு, ஒக். 29*

*உடுதும்பர நவந்தகல மெதமஹாநுவர பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*இருவருக்கிடையில் நேற்றிரவு ஏற்பட்ட தகராறு கைகலப்பாகிக் கொலையில் முடிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*நவந்தகல பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே கொல்லப்பட்டார்.*

*சந்தேக நபர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார். அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)*

# வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்புடையவரென தெல்லிப்பழையில் ஒருவர் வாள்களுடன் கைது

வாள்வெட்டுக்குழுவுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் 22வயதுடைய ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழையைச் சேர்ந்தவரே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். மானிப்பாயில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்திலும் அலைபேசியில் ஆவாக்குழுவின் முக்கிய உறுப்பினர்களுடன் தொடர்பைப் பேணிவந்தார் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுத் தேடப்பட்டு வந்தார்.

இரகசிய தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்படும்போது இரண்டு வாள்களும் மீட்கப்பட்டன என்று மானிப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (4,26)

# ஹசீஷ் போதைப்பொருளுடன் புதுக்கடையில் ஒருவர் கைது

கொழும்பு. ஒக். 29

வாழைத்தோட்டம் புதுக்கடை பிரதேசத்தில் ஹசீஷ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகக் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து 10 கிராம் ஹசீஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

23 வயதுடைய அவர் வெல்லம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்தவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

*யாழ். போதனா மருத்துவமனையின்*

# பாதுகாப்பு ஊழியர்களின் தலைவரை விசாரணைக்கு வருமாறு ரி.ஐ.டி அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் பாதுகாப்பு ஊழியர்களின் தலைவராகக் கடையாற்றும் ரிஷாந்தன் என்பவரை விசாரணைக்காக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நாளை செவ்வாய்க்கிழமை சமூகமளிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

பயங்கரவாத விசாரணை பிரிவின் மூலம் மேற்கொள்ளும் விசாரணைக்கு அமைவாக வாய்மொழி மூலமான வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ள 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைகாலை9.30மணிக்கு பயங்கரவாத விசாரணை பிரிவு புதிய செயலாளர் கட்டடத்தொகுதி இரண்டாம் ம்மாடிக்கு சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் என்ன காரணத்துக்காக அவர் அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (4,8)



*சம்பத் வங்கி சங்கானைக் கிளையின் 8 ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு சங்கானையில் அண்மையில் இடம்பெற்றது.*

# நான்கு நூல்கள் வெளியீடு



கொடிகாமம், ஒக். 29

வடமராட்சி தெற்கு மேற்கு கலாசாரப் பேரவையின் நான்கு நூல்களின் அறிமுக விழா வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை பிரதேச செயலர் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில்அரவிந்தன்எழுதியதயாளனின் 'குறும்பாக்கள்', கலாநிதி சு.குணேஸ்வரன் எழுதிய 'சில மனிதர்களும் சில நியாயங்களும்', ச.ராகவன்எழுதிய'புளியமரம்', ந.மயூரரூபன் எழுதிய 'பல்சுவை இலக்கியம்' ஆகிய நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன.

நிகழ்வில் மூத்த கவிஞர் க.சிதம்பரப்பிள்ளையும் பேராசிரியர் செ.யோகராசாவும் மதிப்பளிக்கப்பட்டனர்எனத்தெரிவிக்கப்பட்டது. (4,159,9)

# சான்றிதழ் வழங்கலும் தையற் கண்காட்சியும்



கொடிகாமம், ஒக்: 29

வடக்குமாகாண விடிவெள்ளிசமூக மேம்பாட்டு நிறுவனத்தினால் தையல் பயிற்சி நிறைவையொட்டி பயிற்சியைநிறைவுசெய்தமாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கலும் தையற்கண்காட்சியும்நேற்றுஇடம்பெற்றது.

விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் இயக்குநர் க.அருந்தவபாலன் தலைமையில் கச்சாய் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் இவை நடைபெற்றன.

விருந்தினர்களாக கச்சாய் அ.த.க.பாடசாலை அதிபர் க.குணசிங்கம், கச்சாய் கிராம சேவையாளர் க.ஜனகன், பாலாவி கிராம அலுவலர் க.உதயசங்கர், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், நிறுவனத்தின் இணைப்பாளர் த.தேசநேசன், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் வே.யோகராசா.பொ.மனோகரன் உட்படகிராம மக்களும் கலந்து கொண்டனர்.

தையல் பயிற்சியைப் பூர்த்தி செய்த கச்சாய் பாலாவியைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தையல்கண்காட்சியும்விற்பனையும்இடம்பெற்றன. கிராம மக்களும் விருந்தினர்களும் ஆடைகளைக் கொள்வனவு செய்தனர். (4,159)

# அளவெட்டி பொது நூலகத்தினரின் சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள்



கொடிகாமம், ஒக். 29

அளவெட்டிபொதுநூலகத்தினரின் சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் அளவெட்டிபொதுநூலகமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

மல்லாகத்திலுள்ள பிரதேச சபை உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி

எஸ். தியாகச்சந்திரன் தலைமையில் இது நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக அளவெட்டி பிரதேச சபை வட்டார உறுப்பினர் க.மயூரதன், வலி. வடக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.பகீரதன், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்சமூகமட்டப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதியோருக்கு வாழ்வாதாரத்துக்கான உதவிகளும் சிறுவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4,159)

## தமிழ், சிங்கள மொழிகள் இயற்கையோடு இணைந்தவை

# மொழிகளினூடாகவே இனங்களுக்கிடையில் இனிமேல் ஒற்றுமையை வளர்க்க வேண்டும்!

## சூர்யாபவுண்டேசன் அமைப்பின் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

தமிழ், சிங்கள மொழிகள் இயற்கையோடு இணைந்துள்ளன. மொழிகளினூடாகவே இனங்களுக்கிடையிலும் ஒற்றுமையை வளர்க்கவேண்டும்என்றுசூர்யாபவுண்டேசன் அமைப்பின்பணிப்பாளர்கமல்சிறிவர்த்தன தெரிவித்தார்.





சூர்யா பவுண்டேசன் மற்றும் கெல்த்தி லங்கா நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த அடிப்படைச் சிங்கள மொழிக் கற்கை நெறியில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்வுயாழ்ப்பாணம்நாவலர்கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மல்லாகம், சண்டிலிப்பாய் பகுதிகளைச்சேர்ந்தமாணவர்கள்சிங்கள மொழிக்கற்கைநெறியில்இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இரண்டு பிரதேசங்களையும் சேர்ந்த 55 மாணவர்கள் கற்கை நெறிகளில்சித்தியடைந்தனர்என்று தெரிவிக்கப்பட்டது. நான்காவது அணியாக அந்தக் கற்றை இடம்பெற்றது. கெல்த்தி லங்கா நிறுவனத்தின் குறித்த கற்கை நெறியின் ஒருங்கிணைப்பாளர் தேவராசா பிரேமராஜ் தலைமையில் நடைபெற்றநிகழ்வில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கான வேலைத் திட்டங்களாகவே யாழ்ப்பாணத்தில் தாம் சிங்கள மொழிக் கற்கைகளை மாணவர்கள் மத்தியில் மேற்கொண்டுள்ளோம். கடந்த 30 ஆண்டுகளாக ஏற்பட்ட போரால் உயிரிழப்புகள், சொத்தழிவுகள்ஏற்பட்டனவேதவிர யாரும் வெற்றிபெறவில்லை. தமிழர்கள், சிங்கள மொழியைப் பயின்று சிங்கள மக்களுடன் பழகுவதாலும், சிங்கள மக்கள் தமிழ் மொழியைக் கற்று தமிழர் பண்பாடு, கலாசாரங்களை அறிந்து கொள்வதாலும் இருஇனங்களுக்கிடையான முரண்பாடுகளைக் களைந்து ஒற்றுமையாக வாழலாம். இதற்கு இந்த மொழிகளைப் பயில்வது மிகமிக முக்கியம். இது தொடர்பில்சபாநாகர்கருஜெயசூரிய மிகவும் அக்கறையாக உள்ளார். எனவேதான்அவர்சிங்களமொழிக் கற்கையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்குஅனுமதியளித்தார் - என்று தெரிவித்தார்.

நிகழ்வில் மதிப்புக்குரிய விருந்தினர்களாகவடக்குமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், சிறப்புவிருந்தினர்களாகசூர்யா பவுண்டேசன் அமைப்பின் மற்றுமொரு பணிப்பாளரான றஞ்சித் ஜெயதிலக மற்றும் அரச தலைவர் செயலகத்தின்மொழிபெயர்ப்பாளர் தெ.உதயரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (4,21)

# நீரிழிவு, தொற்றாநோய்கள் பற்றி கருத்துரைகள், பரிசோதனைகள்





கொடிகாமம், ஒக். 29

நீரிழிவு மற்றும் தொற்றா நோய் சம்பந்தமான கருத்துரைகள், படக்காட்சிகள், பரிசோதனைகள் ஆலோசனைகள் யாழ்ப்பாணம் நாச்சிமார்கோவிலடிசிறிகாமாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

லயன்ஸ் கழக பன்னாட்டு சேவைத் திட்ட இணைப்பாளர் சாருஜன் ஏற்பாட்டில் லயன்ஸ் கழகத் தலைவர் அருள்நேசன் தலைமையில்நடைபெற்றது.

இலங்கை நீரிழிவுத் திணைக்களத்திலிருந்து மருத்துவர்கள், பணியாளர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதில் நூற்றுக்கணக்கான மக்கள்பயன்பெற்றனர்எனத்தெரிவிக்கப்பட்டது. (4,159)

# அடைமழையால் தாழ்வான பகுதிகளில் குடியிருப்போர் அவதி

சாவகச்சேரி, ஒக். 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையால் தாழ்வான பகுதிகளில் வசித்த குடும்பங்கள் இடம்பெயர்ந்து அயலில் உள்ள பொது அமைப்புகளின் கட்டடங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

பல இடங்களில் வெள்ளம் வீதிகளைக் கடந்து பாய்வதால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

"பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள இடர் முகாமைத்துவப் பிரிவினர் தயாராகவுள்ளனர். இதுவரை பாதிப்பு தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை" என்று தெரிவித்தனர்.

பாதிக்கப்படும் இடங்களில் உள்ளூராட்சி சபையினர் நேரடியாகச்சென்று உதவிகளை வழங்கி வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,9)

# யாழ். மாவட்டத்தில் சுகாதார நிலையை கவனிக்க கொழும்பிலிருந்து குழு வருகை

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உணவு சுகாதார முறைமைகளைப் பார்வையிட தென்பகுதியைச் சேர்ந்த சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் வருகை தரவுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்துக்குவரும் நிர்வாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், உணவுகள், மருந்துகள், பரிசோத்கர்கள் உள்ளிட்ட சுகாதாரக்குழுவினர் ஒவ்வொருசுகாதாரமருத்துவஅதிகாரி பிரிவிலும்உணவுகள்கையாளும்முறைகள்தொடர்பானபரிசோதனைகளை மேற்கொண்டு கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அறிக்கையிடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகப் பொது சுகாதாரப்பரிசோதகர்,மேற்பார்வைச் சுகாதாரப்பரிசோதகர்கள், மாவட்ட உணவுகள்மருந்துகள்பரிசோதகர் அடங்கிய குழுவினர் ஊவா மாகாணத்துக்குச் சென்று அங்குள்ள உணவு நிலையங்க ளைப் பார்வையிட்டு அங்கு காணப்பட்ட குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி அறிக்கையிட்டிருந்தனர்.

இனிவரும்காலங்களில்அனைத்து மாகாண சுகாதாரக் குழுவினர் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம்செய்துஉணவுசுகாதாரம் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்எனத்தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களுக்குத்தரமானஉணவுப்பொருள்கள்கிடைக்கவேண்டுமென்பதற்காக கொழும்பு சுகாதாரத் திணைக்களத்தினர் இவ்வாறான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்என்றுசுகாதாரத்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணமாவட்டத்துக்குவரும் சுகாதாரக் குழுவினர் பொதுமக்களுக்குத்தரமானஉணவுப்பொருள்கள் தயாரிக்கப்படுகின்றனவா? அவை பாதுகாப்பாக விற்பனை செய்யப்படுகின்றனவா என்று பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கையிடவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர,

தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வறட்சி உதவியுடன் வழங்கியபழுதடைந்தமுட்டைகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இடர் முகாமைத்துவ அமைச்சின் உதவி உணவுப் பொருள் விநியோகப் பிரிவு அனுப்பிய உலர் உணவுப் பொருள்களுடன் அந்தமுட்டைகள்வழங்கப்பட்டிருந்தன. அவை காலாவதியாகி விட்டதாக அதன் பொதியில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் பயனாளிகள் அவற்றைப் பெறவில்லை. தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சி உதவி உணவுப்பொருள்கள்வைக்கப்பட்டிருந்தஐந்துநிலையங்களில் வைக்கப்பட்டுள்ள முட்டைகளைப் பார்வையிட்டு வருகின்றனர். குறித்த உதவிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டபோதுபொதுச்சுகாதாரப்பிரிவுக்குப் பயனாளிகள் முறையிட்டதையடுத்துமுட்டைவிநியோகம்தடுக்கப்பட்டிருந்தது.

குறித்த உதவிப் பொருள்களுடன் தலா 2 கிலோகிராம் பொதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கும்விநியோகிக்கப்பட்டன.

இந்த விடயம் கொழும்புக்கு அறிவிக்கப்படவேஅங்கிருந்துஅதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் மு.ப.10 மணியளவில் உலர்உணவுப்பொதிகள்வைக்கப்பட்டுள்ள ஐந்து நிலையங்களில் நான்குநிலையங்களுக்குவிஜயம் செய்து அனைத்து முட்டைகளையும்பார்வையிட்டனர்.

(4.9)

---

# வீடுகள், காணிகளில் வெட்டப்படும் குழைகளை அகற்றுவதற்கு கட்டுக்களாக்கி வைக்கவும்

சாவகச்சேரி, ஒக். 29

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதியோ ரங்களில் மரங்களிலிருந்து வெட்டப்படும் குழைகளை கட்டுக்கட்டாகக் கட்டி வைக்குமாறு நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் வரியிறுப்பாளர்கள் வளவுகளில் வெட்டப்படும் மரக் கிளைகளுடன் குழைகளை வீதியோரங்களில் வைக்கின்றனர். இதனால்விபத்துகள் ஏற்படுகின்றன என்று முறைப்பாடுகள் வந்தவண்ணமுள்ளன.

வரியிறுப்பாளர்கள் தமது காணிகளில்வெட்டப்படும்குழைகளைக் கட்டுக்கட்டாகக்கட்டிவீதியோரத்தில் ்வக்குமாறும் குவியலாகப் போடப்படும் குப்பைகளைச் சபையினர் ஏற்றுவதாயின் நகரசபையில் பணம் செலுத்தவேண்டுமென்றும்தவிசாளர்தெரிவித்தார்.

(4.9)

---

# நாவற்குழிச் சந்தையை சீரமைக்கக் கோரிக்கை

## நிதியில்லை என்கிறார் தவிசாளர்

தென்மராட்சி, ஒக. 29

சாவகச்சேரிப்பிரதேசசபையின் நாவற்குழி உப அலுவலக எல்லைக்குட்பட்ட நாவற்குழிச் சந்தையில் அடிப்படை வசதிகள் இன்மையால் அங்கு வியாபாரம் செய்பவர்களும் பொதுமக்களும்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழிச் சந்தியில் இயங்கி வந்தபொதுச்சந்தைமுதலமைச்சரின் நிதியில் நாவற்குழி கேரதீவு சாலையில் சந்திக்கு அண்மித்த பகுதியில் அமைக்கப்பட்டது. அங்கு தென்மராட்சி தெற்குப் பகுதியில் விளைவிக்கப்படும்மரக்கறிவகைகள்மற்றும் கடலுணவுகள் தினமும் விற்பனைக்கு கொண்டு வரப்படுவதால் பெருமளவு வியாபாரிகள் வியாபாரம் செய்கிறார்கள்.

காலைதொட்க்கம்மாலைவரை கடலுணவுகள் சந்தைக்குக் கொண்டு வரப்படுவதால் தொடர்ச்சியாக நுகர்வோர் வந்து செல்கின்றனர்.

இந்தநிலையில் இந்தச் சந்தை வளாகத்தில் மலகூட வசதி மற்றும் குடிதண்ணீர் வசதியின்மையால் வியாபாரிகளும் பொதுமக்களும்அயலில்உள்ள பற்றைகளை நாடிச் செல்கின்றனர். இதனால்பெரும்சுகாதாரச் சீர்கேடுகாணப்படுகிறது. சந்தையைச் சுற்றி பற்றைகள் காணப்படுவதால்சந்தைக்குள்அடிக்கடி விசஜந்துக்கள் வருகின்றன.

சந்தையைச் சுற்றி பாதுகாப்பு வேலி இன்மையால்கால்நடைகளின் இரவுத் தங்கல் இடமாகவும் சந்தைக் கட்டடம் காணப்படுகிறது. காலையில்வரும்வியாபாரிகள்கால்நடைகளின்கழிவுகளைத்துப்பரவுசெய்யும்நிலை காணப்படுகிறது.

சந்தையைச் சீரமைத்து அடிப்படைவசதிகளைமேற்கொண்டு வழங்குமாறு உரிய தரப்பினருக்கு பலதடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லைஎனவும் மழைகாலம் ஆரம்பித்துள்ளதால்சந்தையின் சுற்றாடலில் காணப்படும் பற்றைகளைத் துப்பரவு செய்து வழங்குமாறு சாவகச்சேரி பிரதேச சபையினரைக் கோரியுள்ளோம் என்றும் தெரிவித்தனர்.

தென்மராட்சி தெற்கு கடலேரியில் பிடிக்கப்படும் கடலுணவுகள் உடனுக்குடன் இந்தச் சந்தைக்கு கொண்டு வரப்படுவதால் கடமைகள் முடிந்து உந்துருளிகளில்வரும்அரசஅலுவலர்கள் மாலை நேரங்களில் அவற்றைக் கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

“சபைக்குத்தற்போதுபோதியளவு நிதி இல்லை. நிதி ஏற்படுத்தப்பட்டதும்குறைபாடுகள்சீரமைக்கப்படும்என்றுசாவகச்சேரிப்பிரதேச சபையின்தவிசாளர்க. வாமதேவன்தெரிவித்தார். (4.9.159)

---

## தொடருந்தில் பயணிக்கையில்

# விசமிகளின் கல் வீச்சில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஒக். 29

தொடருந்துக்கு விசமிகள் கல்லெறிந்தபோதுஅதில்பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது இரண்டுமாதங்களின்பின்னர் நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி உடுத்துறையைச் சேர்ந்த பாலசிங்கம் சிவச்செல்வம் (வயது- 64) என்பவரே உயிரிழந்தார் என்று அவரது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப்பயணித்த கடுகதி தொடருந்து மீது விசமிகள் கல் வீச்சு நடத்தினர். இதன் போது நெற்றியிலும் தலையிலும் படுகாயமடைந்தார்.

அவர் அனுராதபுரம் மருத்துவமனையில் இரண்டு மாதங்களாகச் சிகிச்சை பெற்றுவந்தார். சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4.9.159.160)



---

# தோட்டத்தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாசம்பளம்வேண்டும்

## ஈரோஸ் அமைப்பு வலியுறுத்து

வவுனியா, ஒக். 29

மலையகப் பாட்டாளி மக்களுக்கான நாளாந்த சம்பளத்தை ஆயிரம்ரூபாவாகஅதிகரிக்கவலியுறுத்துவோம்என்று ஈழவர் ஜனநாயக முன்னணி(ஈரோஸ்)தெரிவித்தது. அவர்கள்அனுப்பியசெய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாட்டின் பொருளாதாரத்தில் தமது இரத்தங்களை வேர்வையாகச் சிந்தி உழைக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரிப் போராடுகின்றனர். அவர்களின் உழைப்பின் பெறுமானத்தை மதிப்பளியுங்கள்.

விலைவாசி ஏற்றத்தில் தமக்கு கிடைக்கும்நாளாந்தசம்பளத்தைக் கொண்டு குடும்பத்தை காப்பாற்ற முடியாத நிலையில் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர். எனவேசம்பளஅதிகரிப்புவழங்கப்படவேண்டும் - என்றுள்ளது.

(4.110)

---

# மாவட்டத்தின் 10 கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 29

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச. சுகிர்தனால் மக்கள் பிரதி நிதிகளின் நிதி ஒதுக்கீட்டில் 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் மாவட்டத்தில்உள்ள10விளையாட்டுக் கழகங்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டன.

சாவகச்சேரிநகரசபைஉறுப்பினர் க. கஜீதன் 10 விளையாட்டுக் கழகங்களின் கழக பிரதிநிதிகளிடம் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

வல்வை றெயின்போ வி.க., திருநெல்வேலிகம்பன் வி.க., மாதகல் விநாயகர் வி.க., திருநெல்வேலி ஒலிம்பிக் வி.க., வெண்மதி வி.க., கரவெட்டிஞானம்ஸ்வி.க., மருதங்கேணிஉதயசூரியன்வி.க., உரும்பிராய் இளைஞர் கல்வி வளர்ச்சிக் கழகம், பருத்தித்துறை உபயகதிர்காமம் வி.க., சாவகச்சேரி நியுவிண்டோஸ்வி.க. ஆகியகழகங்களுக்கு அவை வழங்கப்பட்டன எனத்தெரிவிக்கப்பட்டது.

(4.9)

---

# போதையைஅழிக்கவென திருச்சிலுவைப் பயணம்

தலைமன்னார், ஒக். 29

போதைவஸ்து அடிமைத்தனத்திலிருந்து எமது இளைஞர் சமூகம் விடுதலைப்பெறவேண்டும் எனும்நோக்குடன்திருச்சிலுவை பயணிக்கின்றது என்று அருட்பணிஅலெக்ஸ் ஜானகபெரேரா தெரிவித்தார்.

இந்தச்சிலுவை மன்னார் மறைமாவட்டத்துக்குக் கொண்டு வந்திருந்தபொழுது கடந்த வியாழக்கிழமை பேசாலை பங்கில் விசுவாசிகளின் ஆராதனைக்காக வைத்திருந்தபொழுது உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது.

இந்த திருச்சிலுவையின் பயணம் ஐந்து நோக்கங்கள் கொண்டு பயணிக்கின்றது.

அதாவது கடந்த வருடம் தூய யோசப்வாஸ்ஆண்டாகஅமைந்ததைமுன்னிட்டும்கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், எமது நாட்டைப் பாதுகாக்கவும், இளையதலைமுறைகள்

போதைப் பொருள்களுக்கு அடிமையாகி அழியும் தன்மைக்கு உள்ளாகி வருவதால் இதிலிருந்து இவர்கள் விடுதலை பெறும்நோக்கமாகவும்பயணம் அமைந்துள்ளது.

(4.60)

## வவுனியாவில்

# முகமூடி அணிந்த நபர்கள் அட்டகாசம்

வவுனியா,ஒக் .29

**வவுனியா வேப்பங்குளம் ஆறாம் ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் புகுந்த ஐந்துபேரைக் கொண்ட கும்பல் வீட்டினுள் புகுந்து அங்கிருந்த தாயையும், மகளையும் தாக்கியதுடன், அங்கிருந்த தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதனப்பெட்டி,சலவை இயந்திரம், வீட்டின் யன்னல் கதவுகள்,உந்துருளி என்பவற்றையும் அடித்து நொருக்கியுள்ளனர்.**



எனினும் வீட்டிற்கு வந்தவர்களில் ஒருவரைத் தனக்கு நன்கு தெரியும் எனவும் தான் பொலிஸாருக்கு அடையாளம் காட்டவுள்ளதாகவும் தாக்குதலுக்குள்ளான பெண் தெரிவித்திருந்தார்.

குறித்த நபர்கள் முகத்தை மூடி மறைத்து கொண்டு வந்ததுடன், தலைக்கவசமும் அணிந்திருந்ததாகவும் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் தாய் மற்றும் மகள் காயமடைந்துள்ளதுடன்,சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா குற்றதடுப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (110)



## முதியோர் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி ஒக். 29

கிளிநொச்சி மாவட்ட முதியோர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

முதியோர் தின நிகழ்வை முன்னிட்டு முதியோர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய முதியோர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (9)

★ ★ ★



மாந்தை ஒக். 28

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தின் பன்னாட்டு சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

"தைரியமாக முன்னேறிச் செல்வதற்கு எமது சிறுவர்களை பலப்படுத்துவோம்", "மனித உரிமைகளுக்காக முன்னின்ற மூத்த பிரஜைகளை மதிப்பளிப்போம்" என்ற இவ்வருட தொனிப் பொருள்களுடன் நிகழ்வு இடம்பெற்றது.

பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலக கணக்காளர் எம்.ஜேசுறெஜினோல்ட்டும் சிறப்பு விருந்தினராக துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.சத்தியசீலனும் மதிப்புறு விருந்தினர்களாக மாந்தை கிழக்கு அம்பாள்புர கிராம தொழில் முயற்சியாளர் கிருஷ்ணன் டேவிற் தேவசுதன், ஆசிய மட்ட பழுதூக்கல் போட்டியில் தங்கம் வென்ற பாண்டியன்குள மகா வித்தியாலய மாணவி தங்கமங்கை தே.தர்சிகா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முதியோர்களை சிறுவர்களும், சிறுவர்களை முதியோர்களும், கிரீடம் சூட்டி வரவேற்று விழாவினை ஆரம்பித்து வைத்தனர் .நிகழ்வில் சிறுவர் மற்றும் முதியோர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

பிரதேசத்தில் அதிகூடிய வயதுடைய முதியவர் நிகழ்வுக்கு அழைத்து வரப்பட்டு பொன்னாடை போர்த்தி மதிக்கப்பட்டதுடன், சிறுவர்கள் முதியோர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)



## பசு மாடு வழங்கி வைப்பு

வவுனியா,ஒக் .29

வவுனியா - கன்னாட்டி கணேசபுரத்தில் வசித்துவரும் குடும்பத்திற்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவை ஊடாக பசுமாடு வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த தைமாதம் தொழிலுக்குச் சென்ற வேளை யானையால் தாக்கப்பட்டு, தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ள கன்னாட்டி கணேசபுரத்தைச் சேர்ந்த இராமன் என்பவருக்கு டென்மார்க்கைச் சேர்ந்த தி. சிறிமுருகனின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஊடாக பசு மாடும் மாட்டு கொட்டகை அமைப்பதற்கான பொருள் உதவியும் வழங்கி வைக்கப்பட்டது. இந்தப் பசு மாட்டினை சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சிவ. கஜேந்திரகுமார் நிர்வாகச் செயலர் பிரபாகரன். ஜானுயன் ஆகியோரும் வழங்கி வைத்தனர். (110)

## தேசிய விளையாட்டுப் போட்டியில் 3 ஆம் இடம்

கிளிநொச்சி,ஒக் .29

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படுகின்ற 30 ஆவது தேசிய விளையாட்டு நிகழ்வு மாத்தறை கொட்டவில பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. 13தொடக்கம் 20 வயதுப் பிரிவில் செல்வி டென்சிகா 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்று கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேசத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். (222)



## முகாமைத்துவக்குழுக் கூட்டம்

கிளிநொச்சி ,ஒக் .29

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் மாதாந்த முகாமைத்துவக்குழுக் கூட்டம் தலைவர் பொன். நித்தியானந்தம் தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு சிறுவர் இல்லக் கேட்போர் கூடத்தில் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது. கூட்டத்தில் முகாமைத்துவக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்ததோடு நிகழ்ச்சி நிரலின் ஒழுங்கிற்கேற்ப கூட்டம் நடைபெற்றது. முக்கிய தீர்மானங்களும், செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் விடயங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (222)





## வாசிப்பு மாத போட்டி நிகழ்வு

புதுக்குடியிருப்பு,ஒக் .29

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வாசிப்பு மாதப் போட்டி நிகழ்வும் ,பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ,வாசிப்பு மாதத்தினை ஒட்டி பாடசாலையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள் எனப் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் கருத்துரைத்த புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்.

தற்போது எமது நூலகங்கள் புதிய மாற்றங்களுடன் இயங்கி வருகின்றன தேவையான நூல்களை நூலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் மாணவர்கள் நூலகங்களை பயன்படுத்த வேண்டும்.

இன்று எமது பகுதிகளில் காணப்படும் பாடசாலைகளில் 5 ஆண்டுக்கு ஒருதடவை ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இதற்கான காரணம் எமது பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து பணிபுரிவதாகும், இந்த நிலை மாறவேண்டும் இங்கிருக்கும் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் பாடசாலை கல்வியைப் பெற்று ,உயர்கல்வியை பெறும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்காலத்தில் இந்த பிரதேசத்தினை சேர்ந்தவர்கள் ஆசிரியர்களாக உருவாகும்போது கல்வியால் நிலைபேறான வளர்ச்சியினை ஏற்படுத்த முடியும்.

எனவே மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பதுடன் அர்பணிப்புடனும் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ரி 3)

# கூட்டுறவுச் சங்கக் கட்டடம் இன்று கையளிக்கப்படுகிறது

மன்னார் ,ஒக் .29

**மன்னார் நுழைவாயிலில் அமைந்துள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் இருக்கும் இராணுவம் அவ்விடத்தைவிட்டு வெளியேறுவதுடன், இன்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக கூட்டுறவுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட இருக்கிறது.**

அத்துடன் மறுவாழ்வு அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்ததும் முள்ளிக்குளம் மக்களின் விடுவிக்கப்பட இருக்கும் காணிகளும் குறிப்பிடப்படும் மாதங்களுக்குள் விடுவிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அரச தலைவர் வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலுள்ள இடங்கள் தொடர்பாக ஆளுநரிடம் அறிக்கை ஒன்றை சமர்பிக்கும்படி, குறிப்பாக கடற்படை, பொலிஸ், இராணுவம் ஆகியோரிடம் கைவசம் உள்ள காணிகள் தொடர்பாகவே கேட்கப்பட்டதற்கிணங்க கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இது விடயமான கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன்ராஜ் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ்நிர்மலநாதன், வன்னி பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர அபேவிக்கிரம உட்பட ஆளுநர் செயலர்கள், ஆளுநர் செயலணி அதிகாரிகள், கடற்படை, பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (60)

## தர்மக்கேணி இந்து மயானம் சீரமைப்பு

கிளிநொச்சி, ஒக் .29

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தர்மக்கேணி இந்து மயான சீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளது.

நீண்டகாலமாக மக்களின் அடிப்படை தேவையாக இருந்த மயானத்துக்கான எரிகொட்டகை அமைத்தல் பணி மிக விரைவாக பூர்த்தியாக்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 4 இலட்சத்து 75ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டினால் குறித்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது



## வீடு எரிந்த குடும்பத்துக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

முல்லைத்தீவு,ஒக் .29

முல்லைத்தீவு 10 ஆம் வட்டாரம், புத்துக்குடியிருப்புப் பகுதியில் எந்தவித உதவிகளும் இல்லாமல் 3 பெண்பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தை சேர்ந்த (சுரேஸ்குமார் பிரேமிலா) என்பவரின் வீடு அண்மையில் தீயில் எரிந்துள்ளது.

இதனால் இவர்கள் தங்கி வாழ்வதற்கு அடிப்படை வீடு இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இலங்கை செஞ்சிலுவை சங்க முல்லைத்தீவு கிழை யினரால் அவர்கள் தற்காலிகமாக வாழ்வதற்கான குடில் மற்றும் நிவாரண பொருள்கள் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளுடன் இணைந்து இலங்கைச் செஞ்சிலுவை சங்க முல்லைத்தீவு கிளை இதனை மேற்கொண்டுள்ளது. (ரி 3)






## முதியவர்களுக்கு உதவி

வவுனியா ,ஒக் .29

புன்னகை அமைப்பின் 5 ஆவது வருட நிறைவு நிகழ்வுகள் வவுனியா சிவன்கோவில் முதியோர் இல்லத்தில் செட்டிகுளம் பிரதேசசெயலரும் புன்னகையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான கை.சிவகரன் தலைமையில் இடம் பெற்றது.

முதியவர்களுக்கான சிறப்புணவு மற்றும் அவர்களின் அத்தியாவசிய உபயோக பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (222)



தமிழமுது நண்பர்கள் வட்டம் அமைப்பின் 2 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மடு மற்றும் மன்னார் வலய மாணவ மாணவிகளுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் கல்வியாளர் மதிப்பளிப்பு நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை அடம்பன் பாடசாலையில் இடம் பெற்றது. (56)


## ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு சுற்று வேலி அமைக்கும் பணிகள் ஆரம்பம்

மன்னார்.ஒக் .29

மாவீரர் தினத்தை நினைவு கூறும் வகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தமிழர் தாயக பகுதிகளில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

இந்த நிலையில் மன்னார் ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தின ஏற்ப்பாட்டுக் குழுவினரால் நேற்று முன் தினம் துப்பரவுப் பணி மேற்கொள்ளப்பட்டதுடன், மாவீரர் துயிலும் இல்லத்தை சுற்றி சுற்று வேலி அடைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் போது மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் அப்பிரதேச இளைஞர்களும் இணைந்து குறித்த பணியினை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(56)





## வெள்ளத்தில் மூழ்கியது வவுனியா வீதி உப தவிசாளர் உடனடி நடவடிக்கை

வவுனியா.ஒக் .29

வவுனியாவில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக வவுனியா கற்குழி பகுதியில் வீதியை மீறி மழை வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

இது குறித்து வவுனியா நகரசபை உப தவிசாளர் சு.குமாரசாமியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளதையடுத்து, உடனயடியாக வீதியை அண்மித்த பகுதியில்பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் கால்வாய்கள் ஆழப் படுத்தப்பட்டு மழை வெள்ளம் வழிந்தோடும் வகையில் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

நேரடியாக அப்பகுதியைச்சென்று பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு நகரசபை ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, வீதியிலுள்ள கால்வாய்கள் ஆழப்படுத்தப்பட்டு கால்வாயூடாக மழை வெள்ளத்தை அனுப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இரணைதீவு புனித செபமாலை மாதா ஆலயம் நேற்றுக் காலை 9 மணியளவில் மீள்சீரமைப்பின் பின்னர் யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. (204)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழ்க் கூட்டமைப்பின் நிபந்தனை சாத்தியமா?

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டிய நிலையில் மகிந்த, ரணில் இருவரும் தள்ளப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தீர்மானகரமான சக்தியாக மேலெழுந்துள்ளது. பேரம் பேசல்கள் ஊடாகப் பணத்தை அள்ளி வீசி ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை மகிந்த, மைத்திரி தரப்பு தம்பக்கம் இழுத்துக்கொள்ளாத நிலையில் கூட்டமைப்பு மட்டுமே ஆட்சியாளர்களைத் தீர்மானிக்கும் ஒரே சக்தியாக மேலெழும் வாய்ப்பும் உள்ளது.

இத்தகைய ஒரு வாய்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படிப் பயன்படுத்திக்கொள்ளப் போகிறது என்பதை அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெளிவுபடுத்தியிருக்கிறார். புதிய அரசமைப்பை உருவாக்குவது மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசின் இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது ஆகிய இரு விடயங்களும் தமது ஆதரவைப் பெறுவதற்கான முக்கியமான விடயங்களாக, நிபந்தனைகளாக இருக்கும் என்பதை வெளிப்படுத்தியுள்ளார் சம்பந்தன்.

இந்த இரண்டு விடயங்களிலுமே கடந்த காலங்களில் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர் மகிந்த ராஜபக்ச. இன்னும் சொல்லப்போனால், ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றுவது என்பது மகிந்தவின் குடும்பத்தினருக்கு எதிராக அவரே செயற்படுவதைப் போன்றதாகிவிடும். அத்தோடு புதிய அரசமைப்புக்கு ஊடாக நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள் என்று சிங்கள, பௌத்த மக்களிடம் தாம் செய்து வந்த பரப்புரைக்கு நேர்மாறான பரப்புரையை மகிந்த முன்னெடுக்க வேண்டியிருக்கும். இவையிரண்டுமே மகிந்தவின் அரசியல் தற்கொலைக்கு நிகரானவை என்பதால் மகிந்த இலகுவில் இவற்றுக்கு இணங்கிவர முற்படமாட்டார் அல்லது இணங்குவதாகக் கூறிக்கொண்டு தமிழ்த் தலைமைகளை ஏமாற்றுவதற்குத் தயங்கமாட்டார்.

மறு பக்கத்தில் ரணிலின் நிலமையும் சிக்கலானதுதான், ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதில் கொழும்பையும் ஒரு அனுசரணையாளராக இணைத்துக்கொள்வதற்கு இணங்கி வந்தவர் என்றபோதும் பின்னர் அதிலிருந்து பின்வாங்கிக் கொண்டவர் அவர், போர்க் குற்றவிசாரணைகளை நடத்துவதற்கான கலப்பு நீதிமன்றங்களை அமைப்பது இலங்கை போன்ற நாடுகளுக்குப் பொருத்தமானதல்ல என்றுகூறியவர்தான் ரணில் விக்கிரமசிங்க. புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக அரசமைப்புச்சபையாகமாற்றப்பட்ட நாடாளுமன்றத்தால் 6 உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுச் செயற்பட்டுக்கொண்டிருந்தபோது அந்தக் குழுக்களின் பரிந்துரைகளில் தமிழர்களுக்குச் சாதகமான சில அம்சங்கள் இடம்பெறப்போகின்றன என்பதை அறிந்துகொண்டு அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் மட்டுப்படுத்துவதற்குமாக 7ஆவதாக ஒரு குழுவைத் தானாக நியமித்து அதற்கூடாக முற்போக்காக முன்வைக்கப்பட்ட யோசனைகளை வலுவிழக்கச் செய்யும் பரிந்துரைகளை முன்வைத்தார் ரணில். எனவே அவரும் கூட்டமைப்பின் இரு நிபந்தனைகளையும் இதய சுத்தியோடு ஏற்றுக்கொள்வார் என்று சொல்வதற்கில்லை.


இரு நிபந்தனைகளையும் நிறைவேற்றுவோம் என்று இரு தரப்பினரும் வாக்குறுதிகளை வழங்கினால்கூட அவர்கள் அவற்றை நிறைவேற்றமாட்டார்கள் என்பதை நிச்சயம் எதிர்பார்க்கலாம். ஏனெனில் ஒரு சில தினங்களுக்கு முன்னர்வரையில் அதனை நிரூபித்தவர்கள் அவர்கள். எனவே நிபந்தனைகளை விதித்து சிங்களத் தலைவர்களிடம் இருந்து வாக்குறுதிகளைப் பெறுவது தமிழர்களைப் பொறுத்தவரையில் பயனற்ற ஒன்று. 2015இல் மைத்திரிபால சிறிசேன வழங்காத வாக்குறுதிகளா? இப்போது என்ன நடந்திருக்கிறது? எனவே மீண்டும் மீண்டும் ஏமாறும் ஏமாளிகளாகத் தமிழ்த் தலைமைகள் இல்லாதிருக்கவேண்டியிருக்கிறது.

இந்த விவாகரத்தில் தமிழ்த் தலைவர்கள் செயற்படுவதற்கான வெளி மிகமட்டுப்படுத்தப்பட்டதுதான் என்கிறபோதும் அதற்குள்ளும் அவர்கள் எவ்வளவு விவேகத்துடன் வெற்றியைச் சாத்தியமாக்குகிறார்கள் என்பதிலேயே தமிழ் இனத்தின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.



# ஓர் உறைக்குள் ஒரு வாள்!

மு.ஈழத்தமிழ்மணி



இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கள் நாட்டு மக்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றன. மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரணில் விக்கிரமசிங்க வுக்கும் இடையில் முரண்கள் எழுந்திருக்கின்றன. பலவீனமான அரச தலைவராகக் கருதப்பட்ட மைத்திரி மீண்டெழுந்து பலம் கொண்ட அதிகார வெறியுடன் முன்னாள் அரச தலைவரான மகிந்தராஜபக்சவைப் புதிய தலைமை அமைச்சராக நியமித்திருக்கிறார். சிறுபான்மையினரின் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட மகிந்த மைத்திரியால் ஆட்சிப் பீடம் ஏற்றப்பட்டிருக்கிறார்.

### மகிந்தவின் அரசியல் அஸ்தமித்த காலம்

அரச தலைவரான மைத்திரி, மகிந்தவுடன் ஒன்றாக அமர்ந்து அப்பம் சாப்பிட்ட பின்னர்தான் மகிந்தவுக்கு எதிராக அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்குகின்றார் என்று அறிவிக்கப்பட்டது. சந்திரிகா பண்டாரநாயக்கா, ரணில் இணைந்த தரப்புகளால் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்ட ராஜதந்திர நடவடிக்கையாக அது அப்போது அமைந்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி பல வருடங்களாக அரசியல் தோல்வியைச் சந்தித்ததால் அதன் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவால் தலை நிமிர முடியவில்லை. இந்த நிலையில்தான் 2015 இல் நடைபெற்ற அரச தலைவருக்கான வேட்பாளராக பெரும் சக்திகொண்ட மகிந்தராஜபக்ச முன்பாக மைத்திரி நிறுத்தப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியைப் போட்டியிட வைக்காது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரே அரச தலைவர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். பொது எதிரணிகளின் ஒன்றிணைந்த வேட்பாளர் வெற்றியடையும் நிலையில் ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி கூட்டிணைந்து தேசிய அரசு ஏற்படும்போது தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். மகிந்தவின் அரசியல் அஸ்தமித்துப் போனது.

### மகிந்தவின் ஆட்சியும், தோல்வியும்

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் சக்தி படைத்தவராகவும், தமிழ்மக்களுக்கு எதிராகவும், பயங்கரவாதத்தை அழித்தொழிக்கும் பெயரில் இறுதிப்போரை நடத்தி விடுதலைப்புலிகளை அழித்துத் தென்னிலங்கை மக்கள் மத்தியில் முடிசூடா மன்னனாக உயர்ந்த மகிந்தராஜபக்சவின் அரசியல் தோல்வி அவரை மனதளவில் பெரிதும் பாதித்திருந்தது. பெரும்பான்மை மக்களும் அனுதாபப்பட்டிருந்தனர். குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு இலட்சக்கணக்கான விருப்பு வாக்குகளைப் பெற்ற மகிந்தவின் எழுச்சி அரச தலைவரான மைத்திரி தலைமையிலான சுதந்திரக்கட்சியை மேலோங்கச் செய்ய விடவில்லை. அரசுக்குள் அது பெரும் தலையிடியைக் கொடுத்திருந்தது. மகிந்தவின் மீள் அரசியலுக்கு அப்போதும் மைத்திரியே வழி திறந்துவிட்டார். வெற்றிநாயகனாகப் புகழப்பட்ட மகிந்த நல்லாட்சிக்கு நிம்மதியற்ற நிலைமையையும் பலவாறான நெருக்கடிகளையும் நாடாளுமன்றில் பல குழப்பங்களையும் தொடர்ச்சியாகக் கொடுத்தபடியே வந்துகொண்டிருந்தார். தேசிய அரசைக் கலைப்போம். தாமே ஆட்சிக்கு வருவோம். என்று தென்னிலங்கையில் சூளுரைத்த மகிந்தவும் அவருடன் இணைந்துகொண்டு செயற்பட்டவர்களும் பல போராட்டங்களை அரசுக்கெதிராக எடுத்திருந்தனர்.

### அரசுக்குள் ஏற்பட்ட நெருக்கடிகள்

அரசுக்குள் உள்ள முரண்பாடுகள், வேலையில்லாத் திண்டாட்டம். சம்பள உயர்வுகோரிய வேலை நிறுத்தங்கள், அதிகரித்துச் செல்கின்ற விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி, மக்களின் வாழ்க்கையின் பாரச்சுமை, ஊழல்கள், மோசடிகள் என நல்லாட்சி அரசு எதையும் சமாளிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினருக்கும் ஏற்பட்டுக்கொண்டிருந்த கருத்து மோதல்கள் பெரும் பிரச்சினையாக வெடித்துக் கிளம்பின. மைத்திரி சமாளிக்க முடியாது திணறிக் கொண்டிருந்தார். தேசிய அரசிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலகும் என்ற அறிவித்தல் மாறி மாறி வந்துகொண்டிருந்தாலும் தனித்து வெளியேறிய 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச தலைவருக்கு எதிராகவும் ரணிலுக்கு எதிராகவுமே நடந்துகொண்டனர். தேசிய அரசை இல்லாமல் செய்வதே அவர்களது குறிக்கோளாக இருந்தது. மகிந்தவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். மகிந்தவை ஆட்சி அமைக்க வைக்கவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி அரஸ்ச நீக்கவேண்டும். அந்த இலக்குடன் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

### ஓர் உறைக்குள் எப்படி இரண்டு வாள்கள்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ இரண்டும் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க முடியாது. அது நீடிக்கவும் வாய்ப்பில்லை. ஓர் உறைக்குள் எப்படி இரண்டு வாள்கள் இருக்க முடியும் என்பதுபோல்தான் நல்லாட்சி அரசிலும் நடந்து முடிந்திருக்கிறது. மகிந்த அரசின் காலத்தில் ஏற்பட்ட ஊழல்கள், நிதி மோசடிகள், ஆள்கடத்தல்கள், படுகொலைகள் அதிகார முறைகேடுகள் மீது விசாரணைகளை மேற்கொண்டு உரிய நீதி விசாரணைகள் நடத்தப்படுமென நாட்டு மக்களுக்கு ஆட்சிக்கு வந்தபோது மைத்திரி தெரிவித்திருந்தார். ஆட்சி மாற்றத்தை விரும்பிய மக்களுக்குத் தனது தூய்மையான அரசியலை எப்படி நடத்திக்கொண்டு செல்வேன் என்பதைப் பலமுறை வெளியிட்டுக்கொண்டிருந்தார். விசாரணைகள் யாவும் வழக்குகளாகவில்லை. மகிந்த குடும்பம் தப்பித்துக்கொண்ட நிலையிலிருந்தே வந்தது.

### ஐக்கியதேசியக் கட்சி சார்ந்தே கண்டனங்களை வெளியிட்டார்

ஊழல் மோசடிகள் இல்லாத தூய்மையான அரசை உருவாக்குவதே தனது இலக்கு எனவும் தெரிவித்து வந்தார். ஐக்கிய தேசியக் கட்சி அரசில் உள்ளவர்கள் பலரைக் குறித்தே தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். மகிந்த காலத்தில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் யாவும் பின்தள்ளப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசில் உள்ள அமைச்சர்கள் மேற்கொண்ட ஊழல் மோசடிகள், மத்திய வங்கியின் பிணை முறி மோசடி போன்றவை ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் அரசதலைவருக்குமிடையில் படிப்படியாக மோதலாகின. மகிந்தவுக்கும் மைத்திரிக்கும் அண்மையில் நடைபெற்ற சந்திப்பு மக்கள் மத்தியில் பல விமர்சனங்களையும் ஏற்படுத்தியிருந்தன. பலவீனமானதொரு ஆட்சிக்கு பொறுப்பான தலைவராக மைத்திரிபால சிறிசேன கருதப்பட்டார். இந்த நிலையில்தான் அவர் மகிந்தராஜபக்சவை திடீரென அழைத்துப் தலைமை அமைச்சராக்கியிருக்கிறார்.


### 'நல்லாட்சி' என்கின்ற மைத்திரியின் பசப்பு வார்த்தை

அரசைக் கவிழ்க்காமலே மகிந்த அரசுக்குள் உள்வாங்கப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசை அதிர்ச்சியடையச் செய்துள்ளார். இதன்மூலம் ஐக்கிய தேசியக்கட்சியைப் பழிவாங்கி இலங்கையின் ஜனநாயகத்தைக் கொச்சைப்படுத்தி இழிவுபடுத்தியிருக்கிறார். நல்லாட்சி என்ற இலக்கணம் இதுவரை அரச தலைவரிடம் வெறும் வார்த்தையாக இருந்தததையும், அரசியல் வறுமையையும் அவருக்கிருந்த நம்பிக்கையற்ற தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளது. தமக்குத் தீர்வு கிடைக்குமென நம்பியே தமிழ்மக்கள் மைத்திரியைப் பதவிக்குக்கொண்டு வருவதுடன் மகிந்தவை மாற்றவேண்டும் என்பதில் உறுதியாக நின்றனர். இனி மகிந்தவுடனான கைகோர்ப்பு நீடிக்குமா? இல்லையா? இடைக்கால அரசு தொடருமா? ஐக்கிய தேசியக் கட்சி என்ன செய்யப்போகின்றது? மூன்றில் இரண்டு பெரும்பான்மையில்லாததொரு அரசு நீடிக்க வாய்ப்பில்லாதபோது புதிய அரசமைப்பு உருவாக்கம் மகிந்தவை இணைத்துக்கொண்டதுடன் தூக்கி வீசப்படுமா? இதைவிட ஏராளம் கேள்விகள் எழுந்திருக்கின்றன. எல்லாவற்றுக்கும் வழமை போல் காலம் தான் பதில் சொல்ல வேண்டும். காத்திருப்போம்.

# புலிகளை வீழ்த்துவதற்கான இந்தியாவின் உதவி என்றும் பாராட்டுக்குரியது

தேவநாயகம் தேவானந்த்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் முத்துக்குமாரின் தீக்குளிப்பு, அதைத் தொடர்ந்து கருணாநிதியின் சாகும்வரை உணவு தவிர்ப்பு என்று தமிழகம் பரபரப்பாகியிருக்கும் போது இந்திய நாடாளுமன்றத் தேர்தல் 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்றது. இதில் பாரதிய ஜனதாக்கட்சி வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பு ஈழ ஆதரவாளர்களிடம் நிலவியது. அவ்வாறானதோர் ஆட்சி மாற்றத்தின் மூலம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு இலங்கையில் போர் நிறுத்தப்படலாம் என்று நம்பினர். இந்திய மத்திய அரசின் ஆட்சி மாற்றத்தை விடுதலைப்புலிகளும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் என்று பின்னர் அறிய முடிந்தது.



தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-52

**'மறுவாக்கு எண்ணிக்கை அமைச்சர்'**

இந்தச் சூழலில் இந்தியக் குடியரசின் பதினைந்தாவது மக்களவைத் தேர்தலின் 37இடங்களுக்கான தேர்தல் மே 13 திகதி தமிழ்நாட்டில் நடைபெற்றது. இதில் தி.மு.க மற்றும் காங்கிரஸ் கூட்டணியை தோற்கடிப்பதற்காக மாணவர்கள் களத்தில் இறங்கினார்கள். காங்கிரஸ் முக்கியஸ்தர்களைத் தோற்கடிப்பது அவர்களின் நோக்கம். மாணவர்களுக்கு நாம் தமிழர் கட்சியின் சீமான் துணையாக நின்றார்.

குறிப்பாக மத்திய நிதிய மைச்சராக இருந்த ப. சிதம்பரத்தைத் தோற்கடிப்பது முக்கிய நோக்கமாக இருந்தது. மாணவர்களின் தீவிர பரப்புரையால் பல முக்கிய காங்கிரஸ்காரர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். ப.சிதம்பரம் தோல்வியைத் தழுவும் நிலையில் இருந்தார். முதல் ஏழு சுற்றுக்கள் வரையான வாக்குகள் எண்ணிக்கையில் ப.சிதம்பரம் தோல்வி நிலையில் இருப்பதாகவே அறிவிக்கப்பட்டது. திடீரென எட்டாவது சுற்றில் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

இதனால் ப.சிதம்பரத்தை 'மறுவாக்கு எண்ணிக்கை அமைச்சர்' என்று கிண்டலடித்தார்கள். இதையே தற்போதைய இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தனது தேர்தல் பரப்புரையிலும் குறிப்பட்டிருந்தார்.


தமிழ்நாட்டின்-வண்டலூரில் நடைபெற்ற பா.ஜ.க பொதுக் கூட்டத்தில், பேசிய மோடி, "மத்திய அமைச்சரவையில் இருக்கும் ஒருவர் ரீகவுன்ட்டிங் மினிஸ்டர். அவர் வாக்கு எண்ணிக்கையில் தோற்றார். மறுவாக்கு எண்ணிக்கையில் ஜெயித்தார்" என்று குறிப்பிட்டார்.

**குடும்பத்தவர்களுக்கு பதவி பெறுவதற்காக டில்லி விரைந்த கருணாநிதி**

2009ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க எல்லாமுமாக 27 இடங்களில் வெற்றி பெற்றது. அ.தி. மு.க 12 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அப்போது ஆட்சியில் இருந்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மீண்டும் வெற்றி பெற்று மன்மோகன் சிங் இரண்டாம் முறையாகவும் தலைமை அமைச்சரானார். இதன் போது கருணாநிதி தனது குடும்ப அங்கத்தவர்களுக்கு மத்திய அமைச்சரவையில் அதிகளவு அமைச்சுப் பதவிகள் வேண்டும் என்று டில்லிக்குச் சென்று மத்திய அரசிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டார். இந்த அளவுக்கு ஈழத்தமிழர் பிரச்சினை யில் கருணாநிதி மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்ற விமர்சனத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

**மகிந்தவுக்குப் பொன்னாடை போர்த்திய தி.மு.காவினரும் இந்தியாவுக்குப் பாராட்டுத் தெரிவித்த மகிந்தவும்**

முள்ளிவாய்க்காலில் போர் உக்கிரமடைந்து, பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு மே 19ஆம் திகதியுடன் போர் முடிவுக்கு வந்தது. போர் முடிந்ததும் போரில் அகப்பட்ட மக்கள் முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். அந்தச் சூழலில் தி.மு.க கூட்டணி உறுப்பினர்கள் முள்வேலி முகாம்களைப் பார்ப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டனர். 'போர்க்குற்றவாளி' எனத் தமிழ் உணர்வாளர்களால் குறிப்பிடப்பட்ட மகிந்த ராஜபக்சவுக்கு அவர்கள் பொன்னாடை போர்த்தியது கடுமையான எதிர்ப்பைத் தோற்றுவித்தது. இந்தப் பின்னணியில் அண்மையில் (செப்ரெம்பர் 2018) சுப்பிரமணியம் சுவாமியின் ஏற்பாட்டில் டெல்லிக்குச் சென்ற மகிந்த ராஜபக்ச தந்தி தொலைக் காட்சிக்குச் சிறப்புப் பேட்டியொன்றை வழங்கினார். அப்போது, "இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது விடுதலைப்புலிகளை வீழ்த்துவதற்குப் பற்காற்றிய இந்தியாவின் உதவி என்றும் பாராட்டுக்குரியது" என்று குறிப்பிட்டிருந்தார். இறுதிப்போரின் போது இந்தியா மட்டுமல்ல பல்வேறு நாடுகளும் தங்களுக்கு உதவின என்று குறிப்பிட்ட மகிந்த ராஜபக்ச, இந்தியா உள்ளிட்ட நாடுகள் தங்களுக்குத் தடை விதித்தி ருந்தால், விடுதலைப்புலிகளை வீழ்த்தி யிருக்க முடியாது என்று கூறினார். குறிப்பாக இந்தியா செய்த உதவிகள் என்றும் பாராட்டுக்குரியன என்றார்.



**மகிந்தவின் கருத்தால் தமிழ்நாட்டில் சர்ச்சைகள்**

இலங்கையில் போர் உச்சத்தில் இருந்த போது இலட்சக்கணக்கான மக்களை விடுதலைப் புலிகள் பணயக் கைதிகளாக வைத்திருந்தனர் என்று கூறிய மகிந்த, போரில் அப்பாவி மக்கள் உயிரிழந்ததற்கு வருத்தமும் தெரிவித்திருந்தார். போர் நடைபெற்றபோது தாக்குதலைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறினார். மகிந்த ராஜபக்ச இந்தியாவில் இருந்தபோது தெரிவித்த கருத்துக்களால் தமிழ்நாட்டில் இலங்கை விவகாரம் தொடர்பாக மீண்டும் சர்ச்சைகள் உருவாகியிருக்கின்றன. இலங்கைத் தமிழர்களுக்கு தி.மு.க துரோகம் இழைத்தது என்று கூறிவந்த ஈழ ஆதரவாளர்களின் குற்றச்சாட்டு மகிந்தவின் கருத்தால் உறுதியானது. இதை எதிர்வரும் தேர்தலில் தமக்குச் சாதமாக்குவதற்கு ஜெயலலிதாவுக்குப் பிந்தைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்தது. தி.மு.காவுக்கு எதிரான கண்டனப் பேரணிகளை நடத்துவதற்கு ஆரம்பித்திருக்கிறது. தற்போது தமிழ்நாட்டில் ஆட்சியிலிருக்கின்ற அ.தி.மு.க அரசு மக்கள் ஆதரவை இழந்து வரும் சூழலில் இலங்கை விவகாரத்தைத் தி.மு.காவுக்க எதிரான பரப்புரைக்காகப் பயன்படுத்தி ஆதாயம் தேடுவதற்குத் திட்டமிட்டுள்ளார்கள். மகிந்த ராஜபக்சவின் கருத்து இந்திய மத்திய அரசின் சதி. தி.மு.க ஆட்சியமைப்பதைத் தடுக்கும் நோக்கத்துடனேயே அது மேற்கொள்ளப்பட்டது என்று கருணாநிதியின் மகள் கனிமொழி தெரிவித்திருக்கிறார். ஆக, ஈழ விவகாரம் எதிர்வரும் தமிழகச் சட்ட மன்ற மற்றும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் சூடுபிடிக்கவுள்ளது. இங்கு முக்கியமானது, தமிழ்நாட்டில் ஆட்சியில் இருக்கும் அ.தி.மு.க அரசு எதிர்கட்சியான தி.மு.காவுக்கு எதிராகக் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துவதாகும். (தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# படித்தவர்களின் வடக்கு மாகாண சபை...?

எல்லாரும் ஏறி இழைத்த குதிரையில் சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்த கதைதான் இது. ஒரு மாகாண சபையை வினைத்திறனுடன் செயற்படுத்த முடியாத ஓய்வு நிலை நீதியரசர் தமிழினத்தின் விடிவுக்கு வித்திடப் போகிறாராம்!

தமிழ்மக்களுக்கு முன் பின் அறிமுகமில்லாத விக்னேஸ்வரனைச் சம்பந்தனும் சுமந்திரனும் சேர்ந்து தூக்கி வந்தனர். வந்த அவர் ஐங்கரநேசனுக்கு அடிமையாகி அவரைக் காப்பாற்றுவதற்கு முயன்று மூக்கறுபட்டு நின்றார். அதுகூட அறியாதவராக இன்று விலாசமாகப் பேசுகிறார். அவரைப் பின்தொடரப்போவோர் ஐங்கரநேசனைப் போன்றவர்களாகத் தான் இருப்பார்கள். கடந்த காலங்களில் சிங்களவர்களின் சம்மந்தியாகச் செயற்பட்டு உறவு பேணியவர், முதல்வரானதும் ஒதுங்குகின்றார்.

சிங்கள அரசுக்குச் சேவகம் புரிந்து ஊதியமும், ஓய்வூதியமும் பெற்றுக்கொண்டிருப்பவர் வீராப்பாகத் தேசியம்பேசி இளைஞர்களைச்சிலிர்க்கவைக்கின்றார். இது அவர் கதிரைக்குப் போடும் கணக்கு. இதில் தமிழ் மக்களாகிய நாம் ஏமாந்துவிட மாட்டோம். நாம் சுதந்திரமாக, சுபீட்சமாக வாழ்வதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினோம். அதன் மூலம் தீர்வு பெறுவதற்காக வாக்களித்தோம். கடந்த மாகாண் சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் முதல் வேட்பாளராக முன்பின் விலாசமில்லாதவருக்கு வாக்களித்தோம். வெற்றி பெற்றோம்.

ஆனால் பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காய் முடிந்த கதையாகிவிட்டது. ஆனாலும் கூட்டமைப்பைச் சரிப்படுத்தித் தொடர்ந்து உழைப்போம்.

விக்னேஸ்வரன் மாகாணசபைக் கூட்டத்துக்குச் சமூகம் கொடுக்காமை, ஓய்வுபெற்ற நீதியரசராக இருந்து கொண்டு நீதிமன்ற ஆணையை அவமதித்தமை என அவர் இழைத்த குற்றங்களுக்கு என்ன நடந்தது. உதயன் மூலம் மக்கள் வெளிப்படுத்துகின்ற கடந்த கால விமர்சனங்களை இவர் பார்க்கவில்லையா? எதிர்க்கட்சி உறுப்பினர் மற்றும் சபை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு என்ன விடை சொன்னார். தன்வாயால் கெட்டதுதான் மீதம். உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்து படித்த மனிதர், இவரது நீதியோ விசித்திரம்.

யாழ்.இந்துவில் நடைபெற்ற கூட்டத்தில் தோசை பற்றிப் பேசினீர்கள். தோசைக்கு என்ன பொருள்கள் சேர்க்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய அந்திம காலத்தில் ஏன் பதவிக்கும் பணத்துக்கும் ஆசைப்படுகின்றீர் என்பது தெரியவில்லை. நீங்கள் எங்கள் வரலாற்றைத் திரும்பிப் பாருங்கள். நாங்கள் யார்? போர் எப்படியிருக்கும். போராட்டம் எப்படியிருக்கும். மக்கள் உயிர் இழப்புக்கள் சொத்துக்கள்...? புல்நுனியை மேய்ந்துவிட்டு அரசியலில் இறங்காதீர். நன்றே செய்வீர் அதை இன்றே செய்வீர்.

*எஸ்.கோபலசிங்கம், யாழ்ப்பாணம்.*




# பொலிஸ் பஸ் மீது தாக்குதல் ஆப்கானிஸ்தானில் 5 பேர் சாவு

காபூல்.ஒக்.29
ஆப்கானிஸ்தானில் பொலிசார் பயணம் செய்த பேருந்து மீது நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் அதிகாரிகள் உள்பட 5பொலிசார் உடல் சிதறிச் சாவடைந்தனர்.
ஆப்கானிஸ்தானின் வர்தாக் மாகாணத்தில் இருந்து புறப்பட்ட பேருந்தில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உள்பட 20க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.
அந்தபஸ்மீதுவெடிமருந்துகள்நிரப்பியமகிழுந்தைக்கொண்டு போய் மோதித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதலின்போதுபேருந்தில்பயணம்செய்த 2அதிகாரிகள், 3ஊழியர்கள் எனப் 5 பொலிசார் உடல் சிதறிச் சாவடைந்தனர். 12 பேர் படுகாயம் அடைந்தனர்.
தகவலறிந்து மீட்புக்குழுவினர் அங்கு விரைந்து சென்றனர். காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயமடைந்தவர்களில் சிலர் இன்னமும் ஆபத்தான நிலையில் இருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கும்எனக்கருதப்படுகின்றது. இந்தத்தாக்குதலுக்குத் தலிபான் அமைப்புப் பொறுப்பேற்றுள்ளது.

# "போரைச் சந்திப்பதற்கு

## அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை

மொஸ்கோ.ஒக்.29
அமெரிக்கா-ரஷ்யாமீது போர் தொடுத்தால்ரஷ்யாவும் போருக்குத் தயார் நிலையில் உள்ளது என்று அந்த நாட்டு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. ரஷ்யாவின் அயலுறவுத் துறைத் துணை இயக்குநரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
துணை இயக்குநரான அண்ட்ரே பெலுசோவ். ஐ.நா. சபையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். ரஷ்யா போருக்குத் தயாராகி வருவதாக அமெரிக்கா அண்மையில் குற்றம்சாட்டியிருந்தது. அது உண்மைதான்.
அமெரிக்கா போர் தொடுத்தால் ரஷ்யாவும் போருக்குத் தயாராக உள்ளது. அணுஆயுத வலிமையை அதிகரிக்கவே இரண்டு நாட்டு அணுஆயுத உடன்படிக்கையில் இருந்து அமெரிக்கா வெளியேறுகிறது.
இதன்மூலம் உலகின் பாதுகாப்பை மிகவும்மோசமானநிலைக்குஅமெரிக்காதள்ளியுள்ளது. ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளில் அணு ஆயுத ஏவுகணைகளைநிலைநிறுத்துவதற்குஅமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் ஒட்டுமொத்த ஐரோப்பாவின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி உள்ளது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.



**பின்னணி**
அணுஆயுதஒப்பந்தத்தைமீறிவரும்ரஷ்யாவுடன் இனியும் இணைந்திருப்பதில் அர்த்தமில்லை. அந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும்எனஅமெரிக்காவின்அதிபர்டொனால்ட்ட்ரம்ப் முன்னதாகத் தெரிவித்திரு
ஒப்பந்தத்தில் உள்ள நிபந்த
கட்டுப்படவில்லை.
அவர்கள் பல ஆண்டுகளாக
னர். இதுதொடர்பாக, முன்ன

# ஐ.எஸ். தற்கொலைப்படைத்தாக்குதல் சிரியாவில் 68பேர் கொல்லப்பட்டனர்

டமாஸ்கஸ்.ஒக்.29
சிரியாவின் கிழக்குப்பகுதியில் உள்ள அமெரிக்க ஆதரவு போராளிகள் மீது ஐ.எஸ். ஆயுததாரிகள் நடத்தியதாக்குதலில்68பேர்கொல்லப்பட்டுள்ளனர்.
சிரியாவில்பல்வேறுகிளர்ச்சியாளர்களுக்கும், அரசு படைகளுக்கும் இடையே 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர்நடந்துவருகிறது. கிளர்ச்சியாளர்களில் சிலர் அமெரிக்கப் படைகளுக்கு ஆதரவாக உள்ளனர்.
அதே நேரத்தில் சிரியா அரசுக்கு ரஷ்யா மற்றும் ஈரான் நாடுகள் ஆதரவாக உள்ளன. சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பல்வேறு பகுதிகளை அரச படையினர் மீட்டு வருகின்றனர்.
இதற்கிடையே, உள்நாட்டுப்போரால்பெரும்சேதத்தைச் சந்தித்துள்ள சிரியா நாட்டில் ஐ.எஸ் அமைப்பினர் அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்கள் மீது தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்தினர். இந்தத் தாக்குதலில் 68பேர்கொல்லப்பட்டுள்ளனர். நூறுக்கும்மேற்பட்டோர்காயமடைந்து இருப்பதால், உயிரிழப்புகள்அதிகரிக்கக்கூடும்என்று அஞ்சப்படுகிறது.

# ஒபாமா, ஹிலாரி வெடிகுண்டுப் பொதி விவகாரம் ஒருவர் கைது 5 பிரிவுகளில் அவர்மீது வழக்கு

வோஷிங்டன்.ஒக்.29
அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா. ஹிலாரிகிளிண்டன் உட்படபலருக்கும் வெடிகுண்டுகளைத் தபால் மூலம் அனுப்பிய நபர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை அமெரிக்கப் பொலிசார் கைது செய்துள்ளனர்.
இந்த வெடிகுண்டுப்பொதி விவகாரத்தில் தீவிரமாகத்தேடுதல்வேட்டையைஆரம்பித்திருந்த பொலிசார், 56 வயதான சீசர் சாயோக்என்பவரைக்கைதுசெய்துள்ளனர்.
வெடிகுண்டுப் பொதி ஒன்றில் இருந்த இவரது கைரேகையை வைத்து இவரைக் கைது செய்துள்ளதாக எப்.பி.ஐ. இயக்குநர் கிறிஸ்தோபர் தெரிவித்துள்ளார்.
இவர் மீது வெடிமருந்து கடத்தல், சட்டவிரோதமாகவெடிமருந்துகளைத்தபாலில் அனுப்புதல்உள்ளிட்ட 5பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் இவருக்கு 58 ஆண்டுகள் வரை சிறைத்



தண்டனை வழங்கப்படும்எனக்கூறப்படுகிறது. மேலும், இவரைக்கைது செய்ததன்மூலம் இந்த விவகாரம் முடியவில்லை எனவும், கைதுகள் தொடர்வதற்குவாய்ப்புஇருப்பதாகவும்கிறிஸ்தோபர்தெரிவித்துள்ளார்.

**பின்னணி**
அமெரிக்காவில் மிக முக்கிய பிரமுகர்களுக்கு அனுப்பப்படும் பொதிகள் உளவுப்படைப் பொலிசார் பரிசோதித்த பின்னரே அவர்களிடம் ஒப்படைக்கப்படும். அந்தவகையில், முன்னாள்அதிபர்பராக் ஒபாமா, முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சரும் தற்போதைய அதிபரான ட்ரம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்டவருமான ஹிலாரி கிளிண்டன் ஆகியோருக்கு அவர்களின் அலுவலக முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட வெடிபொருள் பார்சல்களை அமெரிக்க உளவுப்படையினர் பரிசோதித்ததில் அவற்றில் வெடிபொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டது.
இவர்கள்மட்டுமின்றி, அமெரிக்காவின் பிரபலஊடகம்ஒன்றுக்கும், ஜனநாயகக் கட்சியின் முக்கிய தலைவர்கள் மற்றும் ஹொலிவூட் நடிகருக்கும் இதுபோன்ற வெடிகுண்டுப் பொதிகள் அனுப்பப்பட்டிருந்தன. இந்த விடயத்தைத் தற்போதைய அதிபர் ட்ரம்ப் கண்டித்திருந்தார். அத்தோடு விசாரணைகளுக்கும் உத்தரவிட்டிருந்தார்.



# இராணுவ வாகனத்துடன் மினி பஸ் மோதியது

## எதியோப்பியாவில் 18 பேர் சாவு




அடிடாஸ் அபாபா.ஒக்.29
எதியோப்பியாவின்அம்ஹாராமாநிலத்தில்இராணுவவாகனத்துடன்சிற்றூர்தி மோதியதில் 18பேர் சாவடைந்தனர்.
ஆபிரிக்கநாடுகளில்ஒன்றானஎதியோப்பியாவில் சீரான பராமரிப்பு இல்லாத வீதிகள் மற்றும் ஓட்டுநர்களின் கவனவீனத்தால்வீதிவிபத்துகள்பெருகிவருகின்றன. இந்த நிலையில் நாட்டின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள அம்ஹாரா மாநிலத்தில் பயணிகள் சென்ற ஒரு சிற்றூர்தி எதிர்திசையில் வந்த இராணுவ வாகனத்துடன் நேருக்குநேராக மோதிய விபத்தில்18 பேர் பரிதாபமாகச்சாவடைந்தனர்.

# ...ற்கு நாம் தயார்"

## ...ரிக்கை



...த் தெரிவித்திருந்தார். "அணு ஆயுத ...உள்ள நிபந்தனைகளுக்கு ரஷ்யா ...லை.
...ஆண்டுகளாக இதை மீறி வந்துள்ள ...டர்பாக. முன்னாள் அதிபர் ஒபாமா ஏன்

பேச்சுநடத்திவெளியேறவில்லைஎன்பதுஎனக்குத் தெரியவில்லை.


எங்களுக்குஅனுமதிஇல்லாதஆயுதங்களைஅவர்கள் தயாரிப்பதை இனியும் அனுமதிக்க முடியாது. எனவே, அந்தஅணுஆயுதஒப்பந்தத்தைநாங்கள் நீக்கப் போகிறோம்" என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

அணு ஆயுதப் பரவலைக் குறைக்கும் வகையில் அதிபயங்கரபேரழிவைஏற்படுத்தும்போர்ஆயுதங்களைத் தயாரிப்பதில்லை என ரஷ்யாவும் - அமெரிக்காவும் ஒப்பந்தம் செய்திருந்தன. 1987ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒப்பந்தம் பதவிக்கு வருகின்ற இரண்டு நாட்டு அதிபர்களால் அடுத்தடுத்துப் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

தரையில்இருந்தோ, கடலில்இருந்தோ300முதல் 3ஆயிரத்து 400 மைல் தூரம்வரை பாய்ந்து சென்று தாக்கும் அணு ஆயுத ஏவுகணைகளை இரண்டு நாடுகளும் ஒழிக்க வேண்டும் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். இந்த ஒப்பந்தத்தை ரஷ்யா மீறி வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட்ட்ரம்ப்தொடர்ந்துகுற்றம்சாட்டிவருகின்றார். இந்த நிலையில்தான் ரஷ்யாவின் துணை இயக்குநர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

...ரம்

...த



## "யூதர்கள் சாக வேண்டும்" என்ற கோசத்துடன் யூதர்களின்வழிபாட்டுத்தலத்தில்துப்பாக்கிச்சூடு

### 11 பேர் சாவு, 6 பேர் காயம்

வோஷிங்டன், ஒக்.29

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள பிட்ஸ்பர்க் நகரில் யூதர்களின் வழிபாட்டுத் தலத்தின் அருகே ஒருவர் கண்மூடித்தனமாக மேற்கொண்டதுப்பாக்கிச்சூட்டில்11பேர் கொல்லப்பட்டுள்ளனர், 6 பேர் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டவர், 'யூதர்கள் சாக வேண்டும், எங்கள் மக்கள் வாழவேண்டும்'என்றகோஷத்துடன் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். வெறுப்புணர்வுடன் நடத்தப்பட்ட தாக்குதல் இது என்று அறிய முடிகின்றது. பிடீஸ்பர்க் நகரில் உள்ள வெண்டில் ஹிஸ்ரிச் பகுதியில் யூதர்களின்வழிபாட்டுத்தலம்இருக்கிறது. இங்கு ஒரு குழந்தைக்கு பெயர் சூட்டுகின்றநிகழ்ச்சிநடந்தது. 50க்கும் மேற்பட்டோர் அந்த வழிபாட்டுத் தலத்துக்கு வந்திருந்தனர்.

அப்போது அங்கு வந்த ஒருவர் தான் வைத்திருந்ததுப்பாக்கியைத்திடீரென எடுத்து அங்கிருந்தவர்கள் மீது சுடத் தொடங்கினார். சுடும்போது, யூதர்கள் சாக வேண்டும், எங்கள் மக்கள் வாழ வேண்டும் என்று கூறிக்கொண்டு சுட்டார். இதைப் பார்த்த மக்கள் அங்கிருந்துசிதறிநாலாபுறமும்ஓடினார்கள். பலர் குண்டுக்காயம் பட்டுச் சுருண்டு விழுந்தனர்.

இதையடுத்து, உடனடியாக அங்கிருந்தவர்கள் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தனர். அங்கு விரைந்து வந்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரைச் சுற்றி வளைத்தனர். ஆனாலும், அந்த நபர் தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டார். இதில் 4 பொலிசார் காயமடைந்தனர். அதன்பின் அந்தநபரை பொலிசார் கைதுசெய்தனர்.

முதல்கட்ட விசாரணையில் அந்த நபருடைய பெயர் ரொபேர்ட் பாவர்ஸ் (வயது46)என்பதுதெரியவந்தது. இது தொடர்பான விசாரணைகள் நடந்து வருகின்றன. இந்தக் கொலைச் சம்பவம் குறித்து அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறார். அவர் விடுத்துள்ள செய்தியில், "இனவெறியுடன், வெறுப்புணர்வுடன்நடத்தப்படும் இதுபோன்ற தாக்குதல்களைப் பொறுத்துக்கொள்ள முடியாது. இதைச் செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

# ஜமால் கொலையாளிகள் மீது சவூதியில்தான் விசாரணை

## சவூதியின் அயலுறவுத் துறை அமைச்சர் திட்டவட்டம்



ரியாத், ஒக்.29

பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொலை தொடர்பானவிசாரணைசவூதிஅரேபியாவில் தான்நடைபெறும்எனஅந்தநாட்டின்அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். துருக்கி நாட்டின் தலைநகர் இஸ்தான்புல் நகரில் உள்ள சவூதி அரேபியா நாட்டு தூரகத்தில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர் ஜமால் கஷோகிகொலைதொடர்பான குற்றவாளிகள் 18பேர் சவூதி அரேபியாவில் இருந்து நாடு கடத்தப்பட வேண்டும். அவர்கள்மீது எங்கள் நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று, தண்டனை விதிக்கப்பட வேண்டும் என துருக்கி அரசு வலியுறுத்தி வருகிறது. இந்தக் கோரிக்கைக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்த நிலையில், பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொலை தொடர்பாகச் சவூதி அரேபியாவை சேர்ந்த 18 பேரையும் நாங்கள் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். இதுதொடர்பான விசாரணையும்சவுதிஅரேபியாநாட்டில்தான் நடைபெறும் எனச் சவூதி அயலுறவுத் துறை அமைச்சர் அடெல் அல் ஜுபைர் தெரிவித்துள்ளார்.



### ஜமாலின் கொலையும் அதை மறைத்த கதையும்

"தூதரகத்துக்கு வந்து உங்கள் கல்யாணத்துக்கு தேவையான அனுமதி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்" என ஜமாலைத் துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள சவூதித் தூதரகம் அழைத்தது. அங்கு சென்று மீளத் திரும்பாத அவருடைய கொலை தொடர்பாகக் 3வாரங்களாகநம்பமுடியாதபலகதைகளைக் கூறிவந்தது சவூதி. எந்தப்பாதிப்பும் இல்லாமல் ஜமால் திரும்பி விட்டார் என்றது. பின்பு கைகலப்பு ஏற்பட்டதில் காயமடைந்து இறந்துவிட்டார் என்றது. கடைசியில் அரசு நிர்வாகத்தை மதிக்காத சக்திகளால் ஜமால் கொல்லப்பட்டு விட்டார் என்று கொலையை ஏற்றது.


இந்தக் கொலையில் சவூதி இளவரசருக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. அப்படி தொடர்பு இருப்பது நிரூபிக்கப்பட்டால் பன்னாட்டு ரீதியில் கண்டனமும் அரசு மீது பல்வேறுபொருளாதாரத்தடைகளும்விதிக்கப்பட வாய்ப்புள்ளது. இந்தப் படுகொலையில் தொடர்புடைய பலரை சவூதி மன்னர் கைது செய்ய உத்தரவிட்ட பிறகும், பிரச்சினையின் தீவிரம் குறையவில்லை.

கொலையை ஏற்றுக்கொண்டதன்மூலம்முக்கியமானநடவடிக்கையைஎடுத்துள்ளதுசவூதி நிர்வாகம். "இனி, இந்தக் கொலைக்கு காரணமானவர்கள்பற்றியும்அவர்களுக்குஅளிக்கப்பட்டதண்டனைகுறித்தும்தகவல்தெரிவிக்கும் என எதிர்பார்க்கலாம். ஜமாலைக் கொலை செய்வதற்குயார்உத்தரவிட்டதுஎன்பதுமுதல் யார் கொலை செய்தார்களோ அவர்கள் வரை அனைவரும் விசாரணைக்குக் கொண்டுவரப்படவேண்டும். ஜமாலின்கடைசிநிமிடத்தில் நடந்ததுஎன்னஎன்பதுமுதல்ஜமாலின்உடல் எங்கிருக்கிறது என்பது வரை கண்டுபிடிப்போம்" எனத் துருக்கியின் அதிபர் எர்டோகன் நாடாளுமன்றத்தில்அறிவித்திருக்கிறார். ஜமாலின் உடல் தொடர்பாக பலவிதமான கருத்துகள் வெளியாகியுள்ளன.

ஜமாலின் உடல் பல துண்டுகளாக வெட்டப்பட்டு பெட்டிகளில் அடைக்கப்பட்டு சவூதிக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் இல்லை யில்லை.. இஸ்தான்புல் சவூதித் தூதரகத்தின் தோட்டத்தில் புதைக்கப்பட்டது என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

மத்தியகிழக்குநாடுகளில்பொறுப்பானநாடாக கருதப்படும்சவூதியின்பெயர்இந்தக்கொலையால் மழுங்கடிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக சவூதிஇளவரசர்முகமதுபின்சல்மானின்மேல் சந்தேகம்திரும்பியுள்ளது. சீர்திருத்தவாதியாகக் கருதப்படும்சல்மான், அதிருப்தியாளர்கள்மீது இரக்கமில்லாமல் நடந்து கொள்வார் எனக் கூறப்படுகிறது. சவூதி இளவரசரின் ஒப்புதல் இல்லாமல்ஜமாலின்கொலைநடந்திருக்காது என்கிறார்கள் பலர். ஆனால் அதைச் சவூதி அரசு மறுத்துள்ளது. இந்தக் கொலை தொடர்பாக வெளியாகி வரும் பல்வேறு மாறுபட்ட கருத்துகளால் சவூதி நிர்வாகத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகி விட்டது. இந்தக் கொலையால் சவுதி அரசு மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இப்போது அனைவரின் கவனமும் அமெரிக்கா மீதும் ட்ரம்ப் நிர்வாகம் மீதும் திரும்பியுள்ளது. கைகலப்புதான் கொலையில் முடிந்ததாக சவுதி அரசு சொன்னதை நம்பிய ட்ரம்ப், துருக்கி அதிபர் வெளியிட்ட திடுக்கிடும் தகவல்களால், பொய்சொல்லிஅமெரிக்காவை ஏமாற்ற முயல்வதாக நட்பு நாடான சவுதி மீது குற்றம் சாட்டினார். பொருளா தார தடைகள் விதித்தால் அது, சவூதியை விட அமெரிக்க நிறுவனங்களையும் வேலை வாய்ப்பையும் அதிகம் பாதிக்கும் என்பதால் தடைகளைக் கொண்டு வருவதற்கு ட்ரம்புக்கும் விருப்பமில்லை. இதை அவரே வெளிப்படையாக கூறியிருக்கிறார். ஈரான் மீதான அடுத்த கட்ட பொருளாதாரத் தடைகள் நவம்பரில் நடைமுறைக்கு வரும் சூழலில், சவூதியிடம் கடுமையாகநடப்பதாஎன்றகேள்வியும்எழுந்துள்ளது. இதனால், ஐரோப்பிய நாடுகளும் பாதிப்புக்கு உள்ளாகும். இவற்றுக்கு மத்தியில் தனி ஒரு பத்திரிகையாளரின் கொலை மழுங்கடிக்கப்படுகின்ற வாய்ப்புக்களே ஏராளமாக உள்ளன.




# மீண்டும் செல்வராகவன் இயக்கத்தில் தனுஷ்!

'வடசென்னை'திரைப்படம்வெற்றி யடைந்துள்ளதைத் தொடர்ந்து. மீண்டும் நடிகர் தனுஷ் தனது அண்ணன் செல்வராகவன் இயக் கத்தில் நடிக்க உள்ளதாகக் கூறப்ப டுகிறது. தனுஷ்அடுத்துராம்குமார் இயக்கத்தில் ஒரு படம் நடிக்கவுள் ளார். அந்த படத்துக்குப் பின்னர் அவர்செல்வராகவன்இயக்கத்தில் நடிப்பார் எனத் தகவல் வெளியாகி யுள்ளது.

ரணில் அலரியை விட்டு
வெளியாகிட்டாரா…!?
இல்லையா..!?

அவர யாராவது பார்த்தாங்களா…!?
இல்லையா…!?

ஊடகங்கள்ல வாற செய்திய நம்பலாமா?
நம்பக்கூடாதா…!?



# twitter

இராவணன் @CroosNivethan




அரசியல்ல இதெல்லாம்
சாதரணமப்பா
#ரணில் #மகிந்த


Manoharan Rajiharan.@MassRaji



தீபாவளி தள்ளுபடி தலைமை
அமைச்சர் #மகிந்த



பகல் விடை எழுதினான்
இரவு டீச்சர் பேப்பர் திருத்தி இருக்கிறார்
அதுதான் பிழை போட்டுட்டா போல!







# சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | 4 | | | | 7 |
| 2 | 3 | | 5 | | | | | |
| | | | | | 6 | | | 2 |
| 4 | | | | 3 | | | | 6 |
| | | | | | | | | |
| 6 | | | | 2 | 9 | | 7 | |
| | 1 | | | | 7 | | 5 | |
| | | | 4 | | 2 | | | |
| 9 | | 3 | 1 | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 1 | 8 | 3 | 5 | 2 | 4 | 9 |
| 4 | 3 | 8 | 9 | 2 | 7 | 1 | 5 | 6 |
| 9 | 5 | 2 | 6 | 4 | 1 | 7 | 8 | 3 |
| 5 | 1 | 6 | 4 | 9 | 3 | 8 | 7 | 2 |
| 2 | 9 | 3 | 7 | 1 | 8 | 5 | 6 | 4 |
| 8 | 4 | 7 | 5 | 6 | 2 | 9 | 3 | 1 |
| 7 | 6 | 4 | 2 | 8 | 9 | 3 | 1 | 5 |
| 3 | 2 | 5 | 1 | 7 | 4 | 6 | 9 | 8 |
| 1 | 8 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 7 |



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கவனக்குறைவால் சிரமத்துக்கு ஆளாகலாம். நண்பரிடம் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** திட்டமிட்டு பணியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்ப்பு சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். உபரி வருமானத்தால் சேமிப்பு உயரும்.

**மிதுனம்:** மாறுபட்ட சூழ்நிலையால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் புதிய அணுகுமுறை நன்மையளிக்கும்.

**கடகம்:** எண்ணத்தில் நேர்மை வெளிப்படும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணியில் ஈடுபடுவீர்கள்.

**சிங்கம்:** ஆன்மிக நம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து புதிய சாதனை படைப்பீர்கள். கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**கன்னி:** திட்டமிட்ட பணிகளில் தாமதம் உருவாகலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**துலாம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.


**விருச்சிகம்:** வாழ்வில் அனுகூல பலன் தேடி வரும். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி அதிகரிப்பால் வியத்தகு வளர்ச்சி உண்டாகும்.

**தனுசு:** உற்சாக மனதுடன் பணிபுரிவீர்கள். நண்பர்களின் பாராட்டு கிடைக்கும். தொழில் வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** பணி நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். குடும்ப் விஷயம் பிறரிடம் பேச வேண்டாம். கடின உழைப்பால் தொழிலில் சீரான வளர்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** செயல் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். லாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். லாபம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர்.



# தங்க மீன்

ஒரு சிறிய குளத்தில் பல மீன்கள் வாழ்ந்து வந்தன. அதில் தங்க நிற மீன் ஒன்றும் சாம்பல் நிற, கெளுத்தி மீன் ஒன்றும் நல்ல நண்பர்கள். தங்க நிற மீன் பல சந்தர்ப்பங்களில் கரும் சாம்பல் நிறமுடைய கெளுத்தி மீனை தன் நிறத்தோடு ஒப்பிட்டு நையாண்டி செய்யும் கெளுத்தியோ தன் நண்பனின் சிந்தனையை எண்ணி நொந்து கொள்ளுமே தவிர பதில் ஏதும் சொல்லாது. "நிறத்தில் என்ன உண்டு ஆரோக்கியமான சுறுசுறுப்பான உடல் என்னுடையது" என்று மனதுக்குள் எண்ணிக் கெளத்தி மீன் ஆறுதல் பட்டுக் கொள்ளும்.

ஒருநாள் நன்றாக மழை பெய்து நீர் மட்டம் அதிகரித்தது. கெளுத்தி மீன் வழமை போல உணவு தேடும் வேலையில் இறங்கியது. அந்தக் குளத்தின் ஆழம் வரை சென்று கெளுத்தி மீன் உணவு சேகரித்தது. ஆனால் தங்கமீன் அப்படியானதல்ல. இதனால் ஒருபோதும் குளத்தின் ஆழத்துக்குச் செல்ல முடிவதில்லை. அது தன் மென்மையான அழகிய உடலைக் கஸ்ரப்படுத்தவும் விரும்புவதில்லை. அங்கொன்றும் இங்கொன்றும் கிடைத்த இரைகளைக் கொத்திக் கொண்டு நீரின் மேற்பரப்பில் தன் அழகிய உடலைக் காட்சிப்படுத்தி தினமும் வலம் வந்து கொண்டிருக்கம். கண்ணில் அகப்படும் மீன்களிடம் எல்லாம் தன் அழகையும் நிறத்தையும் பற்றி விதந்துரைத்துக் கொள்ளும். அத்துடன் தன் நண்பனான கெளுத்தியின் நிறம் தோற்றத்தையும் அது கேலி செய்து பேசும் கெளுத்தி அப்படியல்ல தன் திறமைகளை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்திப் பெருமை பேசும் பண்பு அதற்கில்லை.

அன்றும் நீரின் ஆழத்துக்குச் சென்று அது உணவு தேட ஆயத்தமானது. அது தங்க மீனிடமிருந்து விடைபெற ஆயத்தமானது. அந்நேத வேளை "என் அழகைப் பார். உடலின் மினுமினுப்பைப் பார். நீயும் இருக்கிறாயே கரு நிறத்தில் உடம்பெல்லாம் அழுக்காக..." என்று தன்னுடைய வழமையான பல்லவியைத் தொடங்கியது. தங்கநிறமீன். உண்மையாகவே அன்றைக்குத் தங்க மீனின் அழகு மேலும் ஜொலித்தது. நீரின் மேற்பரப்பில் பட்டுத் தெறிந்த வெயில் தங்க மீனின் அழகை ஆயிரம் மடங்காக்கி விட்டிருந்தது.

இந்த நிலையில் அந்த இடத்துக்கு வந்த கொக்கு ஒன்றின் கண்ணில் தங்க மீனின் அழகு பளிச் சென்று குத்தியது. உடனே அதனை லபக் கென்று தனது அலகுகளுக்குள் அடக்கிக் கௌவியபடி தூரப் பறந்து போனது.

**எப்போதும் மனிதர்களுக்குள் பேதம் கூடாது அது தீமையிலேயே முடியும்**



# பூகம்பத்துக்கு முன் ஏற்படும் மாற்றங்கள்

உலகெங்கிலும் அவ்வப்போது பூகம்பம், சுனாமி போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பூகம்பம் சுனாமி பேரிடர்களின் தாக்குதலுக்கு சில மணி நேரம் முன்பாக இருந்து சில நாள்கள் முன்பு வரை இயற்கைச் சூழலில் மிருகங்களின் குணாதிசயங்களிலும் சில மாறுதல்கள் ஏற்படுவதை பலர் அவதானித்துள்ளனர். இந்த மாறுதல்கள் பற்றி எல்லோரும் அறிந்திருந்தால், நாம் இவற்றை உணரும்போது அருகில் உள்ள காவல் நிலையங்களுக்கோ அல்லது வானிலை ஆய்வு மையங்களுக்கோ தகவல் வழங்கி மக்களைக் காப்பாற்றி உதவலாம்.

- **பாலூட்டிகள்**: பயந்து ஓடி வெறுப்புணர்வுடனும் கலவரத்துடனும் காணப்படும்.
- **மனிதர்கள்**: தலைவலி, தும்மல், வாந்தி மயக்கம், இதயக்கோளாறு, நரம்பு மண்டலம் பாதிப்பு மோசமான வானிலை என்பவற்றை உணர்வார்கள்.
- **நாய்கள்:** அதிக சத்தத்துடன் குரைக்கும். புதிய மனிதர்களைப் பார்த்தது போல நடந்து கொள்ளும். தமது எஜமான்களையே கடிக்கும்.
- **பூனைகள்**: கத்தும், மரத்தில் ஏறும் வீட்டை விட்டு வெளியே ஓடிவிடும்
- **தேரைகள், பாம்புகள், பனிக்கரடிகள்** தமது இருப்பிடத்தை விட்டு நகரும்
- **குதிரைகள்:** தரையில் விழும் , கால்களை அடித்துக் கொள்ளும்
- **மாடுகள்:** கூட்டாகச் சேர்ந்து கொள்ளும் வீதியில் ஓடும்.
- **பன்றிகள்**: ஒன்றையொன்று கடித்துக் கொள்ளும். குழி பறிக்கும்
- **மான்கள்**: புதர்களை விட்டும் காடுகளை விட்டும் ஓடிவரும். மனிதர்களைக் கண்டு பயந்து ஓடாது. மாறாக மனிதனுக்கு அருகில் நெருங்கி வரும். எந்த ஒரு குறிக்கோளும் இல்லாது ஓடும்.
- **முயல்கள்:** துள்ளிக் குதிக்கும், சுற்றிச் சுற்றி வரும்
- **வாத்து:** பறக்கும் நீரில் இறங்காது. பயந்து குரல் எழுப்பும். மனிதர்களைக் கடிக்கும்
- **பெட்டைக் கோழி:** முட்டை இடாது. இரு கருவுள்ள முட்டைகளை இடும்

# சின்னச் சின்ன மழைத் துளியே...



சின்னச் சின்ன மழைத்துளியே
என்னைக் கொள்ளை கொண்ட
சிலிர்க்க வைக்கும் மழைத்துளியே
மண்ணைக் காண வந்தாயோ

சிறகுகள் மட்டும் எனக்கிருந்தால்
வருவேன் விண்ணில் உன்னைக் காண
உன் சின்னத் தூறல் பார்க்கையிலே
எனக்குள் இன்பம் பிறக்கிறதே


உந்தன் சாரல் அடிக்கையிலே
மனதும் உடலும் குளிர்கிறதே
செல்லச் சிணுங்கல் கேட்கையிலே
இலேசாய் இதயம் அடிக்கிறதே

மண்மேல் கொண்ட காதலினால்
தரையை நீயும் அடைந்தாயோ
என்மேல் வைத்த காதலினால்
என்னை மெல்ல நனைத்துச் சென்றாயோ

கொட்டும் மழையில் நனைந்திடவே
கொடுப்பேன் ஓய்வு குடைகளுக்கே...



# வர்ணம் தீட்டுவோம்





# நகைச்சுவை

**ஆசிரியரும் மாணவனும்**

ஆசிரியர்: 100 இல் ஒன்று போனால் மீதி எவ்வளவு?
மாணவன் : 00

ஆசிரியர்: உன்னை விட அவன் சின்னப்பையன். அவனை நீ எதுக்கு அடிச்சாய்?
மாணவன்: நீங்களும் அதே தவறைத் த்தானே சேர் செய்கிறீர்கள்

ஆசிரியர்: சுத்தம் சோறு போடும்
மாணவன்: அப்படியென்றால் எது சேர் குழம்பு ஊத்தும்



க.வித்யா

# வாழ்க்கையில் நல்லொழுக்கம் வேண்டும்!

'ஒளி' என்பதை இனம் காண்பதற்கு 'இருள்' தேவைப்படுகிறது. இருளும் ஒளியும் ஒன்றுக்கொன்று முரணானவை. ஆயினும் ஓர் இடத்தில் ஒன்றுக்கொன்று உதவி செய்து தங்களை வெளிப்படுத்துகின்றன. இது வாழ்வியலுக்கும் பொருள் கற்பிக்கின்றது.

ஒளியானது இறுமாப்பு அடைவதைத் தவிர்க்கவும், இருள் குறுகிப் போவதைத் தவிர்க்கவும், சமநிலையான ஓர் எதிர்பார்ப்பு இருப்பதுபோல், சமூக உயிர்களுக்கு நல்லனவும், தீயனவும் அறியப்படுவதற்கு மனிதர்களிடத்தில் ஒழுக்கம் இன்றியமையாத தேவையாகிறது. அந்த வகையில் வாழ்க்கைக்கு ஒளியாக விளங்கும் ஒழுக்கம் அற்புதமானது.

**ஒழுக்கம்**

'ஒழுகு' என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'ஒழுகு' என்றால் ஒன்றை இடைவிடாது கடைபிடித்தலாகும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல சிறந்த உயர்ந்த நெறிகளை எந்த நேரத்திலும் விட்டு விடாமல் கடைப்பிடிப்பதாகும்.

ஒழுக்கம் என்பது ஒரு மரபு சார்ந்தது. ஒழுக்கம் என்பது, 'நீதி, சமூகம், பண்பு, கலாசாரம்' ஆகியவற்றைக் கொண்ட சமுதாயம் விரும்பி ஏற்றுக்கொண்ட ஒரு குணம். ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிட அவரவர் தனது ஒழுக்கத்தின் பால் சிறந்தவராக இருத்தல் அவசியமானது.


ஒருவர் புதியதாக ஒன்றைக் கற்றுக் கொள்வதற்காகத் திறந்த மனதுடன் இருப்பாரேயானால் அதன் பெயர் தான் ஒழுக்கம். கற்றுக் கொள்வதன் அம்சமே ஒழுக்கம். நல்லொழுக்கம் என்பது நன்னெறி சார்ந்த சிறப்பு, குணவியல்பு பண்பு அல்லது எப்போதும் அதனுடைய நல்லதுவாகவே மற்றும் நல்லதுக்குள்ளேயே இருக்கக்கூடிய மதிப்பீட்டுக் குணம்.

ஒழுக்கமானது தன்னடக்கம், மதிநுட்பம், உளவலிமை, நீதி, நன்னெறி, அழகுணர்வுகள், கொள்கை சார்புடையவை, உள்ளார்ந்தது ஆகும். மனிதனின் விலைமதிக்க முடியாத சொத்துக்கள் இரண்டு. ஒன்று ஒழுக்கம். மற்றொன்று உயிர். அதில் எந்த ஒன்றை இழந்தாலும் மீண்டும் பெற முடியாது.

**ஒழுக்கத்துக்கான வித்து**

எதிர்காலத்தின் தூண்களாக வரவேண்டியவர்கள் இன்றைய பிள்ளைகள். அவர்களை நன்னெறிப்படுத்துவதற்கு ஆசிரியர்கள் மட்டும், அரசு மட்டும் உதவினால் போதாது. குழந்தைகளின் ஒழுக்கத்துக்கான முதல் இடம், அவர்களுடைய குடும்பங்கள் தான். குடும்பம் என்பது எல்லா உறவுகளும் சேர்ந்த ஒன்று. நல்லதோர் உலகத்தின் வித்து, நல்லமனம் என்பதால், உலகத்துக்கான வளர்ச்சி, ஒழுக்கம் குடும்பத்திலிருந்தே தொடங்குகிறது. நல்லொழுக்கம் என்பது முழு உலகுக்கும் பொதுவானது. உலகில் அமைதி உண்டாக வேண்டுமானால், நாட்டில் சீர்முறை நிலவ வேண்டும். வீட்டில் அமைதி நிலவ வேண்டும். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் வாழ்க்கையில் நல்லொழுக்கம் உதிக்க வேண்டும்.

நல்லொழுக்கம் ஒவ்வொருவரிடமும் எப்படி உதிக்கும். இதை மூவரால் மட்டுமே முடியும். அவர்கள் மாதா, பிதா, குரு. ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் தான் ஒழுக்கத்தை கற்பிப்பதில் முதன்மையானவர். பள்ளிகளில் ஒழுக்கத்தை உருவாக்குவதில் ஆசிரியர் முக்கிய இடம் பெறுகிறார். தான் ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். மாணவர்களின் மத்தியில் ஆசிரியர்களின் நடவடிக்கை, செயல்பாடுகள் அனைத்தும் நம்பிக்கை ஏற்படுத்தும் நிலையில் இருக்க வேண்டும். அறிவுசார், உளம் சார், உடல்சார் செயல்பாடுகள் பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்கம் மேம்பட உதவ வேண்டும். பாடசாலைகளில் ஒழுக்கத்தை மாணவர்கள் கற்றுக் கொள்வதால், குடும்பம் மற்றும் சமுதாயத்தில் மாணவர்களின் செயல்பாடுகள் போற்றும் வகையில் மேம்படும்.



**ஒழுக்கத்தின் பயன்**

ஒழுக்கத்தின் அங்கமாக, 'அன்பு, அருள், இரக்கம், கருணை, பண்பு, பாசம், பொறை, தியாகம், தொண்டு' முதலியன உள்ளன. இவற்றைப் பின்பற்றி வாழ்கின்றவர்கள் சிறந்த ஒழுக்க சீலர்களாக உலகில் வலம் வருவர். ஒழுக்கமானது சிந்தனையில் உயர்வைக் கொடுக்கும், உறவை வளர்க்கும், அன்பைப் பெருக்கும், அமைதியைக் கொடுக்கும். ஒழுக்கம் நம்மை சாதனை புரியத் தூண்டும், மனப்பான்மையை வளர்க்கும். தங்களை உலகுக்கு அடையாளம் காட்டும். உங்களின் சொல்லானது விலை மதிப்புள்ளதாக கருதப்படும். நல்ல நிலையான புகழை நிலைநாட்டும். எல்லோருக்கும் முன் உதாரணமாக உங்களது ஒழுக்கம் திகழும். உங்களை மாற்றும் மனம் தெளிவாக இருக்கும். துணிவுடன் எதையும் செய்ய முடியும். வாழ்க்கை கடினமாக இருந்தாலும் நம்மிடம் நிம்மதியான மனநிறைவும், அமைதியும் நிலையாக நிலைத்திருக்கும். ஒழுக்கம் என்பது அகப்பொருள். ஒழுக்கத்தை உணவு, உடை, உறைவிடத்துக்கும் மேலாக வைத்துப் போற்றிப் பேணிக் காக்க வேண்டும்.

ஒழுகுதல் என்ப்து ஒழுக்கம் என்று பாராட்டப்படுகிறது. அதாவது ஒருவருடைய வாழ்க்கை நடைமுறைகள் ஒழுக்கம் என்று தீர்மானிக்கப்படும். ஒருவர் தனக்கும் தன்னைச் சுற்றி வாழும் மற்றவர்களுக்கும் தீமைகள் வராமல் வாழ்வது ஒழுக்கமுடைய வாழ்வாகும். இப்பிறப்பு மிகப்பெரிய சிறப்பான ஒன்று. இதற்கு இணையானது எதுவும் இல்லை. இதுவும் ஒரே ஒரு தடவைதான். அதுபோல ஒழுக்கமும் இதற்கு நிகரான ஒன்று. ஒருமுறை ஒழுக்கம் தவறினால் நாம் பிறந்த பிறப்பிற்கு பயன் எதுவுமில்லை. இந்தப் பிறப்பை ஒழுக்கமான முறையில் வாழ்ந்து, வாழ்க்கையின் பயனை அடைய வேண்டும்.

ஒழுக்க நிலையில் தற்சார்பான ஒழுக்கம் முதன்மையானது. அதாவது ஒரு மனிதன் தன்னைத்தான் கொண்டு வாழ்தல். தன்னுடைய ஐம்புலன்களையும் மனதில் கட்டுக்கோப்புடன் வைத்துக் கொள்ளல். உலகின் எல்லாதவித நோய், தீமை, துன்பத்துக்கும் அடிப்படைக் காரணம் ஒழுக்கமில்லாத இழிவுத் தன்மையே. ஒழுக்கத்துடன் வாழ்பவர்கள் என்றும் நலமுடன், வெற்றிகளுடன், பலருக்குப் பயன்படும்படி வாழ்வர். வாழ்க்கையின் பெரும்பகுதி ஒழுக்கத்தால் நிறைந்திருக்கும். வாழ்க்கைப் பயணத்தின் நெடிய வரலாறு ஒழுக்கத்தாலேயே எழுதப்படுகிறது.

ஒழுக்கத்தோடு வாழும் மனிதர்களே உலகில் வாழும், உண்மையான தெய்வங்கள். ஒழுக்கம் மிக்கோரைப் பணிந்து வணங்குவதில் தவறில்லை. ஒழுக்கத்திற்கு உயிரை விடுபவர்கள் சான்றோர் பெருமக்கள். ஒழுக்க சீலர்களை உலகம் போற்றி மகிழும். ஒழுக்கமே உயிரின் அமுதம்.

**ஒழுக்கம் குறித்த கருத்துக்கள்**

நல்ல நெறிகளைப் பின்பற்றி நடத்தல் ஒழுக்கம் எனப்படும். ஒழுக்கத்தைத் தமிழர்கள் சிறப்பு வாய்ந்த பண்பாட்டுக் கூறாகக் கொண்டிருந்தனர். ஒழுக்கம் பற்றி வள்ளுவர்,

*ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி!* (குறள் 137)

என்கிறார். இந்தக் குறளில், 'ஒழுக்கத்தால் மேன்மை கிடைக்கும் என்றும், ஒழுக்கம் தவறுவதால் பழி ஏற்படும்' என்றும் ஒழுக்கத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றார். கல்வி கற்கும் மாணவச் செல்வங்களாகிய நாம் ஒழுக்கத்தையும், கல்வியையும் இரு கண்களாக கடைப்பிடித்து வாழ்க்கைக் கல்வியைப் பயின்று சிறப்புற வேண்டும். ஒழுக்கத்தைக் காலம் தோறும் தவறாது பேணிக் காத்து ஒழுக வேண்டும்.

*ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்!* (குறள் 131)

ஒழுக்கதைப் பேணிக்காப்பதில் வல்லவர்களாகத் தமிழ் மக்கள் திகழ்ந்தனர். அதனால் தான் ஒழுக்கம் உயிரைவிட மேலானதாகக் கருதப்பட்டது. இதனையே வள்ளுவர், 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்று கூறுகிறார். இவ்வொழுக்கம் தொல்காப்பியர் காலத்திலும் இடம்பெற்றிருப்பது சிறப்புக்குரியதாகும்.

ஆரம்ப காலக்கட்டத்தில் கவனத்துடனும், ஒழுக்கத்துடனும் நடந்து கொள்ளாவிட்டால், வாழ்க்கைப் பாதையில் வழுக்கி விழ நேரிடும். நம்மை வழுக்கி விழாமல் தாங்கிப் பிடிக்கும் ஊன்றுகோல் ஒழுக்கம் என்பதை,




*இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே*
*ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்!* (குறள் 415)

என்ற குறள் மூலம் அறிய முடிகிறது. எந்தச் சூழ்நிலையிலும் நமக்குச் சரியான தீர்க்கமான வழியை அறம் சார்ந்து வழிநடத்திச் செல்வது நீதி நூல்கள் மட்டுமே. நீதி நெறிகளை நமக்கு வலியுறுத்தும் நோக்குடன் நம் சான்றோர்கள் இயற்றிய நீதிநூல்கள் எண்ணற்றவை. அவைகளில் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், நாலடியார், திரிகடுகம், சிறுபஞ்சமூலம், பழமொழி ஆகிய நூல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்தவையாகும். இவற்றில் திருக்குறள், உலகளவில் தமிழர்களின் ஒழுக்க நெறிகளைப் பறைசாற்றும் ஒப்பில்லா நூலாகப் புகழப்படுகிறது. பாடங்களில் படிக்கும் நீதிக் கருத்துக்களை படித்ததோடு மட்டுமல்லாது, ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும், நாட்டுப்பற்றையும் மேலும் வளர்த்து, எந்தவிதப் பேதங்களும் இல்லாமல் அனைவரையும் மதிக்க வேண்டும். வாழ்நாள் முழுவதும் கற்ற வழி நடந்து கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவர்,

*கற்க கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக!* (குறள் 391)

என்று அழகாகவும், தெளிவாகவும் உலக மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார்.

**நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்போம்!**

குடும்பம் தழைக்க, நாடு செழிக்க, நல்ல ஒழுக்கமான கருத்தை விதைக்க வேண்டும். ஒழுக்கமற்ற களைகளைப் பிடுங்கி எறிய வேண்டும். ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கடைப்பிடித்து வாழ்க்கையில் வெற்றி நடைபோட வேண்டும். உண்மையில் ஒரு மனிதன் ஒழுக்கமாக வாழ்வதற்கு உணர்வுள்ள மனிதனாக இருந்தால் போதும். ஒழுக்கம் என்பது உணர்வுள்ள மனிதன் வாழுகின்ற முறை. உணர்வுள்ள மனிதனின் வாழ்க்கைப் பாதை தான் ஒழுக்கமே அன்றி வேறு எதுவுமேயில்லை. உண்மையான ஒழுக்கம் என்பது நாம் செய்யும் செயல் யாருக்கும் எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாது என்ற நம்பிக்கை மட்டுமே.

இன்றையக் காலகட்டத்தில் கல்விக்கோ, பணத்துக்கோ நம் சமூகம் தரும் மதிப்பில் பத்தில் ஒரு பங்கு கூட ஒழுக்கத்திற்குத் தருவதில்லை என்பது கசப்பான உண்மை. பலர் ஒழுக்கம் என்றால் ஏதோ சுதந்திரக் குறைவு, மகிழ்ச்சியற்ற அல்லது புழுங்கி வாழும் வாழ்வு என்று அஞ்சுகின்றனர். ஆனால் ஒழுக்கமில்லாத கல்வியும், பணமும் இன்று எப்படியெல்லாம் சீரழிவை ஏற்படுத்தி வருகின்றன என்பதைக் கண்கூடாகப் பார்க்கின்ற இக்கால கட்டத்தில், இதை நாம் படிப்பதும், பின்பற்றுவதும், மற்றவர்களுக்கு வலியுறுத்துவதும் மேன்மையைத் தரும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

ஒழுக்கம் இருந்தால் கல்வி தானாக வரும். ஒழுக்கமும், கல்வியும் இருந்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம்!

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**அரசரத்தினம் பங்கையற்செல்வன்**

(அதியர் - கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்)

நல்லதோர் சேவையாளனாய்
நானிலமும் போற்றி நிற்க
வளமான தேசமதாய் ஆக்கியே
களமொன்றை வட்டக்கச்சியில் இட்டு
தேசமெலாம் திரும்பிப் பார்த்திட
நேசமுடன் பணியாற்றும் நல்லதிபர்
பெருமை தனை நன்கறிந்து
பேருவகை கொண்ட கல்வியமைச்சர்
பெரு நாடாம் சீனா சென்று வர
பாங்காக அனுப்பிய ஜவருள்
தமிழன் தான் என்ற
பெருமை தனைப் பெற்று
சீனாவில் பெருமையுடன் கால் பதித்த
எம் இனிய அதிபரை
வாழ்த்துகின்றோம்.
வாழ்க ! வளம் பெறுகவென

Best Wishes

Congratulations

வாழ்த்துவோர்:-
பாடசாலைச் சமூகம்,
கிளி/ வட்டக்கச்சி
ஆரம்ப வித்தியாலயம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மறவன்புலவைச் சேர்ந்த
ஆனந்தகுமார் குமுதரஜனி தம்பதியரின்
அன்பு புதல்வரும்
சாவகச்சேரி மகளிர் கல்லூரியின்
மாணவனுமாகிய

**ஆனந்தகுமார் அதீசன்**

2018 ஆம் ஆண்டு
தரம் 05 புலைமைப் பரிசில் பரீட்சையில்
185 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்தமையைப் பாராட்டுவ்துடன்
மேலும் பல பரீட்சைகளில் சித்தியடையவும்
வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
திரு.திருமதி தெய்வேந்திரம்
பெரியமாவடி, சாவகச்சேரி.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
177 புள்ளிகளைப் பெற்றுச் சித்தி அடைந்த

**செல்வி தேனுஜா இரவீந்திரன்**

அவர்களை மனதாரப் பாராட்டிக் கல்வியில்
மேலும் பல சிறப்புக்களைப் பெற
வாழ்த்துவதுடன்
அவரை வழி நடத்திய அதிபர்,
ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
தனபாலசிங்கம் பாட்டா, இரவீந்திரன் அப்பா,
சிவகாமி அம்மா, கஜானி அக்கா, வதனி மாமி,
வினோமாமி,ஜெயக்குமார் மாமா,
மனோரஞ்சிதம் அப்பம்மா.

பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

மு/ விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை
புலமைப் பரிசில் பரீட்சை வெற்றியாளர் பாராட்டு விழா-2018



மு/ விசுவநாதர் ஆரம்ப பாடசாலை
முல்லைத்தீவு மாவட்டத்தில்
அதிகூடிய மாணவர்களை சித்தியடையச் செய்த
பாடசாலையாக மு/விசுவநாதர் ஆரம்ப பாடசாலை
திகழ்கின்றது சித்தியடைந்த 34 மாணவர்களையும் 100
புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி
வாழ்த்துவதோடு வெற்றிக்காக உழைத்த அதியர் திரு.யோ.மகேஸ்வரன்
அவர்களையும் ஆசிரியர் திரு.ப.சுதர்சன் அவர்களையும் ஏனைய
ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**மாணவர்களின் பெயர் விவரம்**

**தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2018**

| இல | மாணவர் பெயர் | புள்ளி | இல | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 01 | ஞா. கௌசிகா - | 191 | 18 | ப.சாகித்தியா - | 180 |
| 02 | டி.டினோஜன் - | 190 | 19 | யோ.கயல்விழி - | 179 |
| 03 | பா.காபிரியேல் - | 190 | 20 | ச.சோலயா - | 179 |
| 04 | கி.அருண் - | 189 | 21 | செ.தளிர் - | 178 |
| 05 | ந.தர்சனா - | 187 | 22 | கி.மிதுனன் - | 175 |
| 06 | ச.சாணுகா - | 186 | 23 | ச்.கானதி - | 175 |
| 07 | கை.சாருதி - | 186 | 24 | சி.ஜொய்சன் - | 172 |
| 08 | ஜெ.மிதுரன் - | 186 | 25 | செ.கனிவிழி - | 171 |
| 09 | க.அபிசேகன் - | 185 | 26 | சி.யாழினி - | 168 |
| 10 | பூ.விதுசாளினி - | 185 | 27 | ஜெ.குணாளினி- | 167 |
| 11 | க.தனஞ்சன் - | 184 | 28 | த.தர்சாந் - | 167 |
| 12 | செ.கதிரவன் - | 184 | 29 | சி.ஶ்ரீறீபிரியா - | 166 |
| 13 | வி.துவாரகன் - | 184 | 30 | ஜெ.கீர்த்திகன் - | 165 |
| 14 | ஜீ.இசைநிலா - | 182 | 31 | ம.மகிழினி - | 165 |
| 15 | ப.தனஞ்சனா - | 182 | -32 | ம.யாயினி - | 164 |
| 16 | தி.நங்கை - | 181 | 33 | ஜெ.கீர்த்திகா - | 164 |
| 17 | த.தனுசியன் - | 181 | 34 | இ.சர்மிலன் - | 163 |

"கல்வியால் உயர்வோம்"



அதிபர்
யோ. மகேஸ்வரன்

Best Wishes



ஆசிரியர்
ப.சுதர்சன்

Congratulations

வாழ்த்துவோர்:
தரம் - 5 புலமைப்பரிசில்
மாணவர்களின் பெற்றோர்கள் (2018)

# சிறி குமரன் ரெக்ஸ்

ஆரம்பம்! தீபாவளிக் கொண்டாட்டம் ஆரம்பம்!

தித்திக்கும் தீபாவளியை சிறிக்குமரன் ரெக்ஸ் உடன் கொண்டாடி மகிழுங்கள்





நேரடியாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஆடைகள் அனைத்தும் மலிவுவிலையில்...

விசேடமாக Office wear சாறிகள் மிக குறைந்த விலையில்

சிறி குமரன் ரெக்ஸ்
இல. 770, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 221 6845



## வீடு/ அறை வாடகைக்கு

நல்லூருக்கு அண்மையில்
வீடு / அறை நாளாந்த வாடகைக்கு
மிகக்குறைந்த கட்டணத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

075 979 9161/ 077 769 9212



## சிறுநீரகம் தேவை

கிளிநொச்சியைச் சேர்ந்த
30 வயதுடைய
பெண்ணொருவருக்கு B குருதி
இன வகையைச் சேர்ந்த
சிறுநீரகம் தேவை.

077 324 4890, 077 832 1179


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சைவப்புலவர், தேசிய வீரப்பொதுமகன், நுண்கலைமாணி, கலைஞானி, கலைமாமணி, சிற்பசிரோன்மணி, சிற்பசிகாமணி, சிற்பகலாநிதி, சிவநெறிச்சன்மார்க்கர், சைவசின்மயர், இளங்கலைஞர் ஆன்மீக பிரசாரகர், அருளுரைவள்ளல், சிவயோகசிற்பி, தத்ரூபசிற்பி ஆகிய விருதுகளைப் பெற்ற பாலாவி வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த

### துரைசிங்கம் குமரநாதன்

(ஆசிரியர் - கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, யா/ மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)

அவர்கள் கடந்த 25.10.2018 வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி கஜநிதிபாலன் முன்னிலை யில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல விருதுகளைப் பெறவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- நண்பர்கள்,
பாலாவி வடக்கு, கொடிகாமம்.


1985ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையுமான ஒரே தொழிற் பயிற்சி நிலையம்

## யாழ். கலாலயா பயிற்சியகம்



இலங்கையின் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணையத்தில் பதியப்பட்டது.
விக்ரோறியா வீதி யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின்புற வீதி)

- ✔ கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட புதிய கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், Facial, Makeup பயிற்சிகளுக்கு சனி, ஞாயிறு பிரிவில் மட்டும் மேலதிக மகளிருக்கு அனுமதிகள் உண்டு.
- ✔ சாறி பிளவுஸ், ஷல்வார், தைக்கும் பயிற்சிகளிற்கு கிழமை நாள் பிரிவில் மட்டும் மேலதிக மகளிருக்கு அனுமதிகள் உண்டு.

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு மேற்படி பயிற்சிகளின் கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

மேலும் விபரங்களை நாள்தோறும் மு.ப 9.30 - பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முல்லைத்தீவு மாமூலையைச் சேர்ந்த

**இராசலட்சுமி சுப்பிரமணியம்**

**முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதியும் நீதிவானுமாகிய** செ.லெனின்குமார் அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக **25.10.2018 ஆம் திகதி சத்தியப்பிரமாணம்** செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் யாழ்.பல்கலைக்கழக புவியியல் பட்டதாரியும் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலை அபிவிருத்திக் குழுச் செயலாளரும் முள்ளியவளை அஞ்சல் பொதுசன அபிவிருத்திக் குழுவின் தலைவராகவும் **சாமஸ்ரீ** விருது பெற்ற சமூக ஆர்வலருமாகவும் மாமூலை பொலிஸ் பிரிவு சிவில் பாதுகாப்புச் சங்க உறுப்பினராகவும் கரைதுறைப் பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கநெறியாளர் குழு உறுப்பினருமாகவும் பெண் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்த்துவோர்:- குடும்பத்தினர்.
மாமூலை, முள்ளியவளை.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 09 . 1949

மறைவு 25 . 10 . 2018

### திருமதி நாகேஸ்வரி சின்னத்துரை(MS)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பலாலி கிழக்கை வதிவிடமாகவும், சேமபுலம் வீதி, உரும்பிராய் யாழ்ப்பாணத்தை தற்போதைய முகவரியாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சின்னத்துரை (MS) 25.10.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மூத்தாம்பி - நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரன் (சிவா - சுவிஸ்), கவிதா (தங்கா - சுவிஸ்), சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பராசக்தி, காலஞ்சென்றவர்களான நடேசமூர்த்தி, சிவலிங்கம் மற்றும் லோகேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் சகோதரியும், கனகம்மா, காலஞ்சென்ற செந்திவேல் மற்றும் தவமணி தேவி, யோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், இராஜரட்ணம் மற்றும் கந்தையா, அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், றமா, ஜெயக்குமார், பகீரதன் ஆகியோரின் மாமியாரும் சினோஜா, சானுஜா, லஷ்சிஜா, திசான், உமையன், நர்த்தனன், சாகித்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேமபுலம் வீதி,
உரும்பிராய்.

(CS/20894)(11,17)

தகவல்
குடும்பத்தினர்.

லோகேஸ்வரி - 0094 2122 30324, 076 484 1642

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் **அருமைப்பிள்ளை தம்பிப்பிள்ளை**

(இளவாலை வடக்கு, இளவாலை)

திதி:- ஐப்பசி அபரபக்க பஞ்சமி



உலகம் போற்ற சிறப்புற வாழ்ந்து
வாழ்வு சிறக்க குடும்ப விளக்காய்
என்னும் உங்கள் அருமையான பேச்சும்
மலர்ந்த முகமும் கனிந்த உள்ளமும்
பாசத்தின் உறைவிடமாய் எம்முடன்
வாழ்ந்து
என்றும் மாறாத நினைவில்
எமை விட்டுச் சென்று ஓராண்டாகியும்
உங்கள் நினைவுகள் எமைவிட்டு அகலாது.

மலர்வு
19.09.1936



உதிர்வு
08.11.2017

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
இளவாலை வடக்கு, இளவாலை.

## சிற்றுண்டிகளின்...

கொழும்பு, ஒக். 29

மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகப் பதவியேற்றுள்ள நிலையில், உணவுப் பொதியின் விலையை 10 ரூபாவினாலும், தேநீரின் விலையை 5 ரூபாவினாலும் குறைப்பதற்கு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர். இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் இணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்ததாவது,

இந்த விலைக் குறைப்பானது இன்று முதல் நடைமுறைக்குவரும். இதேநேரம், கொத்து ரொட்டி மற்றும் ப்ரைட் ரைஸ் பொதியின் விலையும் 10 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளது. பால் தேநீரின் விலை தற்போதைய நிலையிலேயே காணப்படும். இந்த விலைக் குறைப்பை உணவக உரிமையாளர்கள் நடைமுறைப்படுத்துகின்றார்களா என்பது குறித்து ஆராயப்படும் என்றும் அதனை நடைமுறைப்படுத்தாத உணவக உரிமையாளர்களுக்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை எரிபொருள் சூத்திரத்தை நீக்கி எரிபொருள்களின் விலையை குறைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டால், முச்சக்கர வண்டிகளின் பயணக் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று இலங்கை சுயதொழில் புரிவோருக்கான தேசிய முச்சக்கர வண்டிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இதேநேரம் தமது உற்பத்திகளுக்கு விலை குறைப்பு செய்வது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாக வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (5)

## மைத்திரியைக்...

கொழும்பு, ஒக். 29

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க சில்வா, பாதாள உலகக் குழுவின் மகாந்துரே மதுஷவைப் பயன்படுத்திப் படுகொலை செய்ய முயன்றார். இதற்கான சகலவிதமான ஆலோசனைகளையும் வழங்கி பின்னணியிலிருந்து செயற்பட்டது அமைச்சர் சரத்பொன்சேகா மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே. இவ்வாறு குற்றச்சாட்டை முன்வைத்தார் நாமல் குமார.

அம்பாறையில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எனது வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் அம்மாவும், அப்பாவும் இருக்கின்றார்கள். இருவரையும் அழைத்து வந்து ஊடகவியலாளர்களை சந்திப்பதற்கு முக்கிய காரணமொன்று உள்ளது. நான் உங்களுக்கு கூறியிருக்காத விடயமொன்றை தற்போது கூறவுள்ளேன். மைத்திரிபால சிறிசேனவை, பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க சில்வா, மகாந்துரே மதுசவ பயன்படுத்தி படுகொலை செய்வதற்கான செயற்பாட்டுக்கு அனைத்து விதமான ஆலோசனைகளையும் பின்னணியில் இருந்து வழங்குவது சரத்பொன்சேகா மற்றும் ரணில் விக்கிரமசிங்க என்பதை நான் அறிவேன். அதற்கான சாட்சியை பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க சில்வாவிடத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நாட்டின் தலைமை அமைச்சர் மாற்றப்படுவார் என்று எனக்குத் தெரியாது. தலைமை அமைச்சர் மாற்றப்படாத நிலையில் இந்த விடயத்தை நான் பகிரங்கப்படுத்தியிருந்தேன் என்றால் என்ன நடத்திருக்கும் என்று நான் கூறி உங்களுக்கு தெரியவேண்டியதில்லை.

நாலக்க சில்வா தனது தனிப்பட்ட விடயங்களுக்காக எதனையும் செய்ய முனையவில்லை. அவர் வெறும் அம்பு மட்டும் தான். முடிந்தால் அவரிடத்தில் தகவல்கள் அனைத்தையும் பெற்று விட்டு அவருக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு கோருகின்றேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நாலக்க சில்வா பொலிஸ்மா அதிபராக தனது பக்கத்திலேயே இருப்பார். எவ்விதமான பிரச்சினையும் இல்லை என்றே அவருக்கு கூறப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் தலைமை அமைச்சர் பதவியையே விட்டுச் செல்ல மனமில்லாதிருக்கும் ரணிலுக்கு அரச தலைவர் பத்வி மீது ஆசையில்லாமலா இருந்திருக்கும்? என்று கேள்வி எழுப்பினார். (5.71)


**விற்பனைக்கு**

40-XXXX லொறி. 301-XXX- கார் விற்பனைக்குண்டு. மிக்ஷர் கம்பனி விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 0050 344**






மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:

**0773 788 654**

WUSLEY

**Wusley Lanka (PVT) Ltd**

# 117, 1st Cross Lane, off Parakum Mw, Attidiya, Dehiwala

email: info@wusleylk.com

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரஞ்சிதமலர் சந்திரகாந்தன்

**தோற்றம்: 29.06.1953** **மறைவு : 27.10.2018**



பாடசாலை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி இரஞ்சிதமலர் சந்திரகாந்தன் 27.10.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**075 424 6865** (cs.20896) (13.17)



### திருமதி லீலாவதி இராசநாயகம்

**(ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)**

இல. 733, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி இராசநாயகம் நேற்று (28.10.2018) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற பீற்றர் இராசநாயத்தின் அன்புமனைவியும் அலன்பிரசாந்தின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.10.2018) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு அடைக்கல மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : மகன்.**

## யா/ வரணி மத்திய கல்லூரி 06 ஆம் ஆண்டுக்கான அனுமதிகோரல் -2019

வரணி மத்திய கல்லூரியில் **தரம் - 06 ஆம் ஆண்டுக்கான அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன விண்ணப்பங்கள் எதிர்வரும் 20.11.2018 ஆம் திகதிக்கு** முன்னர் கல்லூரியில் ஒப்படைக்கவும் விண்ணப்பங்களை கல்லூரி நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அதிபர்,**
**யா/வரணி மத்திய கல்லூரி.**

(cs.145384) (13.17)

## பத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பிமுத்து சோமசுந்தரம்

தோற்றம்
01.04.1942

மறைவு .
29.10.1999

திதி:- பஞ்சமி

உள்ளத்தில் உறைந்திருக்கும் என் அன்புக்குரிய உறவே
உயிராய் உலகமாய் நாம் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து
வருந்துகின்றேன்
உமைப் பிரிந்து ஆண்டுகள் பத்தொன்பதைக் கடந்திடினும்
உங்கள் நினைவுகள் இன்றும் கலையவில்லை.

*தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்*

**சங்குவேலி தெற்கு,**
**மானிப்பாய்.**

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி

(CS/20891)(11.17)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேசசபையில்
கடமையாற்றும் உத்தியோகத்தர்

**பு. நவநீதன்**

அவர்களின் அன்புத் தந்தை

**பேதுறு புலேந்திரன்**

அவர்களின் மறைவினால்
துயரடையும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**நல்லூர் பிரதேசசபை நலன் புரிச்சங்கம்**

## மரண அறிவித்தல்கள்




### கந்தையா கணேசகுலசிங்கம்

அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணேசகுலசிங்கம் 27.10.2018 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.10.2018) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

**சிவசக்தி கோயிலடி.**
**அச்சுவேலி தெற்கு.**
**அச்சுவேலி.**

**தகவல் : குடும்பத்தினர்**
**077 736 6844**



### கந்தையா சிவப்பிரகாசம்

காரைநகர் தபால் கந்தோர் அடியை பிறப்பிடமாகவும், நாவலர் லேன், ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவப்பிரகாசம் 27.10.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கந்தையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கமலாதேவி (ஆனைப்பந்தி), சிவபாக்கியம் (ஓய்வுபெற்ற தபால் தந்தி தொடர்பு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), சிவயோகம் (கனடா), காலஞ்சென்ற மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2018) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**271/3, நாவலர் லேன்**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**சிவபாக்கியம் -**
**நவரெத்தினம் (சகோதரி)**

**021 222 9230**

கோடிபதி சனிதா
KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 360
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.10.28
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 100,475,208/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
G 08 31 51 76
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 417
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.10.28
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 64,176,535/-
வெற்றி இலக்கங்கள்
03 27 47 70 F
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் **26.10.2018** **வெள்ளிக்கிழமை** இடம்பெற்ற கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப்பின் 6ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது வருடா வருடம் அவர்களால் வழங்கப்படும் **சிறந்த சமூக சேவையாளருக்கான 2018 ஆம் ஆண்டுக்கான விருதினை**

**கௌரவ மனோ கணேசன்**
**(அமைச்சர், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள்)**
அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட
**திரு.இ.குவேந்திரநாதன்**
அவர்களை நாமும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- **உரிமையாளரும் ஊழியர்களும்**
**விஸ்ராவிசன், யாழ்ப்பாணம்.**

(CS/20880)(11/17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

மலர்வு 20 • 10 • 1951



உதிர்வு 29 • 09 • 2018

## அமரர் செல்வராசா வையந்திமாலா

எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு ஓத் தாசைகள் புரிந்தோர், கண்ணீர் அஞ்சலி, போஸ்டர்கள், துண்டுப்பிரசுரங்கள் வாயிலாகவும் தொலைபேசி வாயிலாகவும் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மலர் வளையம் மற்றும் பிற வழிகளினும் உதவிய எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். இன்று (29.10.2018) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

**103/3, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS/72061/5077)

## எந்த....

குழுவின் தலைவருக்கும் இடையில் தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே மேற்படி விடயத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

2018ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் கடந்த 25ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. அது தொடர்பில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுடன் முதலில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன் பின்னர் நாட்டின் அரசியல் நிலமை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

யாருடனும் எந்த விடயம் தொடர்பிலும் தர்க்கிக்க வேண்டாம். அது மறுப்பாகவே அமையும். அதனைத் தவிர்ப்பது நல்லது என்று ஆலோசனை வழங்கிய தேர்தல்கள் ஆணையாளர், எந்த நேரத்திலும் எந்தத் தேர்தலை வேண்டுமானாலும் நடத்துவதற்கு தயாராக இருக்குமாறு பணித்துள்ளார். (5,105)

## மகிந்தவைச்...

கொழும்பு, ஒக். 29

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை மகிந்த மற்றும் ரணில் தரப்பினர் நிரூபிப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் நிலையில், ஐ.தே.க. அணியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்சவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மகிந்த ராஜபக்சவின் இல்லத்தில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், கல்வி இராஜாங்க அமைச்சர் மு.இராதாகிருஸ்ணன், அரவிந்த குமார் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர். மகிந்தவுக்கு அவர்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. அதனை மறுத்துள்ள அவர்கள், தாம் சம்பிரதாயபூர்வ சந்திப்பையே மேற்கொண்டதாகக் கூறியுள்ளனர். (5,61)

## பல்டி...

கொழும்பு, ஒக். 29

தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்த அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியுடன் நேற்று மீண்டும் இணைந்து கொண்டார்.

தென்னாபிரிக்காவுக்குச் சென்றிருந்த வசந்த சேனாநாயக்க நேற்று நாடு திரும்பியிருந்தார். அவர் உடனடியாகவே அலரி மாளிகைக்குச் சென்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

அவர் தெரிவித்ததாவது, இந்த நாட்டில் ஆட்சியில் அமர்ந்த அரசுகளில் மிகவும் மோசமான அரசாகக் காணப்படுவது கூட்டு அரசுதான். அந்த அரசு ஆட்சியிலிருந்து அகன்று சென்றமையினையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன். புதிய அரசில் இணைவதென்றால் மூன்று நிபந்தனைகள் உள்ளன.

முதலாவதாக புதிய அரசில் பங்கேற்றுக் கொள்ளுமாறு எனக்கு அழைப்பு விடுக்க வேண்டும். அவ்வாறான அழைப்பொன்று இன்னமும் விடுக்கப்படவில்லை. எனக்கு அழைப்பு உண்டா இல்லையா என்பது தெரியாதுள்ளது. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால் எனக்கு ஆணை வழங்கிய பொலநறுவை மக்களுக்கு சேவையாற்றக்கூடிய வகையிலான ஏற்பாடுகள் அவசியமாகின்றது. மூன்றாவதாக எனது பொலநறுவை மக்கள் எனக்குப் புதிய அரசில் இணைவது குறித்து அனுமதி அளிக்க வேண்டும் என்றார். (5,61)

## இலங்கை....

கொழும்பு, ஒக். 29

இலங்கையின் அரசியல் நிலவரங்களை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் ரவீஸ் குமார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களுக்குப் பின்னர், இந்தியா முதல் முறையாக நேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அண்மைய அரசியல் நிலவரங்களை இந்தியா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

ஜனநாயக மற்றும் நெருக்கமான நட்பு அயல் நாடு என்ற வகையில், ஜனநாயக பெறுமானங்கள் மற்றும் அரசமைப்புச் செயல்முறைகள் மதிக்கப்படும் என்று நம்புகிறோம். இலங்கை மக்களுக்கான அபிவிருத்தி உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்கும், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## தொடரும்...

வளாகத்துக்குள் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் காயமடைந்து, கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூன்று பேரில் ஒருவர் உயிரிழந்தார். குருணாகல் பகுதியை சேர்ந்த ஆர்.இ.ஏ ராஜபக்ச என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட பாதுகாப்பு அதிகாரி பின்னர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்ததாவது, இன்று (நேற்று) வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியிருந்தேன். எனது உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் அலுவலகம் என்பன இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்துக்குள்ளேயே இருக்கின்றன. அங்கு எனது திறப்பு ஒன்றை எடுப்பதற்குச் செல்ல வேண்டியிருந்தது. இது தொடர்பில் செயலருக்கு அறிவித்துவிட்டு அங்கு சென்றேன்.

நான் அங்கு பிரவேசித்தபோது, நகர சபை உறுப்பினர் ஒருவர் என்னை மோசமான வார்த்தைகளால் திட்டினார். 4ஆம் மாடியுள்ள அறைக்குச் சென்ற சிறிது நேரத்தில், இடைநிறுத்தப்பட்ட சங்கத்தின் ஊழியர் ஒருவர் தலைமையிலான ஒரு குழுவினர் பாதுகாப்புப் பிரிவினரையும் தாண்டி என்னை நோக்கி வருவதை, எனது அறையிலிருந்த மறைகாணி ஊடாக அவதானித்தேன். அவர்களது கையில் இரும்புப் பைப், கொட்டன்கள் இருந்தன. அவர்கள் எனது அறையை முற்றுகையிட்டு சுமார் 3 மணி நேரம் அங்கிருந்து வெளியேற விடவில்லை.

மேலதிக பாதுகாப்புப் பிரிவினர் அழைக்கப்பட்டனர். அவர்களின் பாதுகாப்புடன் நான் அங்கிருந்து வெளியேற்றப்படும்போது, என்மீது படுகொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்போது எனது பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிச் சூடு நடத்தினார். யாருடைய ஏவலிலோ வந்த ஒருவர் உயிரிழந்தமை கவலையளிக்கின்றது என்றார்.

இதேவேளை அமைச்சர் ரணதுங்க, சிறப்பு அதிரடிப்படையினரின் ஜீன்ஸ், மற்றும் கவசம் அணிந்தே வெளியேற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 28.10.2018
வெற்றி வாரம் 2390
வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
20 39 40 48
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 3,981,520/=
2018.10.30ம் திகதி செவ்வாய்க் கிழமை. நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 874
சீட்டிழுப்பு திகதி 2018.10.27 சனிக்கிழமை
S 10 30 45 70
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 56,528,156/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## நானே...

கொழும்பு, ஒக். 29

நான் கூட எடுக்க முடியாத தீர்மானத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ளமை தொடர்பில் பெருமை அடைகின்றேன் என்று தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தனக்குக் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மைத்திரிக்கும், மகிந்தவுக்கும் இடையிலான உறவுகள் வலுவாக உள்ளது. புதிய அமைச்சரவை இன்று நியமிக்கப்படவுள்ளது. நாடு புதிய பாதையில் பயணிக்கவுள்ளது. ரணில் தனக்குப் பெரும்பான்மை உள்ளதாகக் கூறுகின்றார். எமது பக்கம் 133பேர் உள்ளனர் என்றார். (5,71)

## இன்று...

உண்மையுமில்லையெனவும் அது வதந்தியெனவும் தெரிவித்து அரச தகவல் திணைக்களம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (5)

## பெற்றோலிய...

கொழும்பு, ஒக். 29

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தமையைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்தனர். **இதனால் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. அமைச்சர் ரணதுங்கவைக் கைது செய்யுமாறு கோரியே மேற்படி போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.** (5,61)

# பொடுகை விரட்ட அற்புத மருந்து வேப்பம்பூ

மருதாணி இலையை ஒரு கப் எடுத்துக்கொண்டு, அதனுடன் வெந்தயம், வேப்பிலை, துளசி, சீயக்காய் ஆகியவற்றைக்கலந்து நன்கு அரைத்துக்கொள்ள வும். அரைத்த கலவையுடன் ஓர் எலுமிச்சைப் பழத்தை இரண்டாக நறுக்கி அரை எலுமிச்சை பழச்சாற்றைஅக்கலவையுடன்சேர்த்துநன்குகலந்துகொள்ளவும். எலுமிச்சைபழச் சாறுக்கு ப்பதில் தயிரையும் பயன்படுத்தலாம். நன்கு கலக்கப்பட்ட கலவைத் தலையில் பூசி ஒரு மணி நேரம் ஊறவைக்கவும். பிறகு தலைக்கு நன்கு அலசி குளிக்கவும். இவ்வாறு தொடர்ந்து ஒரு மாத காலம் செய்துவர பொடுகுத் தொல்லை போய்விடும். இந்தக் கலவையைப் பயன்படுத்துவதால்தலைமுடியும்'கருகரு'வெனநன்குவளரும். அதிகம் பொடுகு உள்ளவர்கள், வாரத்திற்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ, மூன்று வாரங்கள் குளித்தால் பொடுகு சுத்தமாக நீங்கி விடும்.



# முகச்சுருக்கங்கள் வராமல் தடுக்கும் தக்காளிச் சாறு...!



தக்காளியில் உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான அயோடின், கந்தகம், மக்னீஷியம், பொட்டாசியம், சோடியம், இரும்பு சுண்ணாம்பு போன்ற சத்துக்களும், மேலும் விற்றமின் சத்துக்களும் ஏராளமாய் அமைந்துள்ளன. கோடைகாலத்தில் முகத்தில்ஏற்படும் முகச்சுருக்கங்கள் மறைய தக்காளிச் சாற்றை முகத்தில் பூசி வருவதால் தோல் மென்மையடைவதுடன் குளிர்ச்சியும் உண்டாகும்.


புரோஸ்டேட் புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல் தக்காளிக்கு இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. தக்காளியில் அதுவும்சமைத்ததக்காளிக்குப்புரோஸ்டேட்புற்றுநோயைக்குணப்படுத்தும் ஆற்றல் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது.

தக்காளியில்விற்றமின் சிவளமாக இருப்பதால், இதனை உணவில்சேர்த்து வர உடலின்நோயெதிர்ப்புசக்தியானது அதிகரிக்கும். தக்காளியிலுள்ள அஸ்கார்பிக் அமிலம் செல் அழிவைத் தடுப்பதுடன் சுண்ணாம்புச் சத்தை நிலை நிறுத்துகின்றன.

நன்குபழுத்ததக்காளிஇரண்டுஎடுத்து, சிறிதுசிறிதாகஅரிந்து, மிக்ஸியிலிட்டு, ஜூஸ் எடுத்து வெறும் வயிற்றில் காலையில் பருகி வந்தால் போதும், தோல் சம்பந்தமானநோய்கள்குணமாகும். தோல்மற்றும்விதைகளைநீக்கிவிடுவது நல்லது.

அதேபோல் விற்றமின் கே சத்தும் அரிதான ஒன்று. இந்த விற்றமின் குருதிக் கசிவுகளை கட்டுப்படுத்த உதவுகிறது. தக்காளியை தோல்மற்றும்விதையை நீக்கிசாறுதயாரித்துகுடிப்பதால், அவைசிறுநீர்கிருமித்தொற்றைநீக்குகிறது.

# சத்து நிறைந்த கீரைத்தண்டு பச்சடி



**தேவையான பொருள்கள் :**

கீரைத்தண்டு : ஒருகட்டு
பெரியவெங்காயம் : 1
பச்சைமிளகாய் : 2
தக்காளி : 1
கறிவேப்பிலை : கொஞ்சம்
கொத்தமல்லி : ஒருபிடி
புளிப்பில்லாததயிர் : 2 கப்
சீரகம் : அரை டீஸ்பூன்
உப்பு : சுவைக்கேற்ப
எண்ணெய் பொரிக்க



**செய்முறை :**

தக்காளி, வெங்காயம், கொத்தமல்லி, ப.மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

கீரைத்தண்டைச்சுத்தம்செய்துபொடிப்பொடியாகநறுக்கி உப்பு சேர்த்து ஆவியில் வேக வைத்து கொள்ளவும்.

வேக வைத்து கீரை தண்டை ஒரு பாத்திரத்தில் போட்டு அதனுடன் பொடித்த வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், கொத்தமல்லி, தயிர் சேர்த்து, கலந்துகொள்ளவும்.

எண்ணெய் காய வைத்து சீரகம், கறிவேப்பிலை போட்டு தாளித்து இதில் கொட்டவும்.

இந்தபச்சடிச்சப்பாத்தி அசைவ உணவுகளுக்குநன்றாக இருக்கும். இதில் தேவையெனில் கேரட்டைக் கூட சேர்த்துக் கொள்ளலாம்.

## பாதுகாப்புச்...

கொழும்பு, ஒக். 29

மகிந்த தலைமையிலான புதிய அரசு அமைந்துள்ள நிலையில், பாதுகாப்புச் செயலராக கோத்தபாய ராஜபக்ச நியமிக்கப்படவுள்ளார் என்று ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டது. இருப்பினும், புதிய அரசில் எந்தவொரு பதவிகளையும் கோத்தபாய ஏற்கமாட்டார் என்று அவரது ஊடக இணைப்பாளர் மிலிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலராக உள்ள கபில வைத்யரத்னவுக்குப் பதிலாகவே கோத்தாபய ராஜபக்ச நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது. மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புத் தொடர்பாக கோத்தாபய ராஜபக்ச பொலிஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே மேற்படித் தகவல் வெளியாகியிருந்தது.

கோத்தபாய ராஜபக்சவின் ஊடக இணைப்பாளர் மிலிந்த ராஜபக்ச, இந்தத் தகவலை மறுத்தார். கோத்தபாய எந்தவொரு பதவிகளையும் இந்த ஆட்சியில் பெற்றுக் கொள்ளமாட்டார் என்றும் குறிப்பிட்டார். (5)

## மகிந்தவுக்காக...

கொழும்பு, ஒக். 29

புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்சவுக்கு வரவேற்புத் தெரிவித்து, கிளிநொச்சி நகரில் நேற்றுப் பொங்கல் பொங்கி, பட்டாசுவெடித்து மகிந்தவின் ஆதரவாளர்கள் கொண்டாடினர்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கட்சியைச் சேர்ந்தவர்களே இந்த ஏற்பாடுகளை மேற்கொண்டு அவர்களே அதில் பங்கெடுத்தும் இருந்தனர்.

கிளிநொச்சிப் பொது மருத்துவமனைக்கு முன்பாக உள்ள கட்சி அலுவலகத்தில் பொங்கல் இடம்பெற்றது.

இது தொடர்பான ஒளிப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வெளியாகியிருந்தது. அது தொடர்பில் பலரும் தமது கண்டனத்தைப் பதிவு செய்தனர். தமிழ் மக்களை இனஅழிப்புச் செய்த ஒருவருக்காக, போரின் பாதிப்புக்கு உள்ளான மக்களே இவ்வாறு செய்வது சரியா என்றும் கருத்துப் பதிவிடப்பட்டது.

(5,7,8,35,214)

## அலரிமாளிகைக்கான...

கொழும்பு, ஒக். 29

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக 100 இற்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்கியுள்ளனர். நாம் ஒருபோதும் அலரிமாளிகையிலிருந்து வெளியேறமாட்டோம். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைவாக உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், தலைமை அமைச்சர் பாதுகாப்புப் பிரிவின் எண்ணிக்கையை 10 ஆகக் குறைக்குமாறு, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவினால், அலரிமாளிகையின் தலைமை பொலிஸ் அத்தியட்சகருக்கு நேற்று இரவு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு பதவியிலும் இல்லாத கோத்தபாய ராஜபக்சவுக்கு 70 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ள நிலையில், தலைமை அமைச்சரின் பாதுகாப்புக்கு 10 பேர் மாத்திரம் உள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கூறியுள்ளார்.

அத்துடன் அலரிமாளிகைக்கான மின்சாரம் மற்றும் நீர்விநியோகத்தைத் துண்டிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அலரிமாளிகையை விட்டு ஒரு போதும் வெளியேற மாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறியுள்ளனர். (5,61)

## எம்.பிக்களுக்கு...

கொழும்பு, ஒக். 29

ஆட்சி அமைப்பதற்கு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மகிந்த தரப்பு குதிரைப் பேரத்தில் குதித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வளைத்துப் போடுவதற்கு க்டும் முயற்சிகளை மகிந்த அணியினர் மேற்கொண்டுள்ளனர். மகிந்த ராஜபக்சவின் சகோதரர் பசில் ராஜபக்சவே, இந்தப் பேரங்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ரவி கருணாநாயக்கவுடன் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து, மகிந்த தரப்பை ஆதரிப்பது அல்லது நடுநிலமை வகிப்பது என்ற அடிப்படையில் பேரம் பேசப்படுவதாகக் கூறப்படுகின்ற போதும், அது உறுதிப்படுத்தப்படவில்லை.

தற்போது வரையில் தமது தரப்புக்கு ஆதரவு வழங்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலைக்கு 60 கோடி ரூபா வரையில் பேரம் பேசப்படுவதாகக் கூறப்படுகின்றது. எதிர்வரும் நாள்களில் இந்தத் தொகை இன்னும் அதிகரிக்கலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (5,61)

## உடனடியாக...

கொழும்பு, ஒக். 29

மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதே எனது நோக்கம். மேலும் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள சமூக பொருளாதார அரசியல் நெருக்கடிகளுக்கு முடிவு கட்டுவதற்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பை மக்களுக்கு வழங்குவதற்காக நாடாளுமன்றத் தேர்தலையும் விரைவில் நடத்த எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாய ஆரம்பமும் வெறுப்புணர்வு அரசியலை நிராகரித்தலும் என்ற தலைப்பில் அறிக்கையை விடுத்துள்ளார்.


அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டு அரசிலிருந்து வெளியேறியதை தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் புதிய அரசை அமைக்கும் பொறுப்பு அரச தலைவரின் தோள்களில் சுமத்தப்பட்டது. புதிய அரசை அமைக்கும் நோக்கத்துடன் தலைமை அமைச்சர் பதவியை ஏற்குமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இலங்கை இன்று நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றது. மைத்திரியையும், கோத்தபாயவையும் கொலை செய்வதற்கான சதி முயற்சிகள் குறித்த தகவல்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன. இந்தச் சதி முயற்சியில் ஈடுபட்டவர்கள் தங்கள் நடவடிக்கைகளால் தங்களை அம்பலப்படுத்துகின்றனர். நாடு தொடர்ச்சியாக குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளது. பாதள உலகத்தவர்களின் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன.

நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இலங்கை ரூபாயின் பெறுமதி அச்சத்தை ஏற்படுத்தும் விதத்தில் வீழ்ச்சியடைகின்றது. அதிகரித்துக்கொண்டு செல்லும் வாழ்க்கைச் செலவீனங்களால் மக்கள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய வங்கி பிணை முறி மோசடி, வட்டி வீதத்தை இரட்டிப்பாக்கியுள்ளதால் வர்த்தக சமூகத்தினரும் சாதாரண பொது மக்களும் மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி தேசத்தின் பெறுமதி மிக்க சொத்துக்களையும் நிறுவனங்களையும் விற்கும் வேட்கையுடன் உள்ளது.

இது தேசிய குழப்பநிலை நிலவும் தருணம் என்பதையும் மக்கள் எங்கள் தலைமைத்துவத்தையும் பாதுகாப்பையும் எதிர்கொள்கின்றார்கள் என்பதையும் நான் அறிவேன். இதன் காரணமாக தலைமை அமைச்சர் பதவியை ஏற்குமாறு அரச தலைவர் விடுத்த அழைப்பை நான் ஏற்றுக்கொண்டேன். நாங்கள் வெறுப்புணர்வு நிலவும் அரசியலை கைவிட்டு அனைத்து மக்களினது மனித உரிமைகளையும் நீதித்துறையினது சுதந்திரத்தையும் பாதுகாக்கும் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்தும் இடைக்கால அரசை உருவாக்குவோம். இந்த முயற்சியில் எங்களுடன் இணையும் நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களிற்கும் நான் அழைப்புவிடுகின்றேன். இந்த மிக முக்கியமான முயற்சியில் அனைத்து சமூகங்களையும்மதங்களையும் இணையுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (5)

# உணவுப் பயணம்





நாம் உணவை அருந்தி அதை விழுங்கும்போது மூச்சுவிட முடிவதில்லை. ஏனெனில் எங்களுடைய சுவாச மண்டலம் சமிபாட்டு மண்டலத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. உண்மையில் நாம் அருந்தும் உணவும், இழுக்கும் மூச்சும் தொண்டைக் குழாய்வரை பயணம் செய்கின்றன. தொண்டைக் குழாய் என்பது வாய்க்கும் மூக்குக்கும் பின்னாக அமைந்துள்ள ஓர் அகலமான தசையாலான குழாயாகும்.


மூச்சுக்காற்றுக் குரல்வளை அல்லது ஒலிப்பெட்டியை அடைந்து மூச்சுக் குழாய் வழியாக நுரையீரலைச் சென்றடைய வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலே உணவானது உணவுக்குழாய் வழியாக இரைப்பைக்குச் செல்ல வேண்டும். ஆக, ஒரு வகையான கருவி இவை இரண்டும் கலந்துவிடமால் தடுப்பதற்கான பாதுகாவலாக அமைந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

உணவை அருந்தி அதை மென்று விழுங்கும் செயன்முறைகள் இடம் பெறும் போது தற்காலிகமாகக் காற்று வழிகளை மூடுவதால் சுவாசத்துக்கு இடையூறு விளைவிக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்திலே உணவானது வாயிலிருந்து முன்னோக்கி உணவுக் குழாய்க்கும் வயிற்றுக்கும் செலுத்தப்படுகிறது. ஒரு சிறு பருக்கை உணவு தப்பான வழியில் சென்றுவிட்டால் நுரையீரலானது இருமலுடன் உணவை வெளித் தள்ளும் முயற்சியை உடனே வெளிக்காட்டிவிடுகிறது. தவிர சிறிதளவான காற்று வயிற்றினுள் செல்லச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. உணவு அதிகமாகச் சென்றால் வயிற்றுப் பொருமலை அல்லது 'காற்றை' ஏற்படுத்தும்.

**உணவு வழியும் சுரப்பிகளும்**

- வாயறை
- முன் தொண்டை
- குரல்வளை
- மூச்சுக் குழாய்
- உணவுக்குழாய்
- உதரவிதானம்
- கல்லீரல்
- பித்தப்பை
- இரைப்பை
- கணையம்
- குறுக்குக் குடல்
- இறங்கு குடல்
- சிறுகுடல்
- குடல்வால்
- ஏறு குடல்
- முன்சிறு குடல்
- மலக்குடல்
- குதம் அல்லது மலவாய்




# அயனிகள்!

## தாவர இனப்பெருக்கத்தின் ஆக்கச் செயலிகள்

கடந்த பல ஆண்டுகளாக போர்த்துக்கலின் நிபுணர் குழு ஒன்று மகரந்தத் தாள்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவது யார் என்ற தேடலில் ஈடுபட்டிருந்தது. மகரந்தத் தண்டு வளர்வதை நிர்ணயிப்பது நீரில் உள்ள புரோட்டான் அயனிகளா அல்லது கல்சிய அயனிகளா என்ற கேள்விகளுள் மூழ்கியிருந்தனர். செயலுவகையுள் தவித்துப் போயிருந்தனர். அதன் செயற்பாட்டு மூலக்கூறுகள் கால்வாய் என்றும் அதன் ஆட்டம், செயற்பாடு போன்றவை எது என அறுதியிட்டுச் சொல்ல முடியாததிலும் குழப்பமான சூழல் இருந்தது.

ஆனாலும் போர்ச்சுகலின் லிஸ்பான் பல்கலையின் பன்னாட்டு ஆராய்ச்சிக் குழு இதைப் பற்றி 'ஜோஸ் பெயஜோ' என்பவரின் தலைமையில் ஆராய்ந்தது. முடிவில் மகரந்தத் தாள்களின் வளர்ச்சிக்கு கால்சியம் தான் காரணம் என அறிந்தனர். இவை 'குளுட்டமேட் வாங்கிகள்' என்ற வேதிப் பொருள் வாயிலாக தூண்டப்படுவதுடன் அரிதான அமினோ அமிலமாகச் சொல்லப்படும் 'னு சீரின்' என்பதன் மூலமாக உள்ளே நுழைகின்றன என்பதும் தெரிய வந்தள்ளது.


**மூலக்கூறுகள்**

'குளுட்டமேட் வாங்கிகள்' மற்றும் அமினோ அமிலம் 'னு சீரின்' என்ற இரண்டு வேதிப் பொருள்களும் தான் விலங்குகளின் மைய நரம்பு மண்டலத்தில் பல்வேறு அளவில் இரு கலங்களுக்கான தொடர்புகளை உருவாக்க மூலக்கூற்று அளவில் செயற்படுகின்றன. அதுமட்டுமல்லாது இவையே மூளையின் கற்றல் திறன், நினைவகம், பல வகையான நரம்பியல் சம்பந்தமான நோய்கள் போன்றவைகளிலும் தொடர்பு உள்ளவையாகக் கூறப்படுகிறது. அதே 'குளுட்டமேட் வாங்கிகளும்', 'னு சீரினு' உம் தான் தாவரங்களின் இனப்பெருக்கத்துக்கும் உதவுகின்றன என்ற ஆச்சரியமான தகவலை போர்த்துக்கலின் ஆய்வகக் குழு கண்டுபிடித்துள்ளது. இதனால் கடந்த 20 ஆண்டு காலமாக தாவரவியலில் தேடிக் கொண்டிருந்த இரண்டு புதிர்களுக்கான விடை காணலும் அறிந்துகொள்ளப் பட்டுள்ளது.

கலங்களின் வெளிச் சவ்வில் கல்சியம் கால்வாய்களின் மூலக்கூற்றுப் பணி என்ன என்பதும், தாவரங்களில் குளுட்டமேட் வாங்கி மரபணுக்களின் வேலை என்ன என்பதும்தான் அவை. இதன் மூலமாக மாதிரித் தாவரமான 'அரபிடோப்சிஸ்' இல் முதல் மரபணுப் பட்டியலும் அமைக்கப்பட்டுள்ளது.

**மகரந்தம்**

நகராத தாவரத்தின் இனப்பெருக்கம் கொஞ்சம் சிக்கலானது. இதன் மகரந்தத் துகள்கள்தான் ஆண் விந்தணுக்களுக்கு சமமானவை. இவற்றைப் பெண் உறுப்பான சூலக முடிக்குக் கொண்டு சென்றால்தான் மகரந்தச் சேர்க்கை நடந்து இனப்பெருக்கம் என்பது இடம்பெற முடியும். இப்போதைய கண்டுபிடிப்பின் மூலம் குளுட்டமேட் வாங்கிகள் சரியாகச் செயற்படாவிட்டால் மகரந்தத் துகள்களின் பகுதி மலட்டுத் தன்மைக்கு காரணமாகிவிடும் என்பதும் அறியப்பட்டுள்ளது. மேலும் 'னு சீரின்' தான் குளுட்டமேட் வாங்கிகளை தூண்டி கல்சியம் அயனிக் கால்வாயை மகரந்தத் தாள்களின் மேல் ஓட வைக்கிறது. 'னு சீரின்' சரியாகச் செயற்படவில்லையெனில் மகரந்தத் தாள் உருவாக்கத்தில் குறைபாடுகள் உண்டாகும்.



இந்தக் கண்டுபிடிப்புகளின் மூலமாக ஓர் உண்மை தெரியவந்துள்ளது. தாவர மற்றும் விலங்குகளின் வளர்ச்சியில் மரபணுக்களின் செயற்பாடு என்பது அண்ணளவாக ஒரே மாதிரியாகத்தான் பணி புரிகின்றன என்பதே அந்த உண்மை. அதைவிடவும் இன்றியமையாததான பரிணாமத்தின் வெளிப்பாடான அறிவியல் சாவியும் கண்டுகொள்ளல்களை அருமருந்தாக்கித் தந்துள்ளது எனலாம்.

# மயக்கம்

## உணர்ச்சி நீர்மம் கொடுக்கும் சமநிலையற்ற தாக்கம்

வட்டமாக அல்லது மிக வேகமாகச் சுற்றுபவன் சடுதியாக அந்தநிலையில் இருந்து விடுபடும் போது பொதுவாக தலைசுற்றி மயக்கம் ஏற்படும். காதின் உட்பகுதியிலுள்ள சமநிலையைக் கட்டுப்படுத்தும் 'உணர்ச்சி நீர்மம்' உடல் சுற்றுவது நின்றபிறகும் தொடர்ந்து சுற்றிக் கொண்டே இருக்கும். ஆகையால் சுற்றுப்புறப் பொருள்கள் இன்னும் சுற்றிக் கொண்டிருப்பதாக அல்லது ஓடிக்கொண்டிருப்பதாகத் தோன்றும். ஆயினும் சில விநாடிகளுக்குள் அந்த நீர்ம நெகிழ்பொருள் சமநிலைத்தன்மையை அடைந்துகொள்கிறது.

இந்த உணர்ச்சி 'கிறுகிறுப்பு' எனவும் அழைக்கப்படும். உயரத்திலிருந்து கொண்டு கீழே பார்ப்போருக்கும், கப்பலில் போகின்ற போது பொது வெளியைப் பார்ப்போருக்கும் இந்தக் கிறுகிறுப்பு உணர்வுகள் ஏற்படக்கூடும். உட்காதின் நெகிழ் நீர்மத்தின் செயல்நிலை காரணமாக ஏற்பட்ட நரம்பின் விளைவே தவிர பெரும்பாலும் உடல் சார்ந்த தன்மைகள் இதில் இல்லை என்றே கூறப்படுகிறது. உடலின் எட்டாவது கபால நரம்பின் ஒரு கிளையான 'வெஸ்டிபுல' நரம்பின் பாதிப்பாலும் தலைசுற்றல் ஏற்படும் எனச் சொல்லப்படுகிறது.

## அரசமைப்புக்கு...

கொழும்பு, ஒக். 29

சட்டநிபுணர்களின் ஆலோசனையைப் பெற்று அரசமைப்புக்கு அமைவாகவே, தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்தேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு அரசியலில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க தூக்கி எறியப்பட்டு, மகிந்த ராஜபக்ச அமர்த்தப்பட்டார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அதிரடி நடவடிக்கையால் கொழும்பு அரசியலில் பெரும் குழப்பம் நீடிக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில், தனது அதிரடி நகர்வுக்கு என்ன காரணம் என்பதை விளக்கும் நீண்ட உரையை நேற்று மாலை 5.30மணிக்கு நாட்டு மக்களுக்கு நிகழ்த்தினார் மைத்திரிபால.

அவரது உரையில் முக்கியமாக குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு.

2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி பொதுவேட்பாளராக நான் களமிறங்கிய போது இருந்த அச்சுறுத்தல், சவாலை விட மிகப் பயங்கரமான நிலையே கடந்த 26ஆம் திகதி இருந்தது. அப்படியொரு இக்கட்டான நிலமையிலேயே நான் மேற்படி தீர்மானத்தை எடுத்தேன்.

2015 ஆம் ஆண்டு எனது உயிரைப் பணயம் வைத்து அன்று பெற்றுக்கொண்ட அந்த அரசியல் வெற்றியை கொச்சைப்படுத்தும் வகையில் ஒழுக்கமிக்க அரசியலுக்கு ஒவ்வாத அரசியல் செயற்பாடுகளில் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரவேசித்தார்.

ரணில் விக்கிரமசிங்க பொதுவாகவே கூட்டுச் செயற்பாடற்ற, தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கும் மிகவும் முரட்டுத்தனமான பிடிவாதமிக்க முறையிலேயே அரசில் செயற்பட்டார். அவரின் அந்தச் செயற்பாடுகள் பெரிய அரசியல் நெருக்கடியை உருவாக்கியது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கைக்கும் எனது அரசியல் கொள்கைக்கும் இடையில் கொள்கை ரீதியிலான மோதல் ஏற்பட்டது. அது மாத்திரமன்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் பெரிய கலாசார வேறுபாடுகளையும் நான் கண்டேன். அவருக்கும் எனக்கும் இடையிலான இந்த அரசியல் கொள்கை ரீதியிலான வேறுபாடுகள், அரசியல் கலாசார ரீதியிலான வேறுபாடுகள், தனிநபர் சார்ந்த வேறுபாடுகள் ஆகிய அனைத்தும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியிலான நெருக்கடியை மிக மோசமாக்குவதற்கு காரணமாக அமைந்தன.

நல்லாட்சிக் கருப்பொருளை, இந்த அரசை உருவாக்கி மூன்று மாதங்கள் முடிவதற்கு முன்னரே சிதைத்து விட்டார்கள். மத்திய வங்கியின் மகா கொள்ளை நமது நாட்டை பெரிய *பொருளாதார பாதாளத்தில் தள்ளிவிட்டது.* மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் ரணில் விக்கிரமசிங்க பதற்றத்துடன் செயற்பட்டார்.

மத்திய வங்கியின் பணிக்குழாமை சந்திக்க நான் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருந்த போது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு ஓடி வந்து மிகுந்த பதற்றத்துடன் அவர் என்னிடம் கூறினார். மத்திய வங்கி எனது கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றது. அரசிதழ் ஊடாக எனது கட்டுப்பாட்டுக்கு கீழேயே இருக்கின்றது அதனால் நீங்கள் எதற்காக மத்திய வங்கிக்கு போக வேண்டும் என்று என்னிடம் வினவினார். அப்போது நான் அவரிடம் உங்களுக்கு அரசிதழ் மூலம் அந்த வங்கி கையளிக்கப்பட்டிருக்கின்றது என்பது உண்மை. ஆனால் நான் இந்த நாட்டின் அரச தலைவர் அல்லவா? எனக்கு அங்கு செல்வதற்கு உரிமை இருக்கின்றதல்லவா எனக் கூறினேன். அவ்வாறு கூறிவிட்டு இன்னும் சொற்ப நேரத்தில் மத்திய வங்கிக்கு செல்ல போகிறேன் எனக் கூறினேன். அத்தோடு அவர் எனது வீட்டை விட்டு வெளியேறினார்.

நான் மத்திய வங்கியை சென்றடைந்தபோது மத்திய வங்கி நிதி மோசடி காரணமாக விடுமுறையில் இருந்த மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் என்னை வெற்றிலை கொடுத்து வரவேற்க மத்திய வங்கி வாசலில் காத்திருந்தார். அப்போது அவர்கள் மிகவும் பதற்றத்துடன் நடந்துகொண்ட விதத்தையும்; பதற்றமடைந்திருந்த அவர்களது மனோ நிலையையும் அப்போது நான் தெளிவாகக் கண்டேன். அந்தச் சம்பவத்தினால் நாட்டில் பெரிய பொருளாதார நெருக்கடியும் அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டது. அதற்கு தீர்வு காணும் வகையிலும் மக்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்கும் வகையிலுமே ஆணைக்குழுவை நியமித்தேன். அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது, ஐக்கிய தேசியக் கட்சியினர் என்னைக் குறை கூறியவாறு ஏன் ஆணைக்குழுவை நியமித்தீர்கள் என்று என்னிடம் வினவினார்கள்.

நாட்டின் அரச தலைவரைக் கொலை செய்யும் சதித்திட்டம் பற்றிய தகவல்களை வெளியிட்ட ஒலிநாடா மீதான எந்தவிதமான தொழினுட்ப விசாரணையையும் மேற்கொள்ளாது அந்த ஒலிநாடா சந்தேகத்திற்குரியது எனக் கூறும் அளவுக்கு பொலிஸ்மா அதிபரின் அந்த கீழ்த்தரமான செயற்பாடு ஒரு பொலிஸ்மா அதிபருக்கு உகந்ததா என்று மதிப்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இந்தச் சதி பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் குற்றப்புலனாய்வு திணைக்களமும் புலனாய்வு பிரிவினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் அரசின் புலனாய்வு குழுக்களும் இதுவரைப் பெற்றுக்கொடுத்திருக்கின்ற தகவல்களின்படி இந்தச் சதித்திட்டம் மிகப் பாரதூரமானதாகவே இருக்கின்றது. நாட்டு மக்களுக்கு இதுவரை அறியக் கிடைக்காத பெருமளவு தகவல்கள் இது தொடர்பில் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றிற்கு பின்னால் என்னைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் பற்றிய மிக முக்கியமான தகவல்கள் வெளிவந்திருக்கும் நிலையில் என் முன் எஞ்சியிருந்த ஒரே தீர்வு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை அழைத்து அவரை தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்திப் புதிய அரசை அமைப்பது மாத்திரமே ஆகும். புதிய அரசுடன் இணைந்துகொள்ளுமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற மதிப்பிற்குரிய 225 அங்கத்தவர்களுக்கும் வெளிப்படையாக நான் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (5)

**(அவரது முழுமையான உரை நாளை வெளிவரும்)**

## நாடாளுமன்றத்தைக்...

கொழும்பு, ஒக். 29

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் சபாநாயகருக்கு அவசர கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அரசமைப்பின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டு, ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய நாடாளுமன்றத்தின் மேலாதிக்கத்தை அங்கீகாரித்து சட்டங்களுக்கு அமைவாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு உங்களிடம் கோருகிறேன். அதன் சட்டபூர்வமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த இது உதவும், என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார். (5,61)

## பெரும்பான்மையை...

கொழும்பு, ஒக். 29

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை நம்பிக்கையைப் பெற்றுக்கொண்ட உறுப்பினர் உறுதி செய்யப்படும் வரை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் சிறப்புரிமைகள் மற்றும் அவருக்கான வரப்பிரசாதங்களை பாதுகாக்குமாறு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்றுக் காலை அவசர கடிதம் அனுப்பியுள்ளார். இந்தக் கடிதத்தின் பிரதியை பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மற்றும் பொதுச் செயலர் ஆகியோரின் ஒப்பத்துடன், சபாநாயகருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள நபராக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார். அரசமைப்பின் 42(4) உறுப்புரையின் பிரகாரம் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவே நியமிக்கப்பட்டுள்ளார். தலைமை அமைச்சராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கான சகல சிறப்புரிமைகளையும், வரப்பிரசாதங்களையும் சபாநாயகர் என்ற வகையில் தாங்கள் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்றுள்ளது. முன்னதாக ரணிலின் பாதுகாப்பு மற்றும் வாகனங்கள் என்பன மீளப் பெறப்பட்டிருந்த நிலையிலேயே, ஐக்கிய தேசியக் கட்சியால் மேற்படி கடிதம் எழுதப்பட்டிருந்தது.

இந்த கடிதத்தை அடிப்படையாக வைத்து, சபாநாயகர் கரு, அரச தலைவர் மைத்திரிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டில் அரசியல் ரீதியான நெருக்கடியான நிலமைகள் ஏற்பட்டுள்ளன. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை நம்பிக்கையைப் பெற்றுக் கொண்ட உறுப்பினர் உறுதி செய்யப்படும் வரை ரணில் விக்கிரமசிங்கவின் சிறப்புரிமைகள் மற்றும் அவருக்கான வரப்பிரசாதங்களை பாதுகாக்குமாறு வேண்டுகோள் விடுக்கும் வகையிலான கடிதமொன்று எனக்கு அலரிமாளிகையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளை ஜனநாயக ரீதியிலானதும் நியாயமானதுமான கோரிக்கையாகவே நான் கருதுகின்றேன். நல்லாட்சிக்காக மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்ட அரசு என்ற வகையில் இந்த வேண்டுகோளை உங்களின் கவனத்துக்கு கொண்டு வருவதற்கு தலைப்பட்டுள்ளேன்.

அரச ஊடகங்களைச் சிலர் தாக்குவதற்கு முயற்சிகள் எடுத்தமை தொடர்பான விடயங்கள் பதிவாகியுள்ளன. அரச ஊடகங்களில் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படும், பலவந்த தலையீட்டினால் நாட்டுக்குள் அமைதி சீர்குலைந்துள்ளது. சில நாடுகள் ஏற்கனவே தமது மக்களை இலங்கைக்கு செல்வதைத் தவிர்க்குமாறு எச்சரிக்கை விடுத்துள்ளமையானது நமது நாட்டின் தற்போதைய நிலமையின் பாரதூரத் தன்மையை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

நாட்டில் அரசியல் ரீதியான நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்ற தருணத்தில் நாடாளுமன்றத்தை எதிர்வரும் 16ஆம் திகதி வரை 20 நாள்கள் தொடர்ச்சியாக ஒத்திவைக்குமாறு பணித்திருப்பதன் ஊடாக, நாட்டுக்கு மேலும் நெருக்கடியான நிலைமைகள் ஏற்படுவதற்கும் பாதகமான விடயங்கள் நடப்பதற்கும் இடமளிக்க வேண்டாம்.

ஜனநாயக சம்பிரதாயத்துக்கு அமைவாக நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதாயின் சபாநாயகருக்கு அறிவிப்பதோடு அவரின் அறிவுறுத்தல்களையும் கவனத்தில் கொண்டே ஒத்திவைத்திருக்க வேண்டும். இந்த விடயங்களை சபாநாயகர் என்ற அடிப்படையில் தங்களின் கவனத்துக்கு கொண்டு வரவேண்டியது எனது கடமையாகின்றது - என்றுள்ளது. (5,61)

## மகிந்தவின்...

யாழ்ப்பாணம், ஒக். 29

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி யாரும் எதிர்பாராதது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாருடனும் கலந்தாலோசிக்காது இந்த முடிவை எடுத்துள்ளார். போர்க்காலத்தில் யார் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனரோ, அதற்குக் காரணமாக இருந்தனரோ அவர்களை ஆட்சிப் பீடம் ஏற்றியுள்ளார்.

கடந்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயற்படுகின்றார், குடும்ப ஆட்சியில் நிதி மோசடி செய்துள்ளார் என்று அடுக்கடுக்காகக் குற்றங்களைச் சுமத்தி, மக்களை அதிலிருந்து காப்பாற்றுவேன் என்று உறுதியளித்திருந்தார் மைத்திரிபால சிறிசேன. தற்போது அவர்களிடமே நாட்டின் அதிகாரத்தைக் கொடுத்துள்ளார். இது நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் விருப்பத்துக்கும் விரோதமான செயற்பாடு.

அரசியல் தீர்வு திட்டம் நீண்ட இழுபறிக்குப் பின்னர் எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றுக்கு வரவிருந்த நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இது தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. கடந்த காலங்களில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் நிலைமை காணப்பட்டது. அதனால் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் நம்பிக்கை இருந்தது. இப்போது அனைத்தும் தலைகீழாக மாறியுள்ளது. தமிழர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

தற்போதைய பிரச்சினை நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்க்கப்பட வேண்டும். இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் சீனா மட்டுமே உள்ளது போன்று தெரிகின்றது. ஏனெனில் சீனா மட்டுமே மகிந்த ராஜபக்சவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளது. ஏனைய மேற்குலக நாடுகளும், இந்தியாவும் அரசமைப்புக்கு எதிராகச் செயற்பட வேண்டாம் என்று வலியுறுத்தி வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் இன்னமும் தீர்க்கமான முடிவை எடுக்கவில்லை - என்றார்.

ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுமாறு மகிந்த ராஜபக்சவைக் கோருவது சாத்தியமான விடயமா என்று கேட்டபோது அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதிலளிக்க மறுத்துவிட்டார். (ற-8)

## வளைத்துப்போடுவதில்...

கொழும்பு, ஒக். 29

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு இரு தரப்பும் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இரண்டு தரப்புக்களும் தொடர்ச்சியாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றன.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர ஆகியோர், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை நேற்று நேரில் சென்று சந்தித்துள்ளனர். இதன்போது, நீங்கள் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஆராய்ந்து வருவதாகவும், கூட்டமைப்பின் ஆதரவு தங்களுக்கு அவசியம் என்றும் தெரிவித்துள்ளனர். இதேவேளை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அலைபேசி ஊடாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் நேற்றுப் பேசியுள்ளார்.


*மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்று*வதற்கு உத்தரவாதம் வழங்கினால் ஆதரவு வழங்கத் தயார் என்று இரு தரப்பினரிடமும் சம்பந்தன் கூறியுள்ளார். (5)

## கேபிளால்...

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை நடந்துள்ளது. யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியைச் சேர்ந்த இ.லீலாவதி (வயது55) என்பவரே உயிரிழந்தவராவார். கேபிள் ரீவிக்கு இணைக்க முயன்றபோது மின்சாரம் தாக்கியது என்று விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனித்து வசித்த பெண் காலை 10 மணியான போதும் வீட்டில் இருந்து வெளியேவரவில்லை. அயலவர்கள் அவரைத் தேடியுள்ளனர். வீட்டின் கதவுகள் உட்புறமாகப் பூட்டிருந்தமையை அவதானித்து யன்னல் வழியாகப் பார்த்துள்ளனர்.

தொலைக்காட்சி கேபிளை பிடித்தபடி லீலாவதி நிலத்தில் கிடப்பதை அவதானித்துப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். பொலிஸார் மதியம் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது. இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பிரேம்குமார் மேற்கொண்டார். (ற-8,105,106)



# யாழ். இந்து மகளிரின் பஜீனாவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 29
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கலில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.பஜீனா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
தேசியமட்ட பளுதூக்கல் தொடர் கேகாலை டிப்பிட்டிய இராஜகிரி மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது.
18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கலில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.பஜீனா 95 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)



# கொக்குவில் இந்து. றோயலை வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 29
இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கொழும்பு றோயல் கல்லூரியை வென்றது.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டத் தொடர் கொழும்பு தேஸ்ரன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து றோயல் கல்லூரி அணி மோதியது.
ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 56:35 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-422)

# தேசியமட்ட தட்டெறிதலில் வடக்குக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 29
மாத்தறையில் நடைபெற்று வரும் 30ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் பெண்கள் பிரிவு தட்டெறிதலில் வடக்கு மாகாணத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.




கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சுஜிவா 28.64 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)



# வேம்படி மகளிர் கல்லூரியின் டிலோஜினிக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 29
இலங்கைப் பாடசாலைகள் பளுதூக்கல் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட பளுதூக்கல் தொடரில் வேம்படி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.டிலோஜினி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
கேகாலை டிப்பிட்டிய இராஜகிரி மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. 58 கிலோ எடைப் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.டிலோஜினி 128 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)




# ஆசிகாவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஒக. 29
இலங்கைப் பாடசாலைகள் பளுதூக்கல் சம்மேளனம் நடத்திய தேசியமட்டப் பளுதூக்கலில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த விஜயபாஸ்கர் ஆசிகா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி கேகாலை டிப்பிட்டிய இராஜகிரி மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. இதில் 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான 63 கிலோ எடைப் பிரிவில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த விஜயபாஸ்கர் ஆசிகா 176 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)



# தேசியமட்டப் பளுதூக்கல் தொடரில் தெரேசாள் மகளிருக்குப் பதக்கங்கள்

## வரலாற்று அடைவாகவும் பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 29
இலங்கைப் பாடசாலைகள் பளுதூக்கல் சங்கம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றியது.
கேகாலை டிப்பிட்டிய இராஜகிரிஜ மகா வித்தியாலய மைதானத்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது.
16 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான 63 கிலோ எடைப் பிரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.நிதுசா தங்கப் பதக்கத்தையும் அதே எடைப் பிரிவில் பி.தாட்சாயினி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
58 கிலோ எடைப் பிரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த கோல்டாமேரி நான்காமிடத்தையும் பெற்றனர்.
குறித்த பாடசாலையின் வரலாற்றில் தேசிய மட்டத்தில் பதக்கத்தை கைப்பற்றியது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)




# சென். பற்றிக்ஸ் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 29
பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்களுக்கான அரையிறுதியாட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# பெண்களுக்கான தேசிய மட்ட 5,000 மீற்றரில் வடக்கு வென்றது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 29
தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வடமாகாணத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
30ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா மாத்தறையில் நடைபெற்று வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டி நடைபெற்றது. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த டென்சிகா 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2 மணித்தியாலயங்கள் 29 நிமிடங்கள் 90 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)



# யங்ஹென்றிஸ் மகுடம் சூடியது



யாழ்ப்பாணம், ஒக். 29
பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

# ஆஸிக்கு எதிரான இந்தியா அறிவிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் மாலை அறிவிக்கப்பட்டது.
இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக தற்போது விளையாடி வருகிறது. இந்தத் தொடரை முடித்துக்கொண்டு அந்த அணி ஆஸ்திரேலியா செல்கிறது. அங்கு நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியாவுடன் மோதுகிறது இந்திய அணி.
டிசெம்பர் 6ஆம் திகதிதான் ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கு இடையிலான தொடர் ஆரம்பிக்கிறது. எனினும் இந்தத் தொடர் தொடர்பான கருத்துப் பகிர்வுகள் கடந்த சில நாள்களாக உச்சம் தொட்டிருந்தன. அவற்றை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இந்திய அணி சுமார் 40 நாள்களுக்கு முன்னதாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.
இங்கிலாந்துக்கு எதிரான தொடரின்போது தடுமாற்றம்காட்டி அணியில் இருந்து நீக்கப்பட்ட முரளி விஜய் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இடம்பிடித்த டினேஸ் கார்த்திக் நீக்கப்பட்டுள்ளார். பார்திவ் பட்டேலுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் சதம் கண்டவரான பிருத்வி ஷா ஆஸ்திரேலியாவுக்கு எதிராகக் களமிறக்கப்படவுள்ளார்.
இந்திய அணி விவரம் - கோக்லி (தலைவர்), ரகானே (உப தலைவர்), ரோகித், புஜாரா, ராகுல், ஷா, முரளி விஜய், விஹாரி, பன்ட், பார்திவ் பட்டேல், அஸ்வின், ஜடேயா, குல்தீப் யாதவ், சமி, இசாந் சர்மா, உமேஸ் யாதவ், பும்ரா, புவனேஸ்வர் குமார். (ம)


# போராடி வென்றது சென். மேரிஸ் அணி

யாழ்ப்பாணம், ஒக். 29
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் - நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கூரே விளையாட்டுக் கழக அணி மோதியது. முதற்பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார் ஜெறிங்ரன். 1:0 என்று சென். மேரிஸின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. இதையடுத்து 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நாவாந்துறை சென். மேரிஸ் அணி. (ம)



# கோக்லி - ரோகித்தின் அனுமதிபெற்றே ரி20 தொடர்களில் நீக்கப்பட்டார் டோனி

## இந்தியக் கிரிக்கெட்டில் இன்னொரு அதிர்வலை



மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ரி20 தொடர்களில் இருந்து டோனிக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ள நிலையில், அவர் அணித் தலைவர் கோக்லி, உபதலைவர் ரோகித் ஆகியோரின் அனுமதிபெற்றே நீக்கப்பட்டார் என்றதொரு தகவல் தற்போது வெளிவந்துள்ளது.

டோனியின் நீக்கம் குறித்து தேர்வுக்குழுத் தலைவர் எம்.எஸ்.கே.பிரசாத்தை அனைவரும் வசை பாடி வருகின்றனர். இந்த நிலையில் அணித் தேர்வின் போது தலைவர் விராட் கோக்லி, துணைத் தலைவர் ரோகித் சர்மா ஆகியோர் முழு சம்மதம் தெரிவித்த பின்னரே டோனியின் நீக்கம் நிகழ்ந்துள்ளது என்று தெரியவந்துள்ளது.

குறுகிய வடிவிலான ஆட்டத்தில் டோனியின் நீக்கம் அவரது ரசிகர்களைக் கவலையடைச் செய்துள்ள போதிலும், தேர்வுக் குழுவினர் இந்தத் துணிச்சலான முடிவை 2020ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் ரி20 உலகக் கிண்ணத் தொடரைக் கருத்தில் கொண்டே எடுத்துள்ளனர் என்று சில முன்னாள் வீரர்களும், கிரிக்கெட் விமர்சகர்களும் கருதுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முக்கிய அதிகாரியொருவரும் கருத்துப் பரிமாறியுள்ளார். "இங்கிலாந்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலகக்கிண்ணத் தொடர் முடிவடைந்ததும் டோனி, தனது கிரிக்கெட் வாழ்க்கை குறித்து முக்கிய முடிவை எடுக்கக்கூடும். இதனால் 2020ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் ரி20 உலகக் கிண்ணத் தொடரில் டோனி பங்கேற்க வாய்ப்பில்லை. எனவே ரி20 ஆட்டத்துக்கான அணியில் தனது இடத்தை டோனி தக்கவைத்துக் கொள்வதில் எந்தவித அர்த்தமும் இல்லை. தேர்வுக்குழுவினரும், இந்திய அணிநிர்வாகமும் இந்த விடயத்தில் நல்ல கருத்துக்களை கொண்டிருந்தனர். அணித் தேர்வின் போது விராட் கோக்லி, ரோகித் சர்மா ஆகியோர் உடனிருந்தனர். அவர்களது அனுமதி இல்லாமலா, டோனி விடயத்தில் தேர்வுக் குழுவினர் இதுபோன்ற ஒரு முடிவை எடுத்திருக்க முடியும்" என்று குறிப்பிட்டுள்ளார் அந்த முக்கியஸ்தர்.

ஆக, பன்னாட்டு ரி20 ஆட்டங்களில் டோனி இனிமேல் அணிக்குத் திரும்புவாரா என்பது சற்று சந்தேகம்தான். ஏனெனில் எதிர்கால திட்டத்தைத் கருத்தில் கொண்டு டோனி இல்லாத இந்த இரு தொடர்களிலும் அடுத்த இலக்குக் காப்பாளரை நிலைப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் தேர்வுக்குழுவினர் கவனம் செலுத்தக்கூடும்.





தற்போதைக்கு டோனிக்கு மாற்றாச ரிசப் பண்ட் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மற்றொரு இலக்குக் காப்பாளராக டினேஷ் கார்த்திக்கும் அணியில் உள்ளார். அணியில் தங்களது இடத்தை தக்கவைத்துக் கொள்வதில் இவர்களுக்குள் கடும் போட்டி நிலவக்கூடும். இவர்கள் இருவரும் எதிர்பார்ப்பை நிறைவேற்றத் தவறினால் மட்டுமே டோனியை மீண்டும் அணிக்குள் கொண்டுவருவது குறித்து தேர்வுக்குழுவினர் ஆலோசிக்கும் நிலைக்குத் தள்ளப்படக்கூடும்.

(ம)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இந்த வருடமே இறுதி வருடம்
இன்னும் 3 நாட்களே உள்ளன!
கடைசி நேரத்தில் மிக நம்பிக்கையுடன் வவுனியாவில் இருந்து வந்து மிக நீண்ட வரிசையில் காத்திருந்து பதிவு செய்தேன். எனது நம்பிக்கை வீண் போகவில்லை. எனது அமெரிக்க விசா விற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

சுபராம்
V2 TRAVELS
0768226243

## சென். ஜேம்ஸுக்கு வெண்கலம்




யாழ்ப்பாணம், ஒக். 29

இலங்கைப் பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய பாடசாலைகளுக்குஇடையிலான தேசியமட்ட பளுதூக்கலில் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த த.அபிஷேக் வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

கேகாலை டிப்பிட்டிய இராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 85 கிலோ எடைப் பிரிவில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த த.அபிஷேக் 152 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

(ம-422)

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
இன்னும் 8 நாள்கள் மட்டுமே உள்ளன. 2020 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில நாள்கள் மட்டுமே உள்ளன. உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.

திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd 321, K.K.S. Road, Jaffna.
(முட்டாஸ் கடை சந்திக்கு அருகில்) தொ.பே. இல : 077 755 4528

## ஹற்றிக் சதம் விளாசிய முதல் இந்தியர் கோக்லி

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் ஒரு நாள் ஆட்டங்களில் ஹற்றிக் சதம் விளாசிய முதல் இந்தியர் என்ற சாதனையை நிலை நாட்டினார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. மூன்று ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. மூன்றிலும் இந்திய அணியின் தலைவர் கோக்லி சதம் கடந்தார். 140, 157, 107 ஓட்டங்களை அவர் விளாசினார். இதையடுத்து தொடர்ச்சியாக மூன்று சதங்களை விளாசிய இந்தியர் என்ற சாதனைக்குச் சொந்தக்காரர் ஆனார் கோக்லி.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்கக்கார தொடர்ச்சியாக 4 சதங்கள் விளாசியமையே சாதனையாகக் கருதப்படுகிறது. பாகிஸ்தானின் அப்பாஸ், அன்வர், அசாம் தென்னாபிரிக்காவின் கிப்ஸ், வில்லியர்ஸ், குயின்டன் டி ஹொக், நியூசிலாந்தின் ரெய்லர் இங்கிலாந்தின் பரிஸ்ரெளவ் ஆகியோர் ஹற்றிக் சதங்களைப் பதிவுசெய்திருந்த நிலையில் அந்தப் பட்டியலில் தற்போது கோக்லியும் இணைந்தார்.

(ம)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.